24
பக்கங்கள்

யாழ். 20/=
வன்னி 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 324 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 30, வியாழன் 16.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

அதிரடி வேலைவாய்ப்புகள்

கட்டார் நாட்டின் Hamad புதிய சர்வதேச விமான நிலையத்தில் 40இற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக்கள் நாளைய உதயன் பத்திரிகையை பார்வையிடவும்;





## “இனிக் கடவுள்தான் கண்திறக்க வேண்டும்”

### பிரிட்டன் பிரதித் தூதுவரிடம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலைய மக்கள் கண்ணீர்

யாழ்ப்பாணம், ஒக். 16

“எல்லோரிடமும் சொல்லிப் பார்த்து விட்டோம். எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. இனி கடவுள்தான் பார்க்க வேண்டும்” இவ்வாறு சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்துக்குச் சென்ற பிரிட்டனின் பிரதித் தூதுவரிடம் நலன்புரி நிலைய மக்கள் விரக்தியுடன் தெரிவித்தனர்.

“அவ்வளவு காணியும் ஒராளுக்கு வேணும் என்டா, நாங்கள் இத்தினை பேர் இருக்கிறதுக்கு எவ்வளவு காணி வேணும். நாங்கள்தான் கட்டையில போகப் போறம். எங்கட பிள்ளை

22 ஆம் பக்கம் பார்க்க

## “நிலைமைகளை நேரில் பார்த்தேன்”

யாழ்ப்பாணம், ஒக். 16

நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்து 24 வருடங்களாக வாழும் வலி.வடக்கு மக்களின் சவால்களை நேரடியாக அறிந்து கொண்டேன் என்று பிரிட்டன் பிரதித் தூதுவர் லோறா டேவிட்ஸ் தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# காணாமற்போனோர் குறித்த 14 ஆயிரம் முறைப்பாடுகள் வெளிவிவகார அமைச்சிடம்

### காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளுக்காக கையளித்தது

யாழ்ப்பாணம், ஒக். 16

இலங்கையில்காணாமற்போனவர்கள் தொடர்பில் வெளிநாட்டுத் தூதரகங்களில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக, வெளிவிவகார அமைச்சிடம் 14 ஆயிரம் முறைப்பாடுகளைகாணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும்ஜனாதிபதிஆணைக்குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கையளித்துள்ளது.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இதுவரையில் 19 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 5 ஆயிரம் முறைப்பாடுகள் படையினர் தொடர்பிலானது. அவை தவிர்ந்த எஞ்சிய 14 ஆயிரம் முறைப்பாடுகளே வெளிவிவகார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு தமக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி

19 ஆம் பக்கம் பார்க்க

## வேலையின்மை, வறுமை யாழ்.மாவட்டத்தில் அதிகம்

யாழ்ப்பாணம், ஒக். 16

தேசிய மட்டத்துடன் ஒப்பிடுகையில் யாழ்.மாவட்டத்தின் வேலையின்மை மற்றும் வறுமை வீதம் என்பன அதிகமாக உள்ளது என்று யாழ். மாவட்டச் செயலக புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், யாழ்.மாவட்டம் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வு அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு வேலையின்மை தேசிய ரீதியில் 7.2 சதவீதமாக காணப்பட்ட அதேவேளை, யாழ்.மாவட்டத்தில் 8.3 சதவீதமாக காணப்பட்டது. கடந்த 2013 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் 4.4 சதவீதமாக வேலையின்மை காணப்பட்டது. ஆனால் யாழ்.

19 ஆம் பக்கம் பார்க்க

## எல்லோரையும் எப்போதும் ஏமாற்றுவதற்கு முடியாது

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சாட்டை

யாழ்ப்பாணம், ஒக். 16

இலங்கையில் தொடர்ந்து வந்த அரசுகள் எல்லாவற்றையும் முட்டாள்கள் ஆக்கி அவற்றில் அங்கம் வகித்து தனக்கெதிராக தென்னிந்தியாவில் விடுக்கப்பட்ட பகிரங்க பிடிவிறாந்தில் இருந்து இது வரையில் தப்பி இருந்து வருவது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கெட்டித் தனத்தைக் காட்டுகிறது என்று தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர், சிலரை எக்காலமும் ஏமாற்றலாம். பலரை ஒரு சில தருணங்களில் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது என்பதை அவர் அறிந்து வைத்திருந்தால் நல்லது - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொண்டமனாற்றில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே வடக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு வரும் வெளிநாட்டவரால் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம்

### அதனால்தான் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டுமாம் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்குக்கு வரும் வெளிநாட்டவர்கள் சிலர், தேசிய பாதுகாப்புக்கு குந்தகம்விளைவிக்கும் வகையில் செயற்படுகின்றனர். அதனாலேயே, வடக்குக்குச் செல்லும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்

22 ஆம் பக்கம் பார்க்க



நம்பிக்கை தரும் நரேந்திர மோடி

பக்கம் 12

## ராஜபக்ஷக்களிடமிருந்து வைக்கோலை காவல் செய்கின்ற நாய்களே நாங்கள்

### ஜனாதிபதியின் கருத்துக்கு வடக்கு முதலமைச்சர் காட்டமாகப் பதில்



யாழ்ப்பாணம், ஒக். 16

“வைக்கோல் பட்டடை என்று குறிப்பிட்டது எங்கள் வடக்கு மாகாண மக்களை. வடக்கு மாகாண சபையை நாய் என்று கூறியுள்ளார். எங்கள் வைக்கோல் பட்டடையின் ஒரு பகுதியை ஒரு சகோதரர் தீ வைத்துப் பொசுக்கியதால் தான் ஜெனிவாவில் விசாரணை நடக்கின்றது. மற்றைய சகோதரர் வைக்கோல் பட்டடையைப் பராமரிப்போம் - பத்தும், இருபதும், முப்பதும் தாருங்கள் என்று கேட்டு வருகின்றார். இந்த நிலையில் நாங்கள் நாயாக இருந்து வைக்கோல் பட்டடையின் நலம் காக்காது விட்டால் நமக்காக ஜனாதிபதியா அல்லது அவரின் குடும்பத்தாரா நன்மை செய்யப் போகின்றார்கள்? நாயாக உழைக்கப் போகின்றார்கள்?”- இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

“ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு நிறையவே தர வேண்டியுள்ளது. ஆனால் அவர் தரு

19 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன்துறை வெளிச்சவீடு கோத்தாவால் திறந்து வைப்பு



யாழ்ப்பாணம், ஒக். 16

உயர் பாதுகாப்பு வலயத்துள் உள்ள காங்கேசன்துறை வெளிச்ச வீட்டை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# பஸிலையும், நாமலையும் ஒரே மேடைக்கு அழைத்துக் காட்டுங்கள்

## ஆளும் கட்சியினருக்கு சவால் விட்டார் ரவி கருணாநாயக்க எம்.பி.



கொழும்பு, ஒக்.16
ஐக்கிய தேசியக் கட்சியின் ஐக்கியம் குறித்து விமர்சனங்களை முன்வைக்கும் ஆளும் கட்சியினர், முடிந்தால் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவையும், நாமல் ராஜபக்ஷவையும் ஒரே மேடைக்கு அழைத்து வாருங்கள் பார்க்கலாம் என்று சவால் விடுத்துள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க. நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த சவாலை விடுத்துள்ளார்.

அங்கு அவர் உரையாற்றும்போது, "ஐக்கிய தேசியக் கட்சி ஐக்கியமாகவும் வலுவாகவும் எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது."- என்று குறிப்பிட்டார். அதன் போது குறுக்கிட்ட ஆளும் கட்சியின் உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக்கட்சியின் ஒற்றுமை குறித்து விமர்சித்தனர்.

தொடர்ந்தும் பேசிய கருணாநாயக்க, "உங்களால் நாமல் ராஜபக்ஷவையும் பசில் ராஜபக்ஷவையும் ஒரே மேடைக்கு கொண்டு வர முடியுமா?" என ஆளும் கட்சியினரை பார்த்து கேள்வி எழுப்பினார்.

அத்துடன் அனைவரையும் ஒன்றிணைத்து, ராஜபக்ஷ அரசை எப்படி தோற்கடிப்பது என்பதை ஐக்கிய தேசியக் கட்சி செய்து காட்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (ற)

## வவுனியாவில் சடலம் மீட்பு




வவுனியா, ஒக்.16
வவுனியா, முதலாம் குறுக்குத்தெருவில் தனியார் விடுதியில் ஒன்றின் கழிப்பறையில் இருந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா, சிதம்பரபுரத்தைச் சேர்ந்த பொன்னுச்சாமி மனோகரன் (வயது-33) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

"விடுதியில் தங்கியிருந்த நண்பரை பார்க்க குறித்த நபர் அடிக்கடி தமது விடுதிக்கு வந்து சென்றார் என்றும், சம்பவம் நடைபெற்ற இன்றும் நண்பரைப் பார்க்க அவர் வந்திருந்தார் எனவும், வழக்கம் போன்று அன்று முற்பகல் கழிப்பறை சுத்தம் செய்யப்பட்ட சமயம் குறித்த நபர் அங்கு விழுந்து கிடந்தார்" என்று விடுதியின் சுத்திகரிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-421)



வெளிநாடுகளைச் சேர்ந்த இராணுவப்பயிற்சி மாணவ மாணவிகள் குழு ஒன்று நேற்றுமுன்தினம் தேசிய மாணவர் படையின் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.எச்.ஏ. ஹேரத்துடன் கடற்படை தலைமையகத்துக்கு பயணம் செய்துள்ளது. இந்த வெளிநாட்டு இராணுவப்பயிற்சி மாணவ மாணவிகள் குழுவை கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன வரவேற்றார். இலங்கைக் கடற்படை செயற்பாடுகள் குறித்தும் அவர்களுக்கு இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

## வாள்களுடன் இருவர் சுன்னாகத்தில் கைது

வலி.வடக்கு, ஒக்.16
சந்தேகத்துக்கு இடமான முறையில் வாள்களுடன் நடமாடிய இளைஞர்கள் இருவர் நேற்றுமுன்தினம் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மல்லாகம் நீதிமன்றப் பகுதியில் குறித்த நபர்கள் இரவு வேளை வாளுடன் நடமாடுகின்றனர் என்று பொலிஸாருக்கு பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரை யும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களிடம் இருந்து சுமார் மூன்றடி நீளமான வாள் கைப்பற்றப்பட்டுள்ளது. அளவெட்டி பகுதியைச் சோந்த குறித்த சந்தேக நபாகள் இருவரும் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-86)

## விபத்துகள்

தென்மராட்சி

### கூலர்-ஹன்ரர் விபத்தில் இருவர் காயம்



வேகக்கட்டுப்பாட்டை இழந்த கூலர் வாகனம் முன்னால் சென்றுகொண்டிருந்த ஹன்ரர் வாகனத்தில் மோதியதில், அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் கொடிகாமம் அ.த.க.பாடசாலை முன்பாக ஏ-9 வீதியில் நடந்துள்ளது. காயமடைந்தவர்கள் கொடிகாமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். தொண்டமானாறு சின்னமலையைச்சேர்ந்த இளையதம்பி பாலகுரு (வயது-65), கரவெட்டி கரணவாய் தெற்கு அண்ணா சிலையடியைச் சேர்ந்த மாணிக்கம் மாசிலாமணி ( வயது-57 ) ஆகியோரே காயமடைந்துள்ளனர். (ற-9)

கல்முனை

### மின்சாரம் தாக்கி ஒருவர் சாவு

மரத்தில் ஏறி மாங்காய் பிடுங்க முற்பட்ட ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கல்முனை மாதவன் வீதியில் நேற்றுக் காலை நடந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் நல்லதம்பி-ஜேசுதாஸ் (வயது-64) என்பவரே உயிரிழந்துள்ளார். மாங்காய் பிடுங்குவதற்காக அவர் வைத்திருந்த இரும்புக்கம்பி அதியுயர் மின்சாரக் கம்பியுடன் தொடுகையுற்றதால் மின்சாரத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார். இவர் கூலி வேலை செய்பவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



கைதடி

### தீ விபத்தில் பொருள்கள் நாசம்

கைதடி வடக்கில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இரவு 9 மணியளவில் கடை பூட்டப்பட்டிருந்த நிலையில், இரவு 10.30 மணியளவில் வர்த்தக நிலையத்துக்கு அருகாமையில் உள்ள வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் தொடர் வெடிச் சத்தம் கேட்டு விழித்தெழுந்து பார்த்த போது வர்த்தக நிலையம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது என்றும், பொதுமக்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. அதுகுறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-288)

சுன்னாகம்

### சவள் வீழ்ந்து இளைஞர் காயம்

நேற்றுமுன்தினம் மதியம் 13ஆம் திகதி மு.ப.11 மணியளவில் மேல்மாடியில் நின்று கொங்கிறீற் கலவையை குழைத்துக் கொண்டிருந்த போது கை நழுவிய சவள் கீழே நின்றுவேலை செய்து கொண்டிருந்தவரின் தலையைப் பதம் பார்த்துள்ளது. சுன்னாகம் சபாபதிப் பிள்ளை நலன்புரி நிலையத்தில் வசிக்கும் பூபாலச் சந்திரன் லஜின்ஜன் (வயது-19) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-36)

## யாழ்ப்பாணம் வந்தது முதலாவது தபால் ரயில்

கொழும்பு, ஒக்.16
24 ஆண்டுகளுக்குப் பின்னர் முதலாவது தபால் ரயில் நேற்றுப் புதன்கிழமை காலை 7.25 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தை வந்தடைந்தது.


முதலாவது தபால் ரயிலை வரவேற்கும் விதத்தில் வரவேற்பு நிகழ்வு மற்றும் தபால் ஊர்வலம் என்பவற்றை யாழ்.பிரதம தபால் நிலையத்தினர் நடத்தியிருந்தனர். கொழும்பிலிருந்து தபால் ரயிலில் வந்த தபால் பொதிகளை பொறுப்பேற்ற இலங்கை தபால்மா அதிபர் ரோஹண அபேவர்த்தன, அவற்றை தபால் பொதி சுமப்பவரிடம் கையளித்தார். அதனையடுத்து, பாரம்பரிய தபால்காவும் முறையான, வண்டிலில் தபால் கொண்டு செல்லும் முறையில் தபால் பொதி சுமப்பவர் யாழ்.புகையிரத நிலையத்தில் இருந்து தபால் பொதிகளை யாழ்.பிரதம தபால் நிலையத்திற்கு கொண்டு சென்றார். இனிவரும் காலங்களில் பாரம்பரிய முறையன்றி, வாகனத்திலேயே தபால் நிலையம் வரை தபால்கள் கொண்டுசெல்லப்படும் என தபால் மா அதிபர் ரோஹண அபேவர்த்தன தெரிவித்தார்.

அதேவேளை, ரயில் மூலமான தபால் விநியோக சேவை நேற்று வைபவரீதியாக தென்மராட்சி பிரதேச ரயில் நிலையங்களில் அஞ்சல் மா அதிபர் டி.எல். பீ.ஆர். அபேரட்ணவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கொடிகாமம் சாவகச்சேரி, நாவற்குழி ரயில் நிலையங்களில் இந்த நிகழ்வுகள் சிறப்புற நடத்தப்பட்டுள்ளன. (ற-9,7,17)










பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 30 வியாழன் (16.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 324

# ஜனாதிபதித் தேர்தலுக்கு கூட்டமைப்பும் எதிர்ப்பு

## அடுத்த வருடம் நடத்தவேண்டிய அவசரம் ஏன் என்று சுமந்திரன் எம்.பி. கேள்வி



கொழும்பு, ஒக்ரோபர் 16

**தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என உயர்நீதிமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சத்தியக் கடதாசி கொடுத்துள்ள நிலையில், யாரை ஏமாற்ற மீண்டும் தமிழீழக் கதையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்டவிழ்த்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று கேள்வி எழுப்பினார். அத்தோடு, அடுத்த வருடம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கும் அவர் கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.**

'அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படு அமைப்பானது கொழும்பில் நேற்று முற்பகல் நடத்திய வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அங்கு அவர் மக்கள் மத்தியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழக் கோரிக்கையிலிருந்து விலகினால் தாமும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை உடனடியாக இல்லாதொழிப்பதாக தெரிவித்திருந்தார்.

உண்மையில் ஜனாதிபதியின் இந்த உரையானது யாரை ஏமாற்ற என்று தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என ஏற்கனவே நாடாளுமன்றில் அறிவித்துள்ளது. அத்தோடு. எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தமிழீழக் கோரிக்கையை நிராகரிப்பது தொடர்பாக தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தோம்.

இவைபோக, உயர்நீதிமன்றில் எமக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழங்கின் போதும் தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என நாம் சத்தியக்கடதாசி மூலம் தெரியப்படுத்தியிருந்தோம்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வழங்கிய பஸ் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக். 16

ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான புதிய பஸ் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் சாரதியினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்குச் செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மீதே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.40 மணியளவில் அரியாலை மாம்பழம் சந்தியில் வைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டுமோட்டார் சைக்கிள்களில் வந்த இருவர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தற்போது பஸ் யாழ்ப்பா

(22ஆம் பக்கம் பார்க்க)

## தங்க நகை அடைவு வட்டி வீதம் குறைப்பு

கொழும்பு, ஒக். 16

நகை அடைவுக் கடனுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கடந்த 10 ஆம் திகதியில் இருந்து இலங்கை மத்திய வங்கி தங்க நகை அடைவுக் கடன்களுக்கான வட்டி வீதத்தை மூன்று வீதத்தால் குறைத்துள்ளது.

வங்கியொன்றில் தங்க நகைகளை அடைவு வைத்துக் கடன்களைப் பெறுவோர் இதுவரை செலுத்திய 15 வீத வட்டிக்குப் பதிலாக இனிமேல் 12 வீத வட்டி அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(கு-22)

## மத்திய – மாகாண அரசுகள் ஒன்றிக்கும் நாள் விரைவில்

### வடக்கு முதலமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக். 16

வடமாகாணத்தில் சமாந்தர மட்டத்தில் நிர்வாகமானது பிரிந்து நடைபெறுவது வருத்தத்தைத் தருகிறது. அப்படியிருந்தும் கூடுமான வரை அரசு நடத்தும் நிர்வாகத்திற்கும் எமது நிர்வாகத்திற்கும் இடையில் போட்டி, பொறாமைகள் எழாது மக்கள் நன்மையே முதன்மையானது என்ற கருத்தை வலியுறுத்தி நாம் நடைமுறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோம். இதுவரை மற்றைய மாகாணங்களில் முரண்பாடுகள் முன்வராதிருந்ததற்குக் காரணம் மத்திய அரசும் மாகாண அரசும் பெரும்பான்மை மாகாணங்களில் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தமையே. எமது மாகாணத்தில் தான் நாம் முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றோம். மொழி, மதம், இனம், கட்சி, இடம் எனப் பல வேறுபாடுகள் மத்திய அரசுடன் உண்டு. அதன் எதிரொலியே மாகாண மத்திய நிர்வாக சமாந்தரச் செயற்பாடுகள். விரைவில் இவை யாவும் தீர்க்கப்பட்டு ஒருமித்து நாங்கள் முன்னேறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.



கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரி

(22ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் கைப்பற்றிய மிகுதித் தங்கம் எங்கே?

### கேள்வி எழுப்புகிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஒக்.16

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு தொகைத் தங்கம் கடந்த 13 ஆம் திகதி மக்களிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு கைப்பற்றப்பட்ட மிகுதித் தங்கம் எங்கே என் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று அரசிடம் கேள்வி எழுப்பியது.

அத்தோடு, வடக்கு மக்க

(22ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ரயிலால் ஒரே நாளில் 5 லட்சம் ரூபா வருமானம்

யாழ்ப்பாணம். ஒக்.16

யாழ்.ரயில் நிலையத்துக்கு ஒரே நாளில் 5 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 78 பேர் கடுகதி ரயில் சேவையில் நேற்றுக் கொழும்பு பயணித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான ரயில் சேவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவி

(22ஆம் பக்கம் பார்க்க)

முதன் முறையாக யாழ். மண்ணில் 100 வீத விசா உறுதிப்பாட்டுடன் வெறும் 900 000/= ரூபா செலுத்தி **செங்கன் விசா**

- 2 மாதங்களில் **இத்தாலி, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், ஜேர்மனி** உட்பட 26 நாடுகளில் படிக்க உழைக்க 2 வருட விசா.
- மேலதிக கட்டணங்கள் எதுவுமில்லை.
- எழுத்து மூலமான விசா உறுதிப்பாடு.

(நிபந்தனைகளுடன்)

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்டட்**

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.

இல.175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.



அரசபதிவிற்கு உட்பட்டது பதிவிலக்கம்: PV 82703

021 221 9016

(53198) (45.3.8)

## பலநாள் தேடப்பட்ட திருடன் முல்லைத்தீவில் மாட்டினான்

### தங்க நகைகள், பொருள்கள் என்பனவும் மீட்பு

வலி.தென்மேற்கு, ஒக்.16

யாழ். குடாநாட்டில் பல இடங்களில் இடம்பெற்ற அநேகமான திருட்டுக்கள், கொள்ளைகள், வழிப்பறிகள் போன்ற குற்றச் செயல்கள் சம்பந்தமாக பொலிஸாரால் தேடப்பட்டு

(22ஆம் பக்கம் பார்க்க)



## அதிகாலையில் வீட்டைத் திறந்து 15 பவுண் தங்க நகைகள் திருட்டு

### வீட்டார் வெளியே சென்ற சமயம் பார்த்துக் கைவரிசை

வலி.தென்மேற்கு.ஒக்.16

அதிகாலை வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்ற நேரம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய திருடர்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த திறப்பை எடுத்துக் கதவைத் திறந்து உள்ளே சென்று அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 15 பவுண் தங்க நகைகளையும் 15 ஆயிரம் ரூபாவையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தத் துணிகரமான திருட்டுச் சம்பவம் சுதுமலை தெற்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னை நாள் அதிபர்

## திருவாளர் அருணாசலம் அகிலதாஸ் அவர்களின்

## சேவை நயப்பும் பதவி உயர்வுப் பாராட்டும் - 16.10.2014









### ஆசிச்செய்தி

எமது கிராமத்தில் வசிப்பவராகிய கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.அகிலதாஸ் அவர்களின் சேவையைப் பாராட்டு முகமாக நடத்தப்படும் விழாவிற்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

இவர் தனது சேவைக் காலத்தில் ஆலயத்துடன் நெருங்கிய உறவை வளர்த்ததோடு ஆலய வீதிகளின் புனிதத் தன்மையையும் பேணி மாணவர்களை மனிதநேய அறநெறிப் பண்புகளில் ஈடுபடுத்தி ஒழுக்க சீலர்களாக ஒழுக வகை செய்தார். அவரது பதவிக் காலத்தில் பாட சாலை சகல துறைகளிலும் களங் கண்டு வெற்றியீட்டியது. தற்போது அவர் நல்லூர் கோட்டக்கல்வி பணிப் பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார். அவர் என்றென்றும் மாணவர் சமூ கத்திற்கும், கல்விச் சமூகத்திற்கும் நோய் நொடியின்றி சேவைபுரிய எம் பெருமானாகிய கிருபாகரசிவ சுப்பிரமணிய சுவாமியைப் பிரார்த் தித்து ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ.க.சிவதாசக்குருக்கள்
பிரதமகுரு கிருபாகர
சிவசுப்பிரமணிய சுவாமி
தேவஸ்தானம்
கொக்குவில்.

### சேவை விவரம்

**முழுப் பெயர்**
அருணாசலம் அகிலதாஸ்
**ஆசிரியராக**
1984–1988 யா/அல்–அக்ஷா முஸ்லிம் மகா வித்தியாலயம்
1989–1990 யா/உசன் இராமநாதன் ம.வி.
**பிரதி அதிபராக**
1991–1993 யா/உசன் இராமநாதன் ம.வி.
(இலங்கை அதிபர் சேவை தரம் 2–I)
**அதிபராக**
1994–1999 யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
(இலங்கை அதிபர் சேவை தரம் 1)
2000–2005 யா/கோப்பாய் மகா வித்தி யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
2007 செப்ரெம்பர் முதல் 2012 ஒகஸ்ட் வரை
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
**பிரதிக் கல்விப் பணிப்பாளராக**
2012 செப்ரெம்பர் முதல் – டிசெம்பர் வரை
தென்மராட்சி கல்வி வலயம்
(இலங்கை கல்வி நிர்வாக சேவை – III)
2013 ஜனவரி இலிருந்து தொடர்ந்து டிசம்பர் வரை
தீவக கல்வி வலயம்
**நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக**
2014 ஜனவரிமுதல் இன்று வரை

### கல்லூரியை முதன்மை பெறவைத்தவர்

யாழ்ப்பாணத்திலே முதன்மை பெறும் கல்லூரிகளில் யா/ கொக்குவில் இந்துக்கல்லூரியும் ஒன்றாக விளங்கு கின்றது. இதற்கு அக்கல்லூரியை வழி நடத்திய அதிபர்களது பங் களிப்பு முக்கியமானது. "அரசன் எவ் வழி குடிகளும் அவ்வழி" என் பது ஆன்றோர் வாக்கு. இதற் கமைய அ.அகிலதாஸ் அவர்கள் 2007 - 2012 வரையான குறுகிய காலப் பகுதியை முறைமையாகப் பயன்படுத்தி நிறைந்த பெறுபேறு களையும், முன்னேற்றங்களையும் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுத்து, அவற்றின் மூலமாக இலங்கைத் தீவில் கல் லூரியின் பெயர் விளங்க வழி வகுத் தமை பாராட்டுக்குரியது.

இன்று பதவி உயர்வு பெற்று கோட்டக் கல்விப் பணிப்பாளராக மேலான பணிகளை முன்னெடுத்து வரும் அ. அகிலதாஸ் அவர்கள் பணி மேலும் சிறப்புறுவதற்கு வாழ்த்து வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

S.உதயகுமார்
வலயக்கல்விப் பணிப்பாளர்
யாழ் கல்வி வலயம்

### தடம் பதித்த அதிபர்

இந்தக் கல்லூரியில் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் அதிபராக கடமை ஏற்று 2012 ஆம் ஆண்டுவரை ஏறக்குறைய ஐந்து ஆண்டுகள் கடமைப் பொறுப்புடனும் அர்ப்பணிப் புடனும் ஆற்றிய பணிகள் வரலாற்றுப் பெருமைமிக்க தென்றால் மிகையாகாது. குறிப்பாக நூற்றாண்டு நிகழ்வு களையும், கல்வி, பௌதிக வள விருத்தியிலும் ஏற்படுத்தப் பட்ட புதிய பரிமாணங்கள் அவரது வினைத்திறன் மிக்க செயற்பாடுகளின் கருவூலங்களாகும். இலங்கை அதிபர் சேவை ஒன்றில் விளங்கிய அதிபர் அவர்கள் கல்வி நிர் வாக சேவையில் பதவி உயர்வு பெற்றமையைத் தொடர்ந்து 2012 இல் இடமாற்றம் பெற்று பிரதிக் கல்விப் பணிப்பாள ராக தென்மராட்சி கல்வி வலயத்திலும், தீவகக் கல்வி வலயத்திலும் சேவையாற்றி தற்போது நல்லூர்க் கல்விக் கோட்டத்தில் கோட்டக் கல்விப்பணிப்பாளராக கடமை யாற்றுவது இக்கல்லூரிக்குக் கிடைத்த பேறு எனக் கருது கின்றேன். அவரது கோட்ட நிர்வாகத்தினுள் இக்கல்லூரி அமைவதனால் இதன் வளர்ச்சி நோக்கிய பணிகளுக்கு உந்துசக்தியாக அமைவார் என கல்லூரிச் சமூகம் பூரண மாக நம்புகின்றது. அந்த வகையில் ஆசிரியர் நலன்புரி கழகமும் மாணவர்களும் கல்லூரி சமூகமும் இணைந்து பாராட்டு நிகழ்வினை மேற்கொள்வதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன். அவருக்கு இருக்கும் சேவைக் காலத்தினுள் மேலும் பல உயர்வுகளைப் பெற்று குடும்ப நலத்துடன் நீ டித்த காலம் வாழ்ந்து இந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னாலான பங்களிப்பை வழங்க வேண்டும் எனப் பிரார்த்தித்து கேட்டுக்கொள்கின்றேன்.

வே. ஞானகாந்தன்
அதிபர்.




### ஆளுமைமிக்க அதிபர்

திரு.அ. அகிலதாஸ் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராக சேவையாற்றிய காலம் குறு கியதாக இருந்தாலும் அவரது சேவைக்காலம் கல்லூரி வரலாற்றில் என்றும் அழியாத ஒரு இடத்தினைப் பெற்றுவிட்டது. அவரது காலத்திலே கல்லூரியின் கல்விசார் செயற்பாடுகளிலும் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஏற்பட்ட வளர்ச்சியும் நூற்றாண்டு விழா செயற்பாடுகளும் என்றும் நினைவுகூரத்தக்கவை. அவரது நிர்வாகத்திறமை, துடிப்புமிக்க செயற்பாடுகள், கண்டிப்புடன் கூடிய அனுபவமிக்க அணுகுமுறை என்பன அவரை ஒரு ஆளுமைமிக்க அதிபராக எடுத்துக் காட்டி நின்றன. அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென பாடசாலை அபிவிருத்திக்குழு சார்பில் வாழ்த்துகின்றேன்.

S.K.கண்ணதாஸ்
பாடசாலை அபிவிருத்திக் குழு.

### சவால்களைஎதிர்கொள்ளும் துணிவுமிக்கவர்

அ.அகிலதாஸ் அவர்கள் 2007ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ ஐந்தாண்டுகள் எமது கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவர். பௌதிகவள அபிவிருத்தி, கல்வி மேம்பாடு, விளையாட்டுத்துறையின் வளர்ச்சி எனப் பல பரிமாணங்களில் கல்லூரியின் புகழை நாற்றிசையும் மிளி ரச் செய்தவர். இவருடைய காலப் பகுதியில் கல்லூரி யின் நூற்றாண்டு விழா எங்கும் நிகழ்ந்திராதவாறு மூன்று தினங்கள் ஆறு அமர்வுகளாக நடைபெற்றமையும் இங்கு வெளியிடப்பட்ட நூற்றாண்டு மலரும் மிகச் சிறந்த வர லாற்றுப் பதிவுகளாகும்.

இவர் சிறந்த தலைமைத்துவப் பண்புகளைத் தன்ன கத்தே கொண்டவர். சவால்களைத் துணிவுடன் எதிர் கொள்ளும் ஆற்றல்மிக்கவர். இவருடைய சிறந்த சேவை யைக் கௌரவிக்கு முகமாக 2011ஆம் ஆண்டு சிறந்த நல் அதிபருக்கான பிரதீபா பிரபா விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டிருந்தார்.

இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தற்போது நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார். இதனால் அவரின் பணிகள் தொடர்ந்தும் எமது கல்லூரிக் குக் கிடைத்த வண்ணமேயுள்ளன.

எனவே இவர் நல் ஆரோக்கியத்தோடு நீண்ட காலம் வாழ்ந்து எமது கல்லூரிச் சமூகத்திற்குத் தொடர்ந்தும் பணி யாற்ற வேண்டும் என இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சி.இராஜ்குமார்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

### தற்துணிவுடன் தீர்மானங்களை மேற்கொண்ட அதிபர்

அதிபர் அகிலதாஸ் அவர்கள் சுமார் ஐந்து ஆண்டுகள் கொக்குவில் இந்துவின் அதிபராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றவர். இவ ரது புகுந்தவிடம் கொக்குவிலாக இருந்ததுடன் மனைவியும் கொக் குவில் இந்துவின் பழைய மாணவியுமாவார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை தனது அதிபர் பதவிக் காலத்தில் நடத்தி வைக்கும் நற்பாக்கியத்தைப் பெற் றவர். பழைய மாணவர்கள், பெற்றோர்கள், கொக்குவில் சமூகம் மற்றும் நலன்விரும்பிகள் யாவரதும் நல்லாதரவைப் பெற்று நூற் றாண்டு விழாவினை எல்லோரும் வியக்கத்தக்க வகையில் ஒழுங்கமைத்து நடத்தி வைத்ததன் மூலம் சிறந்த ஆளுமையுடைய அதிபர் என்ற பாராட்டைப் பெற்றவர்.

இவரது பதவிக் காலத்தில் கல்லூரிச் செயற்பாடுகள் சிறப்பாக அமைந்திருந்ததெனக் கூறலாம். கற்பித்தற் செயற்பாடுகள், விளை யாட்டுத்துறை, இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் யாவும் சி றப்பாக விளங்கின. கல்லூரியின் பௌதிக வளங்களும் அதிகரித் தன. இவருடைய பதவிக் காலத்தில்தான் யாழ்.இந்துக் கல்லூரியுட னான "இந்துக்களின் போர்" துடுப்பாட்டப் போட்டி ஆரம்பித்து வைக் கப்பட்டது.

அகிலதாஸ் அவர்கள் தன்னுடைய ஆற்றல் மற்றும் ஆளுமையின் அடிப்படையில் இன்று கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி யுயர்வு பெற்று அப்பதவியை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார். இவர் எதிர்காலத்தில் மேலும் பதவியுயர்வுகள் பெற வேண்டு மெனவும் இவரது வாழ்வு சிறப்புப் பெறவேண்டுமெனவும் வாழ்த்து கின்றேன்.

பொ.கமலநாதன்
இளைப்பாறிய அதிபர்

### எங்கள் அதிபர்...

கொக்குவில் இந்துக் கல்லூரியில் எனது 30 வருட சேவையில் பல அதிபரின் கீழ் ஆசிரியராக இருந்தேன். ஆனால் திருவாளர் அ.அகிலதாஸ் அதிபரின் கீழ் 5 வருடம் பிரதி அதிபராக இருக் கும் பாக்கியம் கிடைத்தது. அவர் அதிபராக இருந் தும் எனது ஆலோசனைகளை ஏற்று என்னை மிக வும் கண்ணியத்துடன் நடத்தினார்.

திருவாளர் அ.அகிலதாஸ் அதிபர் காலத்தில் பாடசாலை பௌதீக வளங்களில் புதுப்பொலிவு பெற்றது. கோயில் வீதி வாசல், மைதான வாசல், மைதானம் விரிவாக்கல், ஹண்டிப் பேரின்பநாயக 2ஆம் மாடி, நூல் நிலைய புனரமைப்பு என்பன சி லவாகும்.

இவரது காலத்தில் க.பொ.த(சாதாரண) சித்தி 90% தாண்டியது. க.பொ.த(உயர்தரம்) ஏறத்தாழ 80இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார் கள். கல்வி வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றி னார்.

எல்லா விளையாட்டுகளிலும் கோட்டம் வலய மட்டம், தேசிய மட்டம் வரை சிறப்பாக சென்றது. இவரது பாக்கியம் பாடசாலையின் நூற்றாண்டு விழா இவரது காலத்தில் நடைபெற்றது.

பதவி உயர்வு பெற்று சென்ற எங்கள் அதிபர் அவரது குடும்பம் எல்லா சிறப்புகளையும் பெற ஆண்டவனை வேண்டுகின்றேன்.

க.வேலாயுதம்
இளைப்பாறிய பிரதி அதிபர்

### செயல்திறன்மிக்க அதிபர்

எங்கள் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருணாசலம் அகிலதாஸ் அவர்களுக்கு பாராட் டுச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நான் இக்கல்லூரியில் கடமை யாற்றும் காலத்தில் 2007ஆம் ஆண்டு அதிபராக பதவி ஏற்றுக் கொண்டார். அக்காலத்தில் மிடுக்கான தோற்றம், இளமைத் துடிப்பு, அஞ்சா நெஞ்சம் கொண்டவராக காணப்பட்டார். மாணவர் கல்வி, ஆசிரியர் வளம், கல்லூரியின் முன்னேற்றம் என்பவற்றில் மிக்க அக்கறை செலுத்தினார். அதன் பயனாக கல்லூரிச் சுவர் கள், நுழைவாயில்கள் புதுப்பொலிவு பெற்றன. மைதானம் விஸ்தரிக்கப்பட்டது. சில மரங்கள் தறிக்கப்பட்டன. பல மரங்கள் நடப்பட்டன. இதனால் கல்லூரியின் பௌதீக வளம் புதுப்பரிமா ணத்தை எட்டியது. மாணவர்கள் விருப்புடன் பாடசாலை வரவும், மகிழ்வுடன் கற்பதற்கும் ஏற்ற ஒரு கவின் நிலை உருவாக்கிய பெருமை அவருக்கே உரியது. மாணவர்கள் மத்தியில் அறிவு, திறன், மனப்பாங்கு மேம்படுத்தும் வகையில் கற்றற் செயற்பாடுகள், விளையாட்டுத் துறை, கலைத்துறை யாவும் விஸ்தரிக்கப்பட்டன. அதன் பயனாக மாணவர் பல சாதனைகளை ஈட்டுவதற்கு காரண கர்த்தாவாக இருந்துள் ளார். ஆளுமையும், செயற்திறனும் மிக்க அதிபர் என்பதற்கு அவர் காலத்தில் நடத்தப் பட்ட நூற்றாண்டு விழா நல்லதொரு சான்றாகும். அவர் தற்போது பதவி உயர்வு பெற்று நல்லூர் கோட்டக் கல்வி பணிப்பாளராகவுள்ளார். மென்மேலும் பல பதவி உயர்வுகளை பெற்று கல்விச் சமூகத்திற்கு அளப்பரிய பணியினை செய்து நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக.

ஜெ.குமாரதேவன்
தலைவர், ஆசிரியர் கழகம்.

(49681)(7.6.3)

# எதிர்காலக் கல்விக்கு வித்திடும் முன்பள்ளிக் கற்றல் செயற்பாடு

## றெக்கிளமேசன் கிழக்கு கிராமசேவையாளர் கருத்து

குருநகர், ஒக். 16
முன்பள்ளியில் கற்ற பின்னர் பாடசாலையில சேர்ந்து கல்வியைப் பெறும் மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி இலேசானதாகவும் உறுதுணையாகவும் அமைகிறது.

இவ்வாறு கூறினார் ஜே/68 றெக்கிளமேசன் கிழக்குப் பகுதியின் கிராம சேவகர் க.நித்தியானந்தன்.

குருநகர் தொடர்மாடி முன்பள்ளி ஆசிரியர்,பெற்றோர் இணைந்து உருவாக்கிய ஆக்கங்களை காட்சிப்படுத்தும் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். இதன் போது அவர் மேலும் கூறியதாவது:

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வயதை அடைந்ததும் அவர்களைப் பாடசாலையில் கட்டாயம் சேர்க்க வேண்டும். வறுமையைக் கருத்திற் கொண்டு பிள்ளையைப் பெற்றோர் பாடசாலையில் சேர்க்காது விட்டால் கற்றல் செயற்பாடின்றி அந்தப் பிள்ளையின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகி விடும். இதனால் எதிர்காலச் சமுதாயம் பாதிப்படையும். பாடசாலையில் பிள்ளையைச் சேர்ப்பதற்கு முன்னுள்ள வயதில் பிள்ளையை முன்பள்ளியில் சேர்ப்பது அவரது எதிர்காலப் பாடசாலைக்கல்விக்கு உறுதுணையாக உள்ளதை பாடசாலையில் சேர்ந்து கற்றல் செயற்பாடுகளில் சிறப்பான நிலையை அடைந்த மாணவ - மாணவிகளின் தகவலில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

முன்பள்ளியில் சேர்ந்து கற்கும் சிறார்களின் கல்வி, விளையாட்டு செயற்பாடு களை இங்கு கல்வியைப் போதிக்கும் ஆசிரியைகள் சிறந்த முறையில் வழி நடத்துகிறார்கள். இதனால் முன்பள்ளிகளில் சேர்ந்து கல்வி கற்று பின்னர் பாடசாலை களில் தமது கல்வியைத் தொடரும் சிறுவர்கள் தமது கூச்ச சுபாவத்தை மறந்து பாடசாலைகளின் அனைத்துச் செயற்பாடுகளிலும் திறமையை வெளிப்படுத்துகிறார்கள் என்றார்.

குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையச் செயலாளர் அ.க. ஏணெஸ்ற் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கௌரவ விருந்தினராக குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தின் தலைவர் ஸ்ரனிஸ்லோஸ் அன்ரன் கலந்து கொண்டார். (வ-51)

## தடிமன், காய்ச்சலால் பாதிப்புறுவோர் அதிகரிப்பு

### சாவகச்சேரி மருத்துவமனை வட்டாரம் தகவல்

தென்மராட்சி,ஒக்.16
சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் தடிமன், காய்ச்சல் தொண்டைநோய் போன்ற வைரஸ் கிருமித் தாக்கத்துக்கு உட்பட்ட பலர் சிகிச்சைபெற்று வருவதைக் காணமுடிகிறது.

அண்மையில் வீசிய 'ஹூட் ஹூட்' புயல் காரணமாக பிரதேசத்தில் வீசும் கடும் காற்றால் புதுவித காய்ச்சல் பரவலாம் என்று எதிர்வு கூறப்பட்டது. இது தொடர்பாக மருத்துவமனை மருத்துவர்களுடன் தொடர்பு கொண்டபோது அவர்களும் அவ்வாறான நோய்களால் பீடிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தினமும் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெற வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## ஆன்மிக சொற்பொழிவு

தென்மராட்சி, ஒக்.16
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆன்மிகச் சொற்பொழிவில் தென்மராட்சி பிரதேச செயலக இந்து கலாசார அலுவலர் செ.முகுந்தன் 'வாழ்வியல் நெறியும் ஒழுக்கமும்' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)

## சாவகச்சேரியில் ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் பூச்சாடிகள்

தென்மராட்சி, ஒக்.16
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஏ-9 வீதியின் இருமருங்கிலும் பூங்கன்றுகளுடனான பூச்சாடிகள் வைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரால் இந்தப் பூச்செடிகள் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. சாவகச்சேரி மருத்துவமனையிலிருந்து சாவகச்சேரி ரயில் நிலைய வீதிச் சந்தி வரை பூச்செடிகளுடனான பூச்சாடிகள் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் சிமெந்து தொட்டிகள் அமைத்து பூங்கன்றுகளை நட்டு வருகின்றனர். (வ-9)

## இரு வீதிகளுக்கு விமோசனம்

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள இரு வீதிகள், பிரதேச சபை நிதியிலிருந்து 34 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான அங்கீகாரம் உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ளது.

இளவாலையிலுள்ள சித்திரமேழி வீதி 15 லட்சம் ரூபா செலவிலும், சாவற்கட்டிலுள்ள முருகமூர்த்தி கோவில் வீதி 19 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

அந்தப்பிரதேசங்களை பிரதிநிதிப்படுத்தும் உறுப்பினர்களின் கோரிக்கையை அடுத்து 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-115)

## நிர்வாகிகள் தெரிவு

அச்சுவேலி, ஒக்.16
தமிழரசுக்கட்சியின் கோப்பாய்த் தொகுதி இளைஞர் அணியின் பொதுக்கூட்டம் ஆவரங்காலில் உள்ள தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்றது.

பிரதேச தலைவர் சி.திருநாவுக்கரசு, மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர்.

தி.சுதர்சன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புது வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

தலைவராக ஐ.கமலநேசன், சிரேஷ்ட தலைவர்களாகத.விமலராஜ், இ.இராகுலன், செயலாளராக சு.நரேஸ்குமார், உபசெயலாளராக ப.நிதர்சன், பொருளாளராக இ.கோகுலன் ஆகியோரும் நிர்வாகக் குழுவினராக ச.றஜீவர் (கல்வியங்காடு), சி.துவாரகன் (அச்சுவேலி), வி.நிதர்சன் (கோப்பாய்), வி.ஆதித்தன்(புத்தூர்), த.கவாஸ்கர் (புத்தூர்), செ.றஜீவ் (அச்சுவேலி), இ.கலைமோகன் (இருபாலை), இ.சுதர்சன் (ஆவரங்கால்), இ.குபேரன் (ஆவரங்கால்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (வ-11)

♦ ♦ ♦

தென்மராட்சி, ஒக். 16
சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் பொதுக்கூட்டம் அண்மையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - பி.சின்னத்துரை, உபதலைவர்-ஏ.வி.முருகதாஸ், இணைச்செயலாளர்கள் -இ.கிருஷ்ணசாமி, மு.கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் ம.ஸ்ரீபாஸ்கரன் ஆகியோருடன் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக- பொ.குகன், செ.ரவீந்திரன், கு.சிவகுமார், இ.வேல்முருகு, இ.கதிரவேலு, சி.வசந்தன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-9)




வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமைநல வாழ்விற்கு மனவளக்கலை யோகா
- எளியமுறை காயகல்பப் பயிற்சிகள்
- தியானப் பயிற்சிகள்
- உடற்பயிற்சிகள்
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

வழங்குபவர் : பேராசிரியர் A.விவேகானந்தம் அவர்கள் (தமிழ்நாடு இந்தியா)
இடம் : வெள்ளாம்போக்கட்டி தவமையம், கொடிகாமம்.
காலம் : 18.10.2014 பிற்பகல் 3.00 மணி
தொ.பே. 077 531 4654 (47311) (45.3.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் 2014 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி 172 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

செல்வி சங்கவி தயாமோகன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் கல்வியில் உயர்ச்சிகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி தங்கராசா குடும்பம் (தர்மக்கேணி),
திரு.திருமதி தர்மபாலன் குடும்பம் (மீசாலை),
திரு.திருமதி சிவப்பிரகாசம் குடும்பம் (நெல்லியடி)
(47313)(12.3.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி/வன்னேரிக்குளம் ம.வி.
2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த



செல்வி றஞ்சன்குமார் பரணிகா அவர்களையும் இவருக்கு போதித்த ஆசிரியர் திருமதி ப.குமாரகுலசிங்கம்



அவர்களையும், சித்திப் புள்ளிகளைப் பெற்ற சி.தாட்சாயினி, ம.சயந்தினி, வி.டசிந்தன், உ.சமர்விழி, வி.நிலக்ஷிகா, ந.சாயினி, ரா.ரஜீபன், யோ.சஞ்சீபன், யோ.துஷ்யந்தன், ம.புகழினி ஆகியோரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes
வாழ்த்துவோர் :
வன்னேரிக்குளம். பாடசாலைச் சமூகம்
(4840)(7.6.3)

வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி அல்லது கொக்குவில் பிரதேசத்தில் இருவர் தங்கக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 653 4411 (53258) (45.3.6)

கடை வாடகைக்கு

ஐஸ்கிறீம், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யும் கடை (யாழ்ப்பாணத்தில்) கமிசன் அடிப்படையில் தரப்படும். அனைத்து தளபாடங்களுடன். பெண்களும் தொடர்பு கொள்ளலாம்.
(53248) (12.3.6) தொடர்பு: 077 998 1896

கட்டடம் வாடகைக்கு உண்டு

இல.66, கன்னாதிட்டி சந்தியில் அமைந்துள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
(Soft Logic இற்கும் Cargicls இற்கும் இடைப்பட அமைந்துள்ளது)
தொடர்பு : 077 032 8362 (53210) (7.6.3)

பணிநிலை வேண்டுகை

புத்தகம் கட்டுநர்

மேற்குறிப்பிட்ட பணிநிலைக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

- வேண்டுகையாளர் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- நேர்முகத் தேர்வு 2014-10-16.17.18 ஆகிய நாள்களில் நடைபெற உள்ளதால் நேரில் வருகை தரவும்.

(சி17013)(12.3.6)
கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல. 681. கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம், இலங்கை.

பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வன் அ.ஸ்ரீநிகேதன்

யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் இந்த வருடம் நடைபெற்ற 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்று சம புள்ளிகளுடன் பாடசாலையில் முதலாம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் 90 ஆம் இடத்தினையும் பெற்றமைக்காக செல்வன் அ.ஸ்ரீநிகேதனைப் பாராட்டி வாழ்த்துவதுடன். இனிவரும் எல்லாப் பரீட்சைகளிலும் அதிஉயர் பெறுபேறுகளைப்பெற்றுச் சித்தியடைந்து கல்வியில் மேன் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அத்தான், அக்காமார், தம்பிமார், மச்சிமார், அல்லையம்பதி, தூன்னாலை, கரவெட்டி.

வாழ்த்துகின்றோம்

இன்று 16.10.2014 நடைபெறும் 75 ஆவது பிறந்ததின விழாவையும் எதிர்வரும் 19.10.2014 அன்று இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற இருக்கும் பவளவிழாவினையும் காண இருக்கும் எமது கலை நாயகனான சங்கீத பூஷணம், கலாபூஷணம் உயர்திரு. சுப்பையா கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர்) அவர்களைப் பாராட்டி வாழ்த்தி ஆசிபெறுகின்றோம்.




வாழ்த்துவோர்
நாதஸ்வர வித்துவான்
P. இராமமூர்த்தி சிவகுமார் குடும்பத்தினர்.
தொல்புரம், வழக்கம்பரை.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி ஆறுமுகம் (சிறாப்பர்)J.P (Aus)



*(ஆசிரியர் - வேலணை மத்திய மகா வித்தியாலயம், ஓய்வுபெற்ற பதில் அதிபர் - வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்)*

உடுவிலைப் (தொம்பை) பிறப்பிடமாகவும் ஈஸ்வரிவாசா கே.கே.எஸ். உடுவிலை வசிப்பிடமாகவும், தற்போது ஆஸ்திரேலியா, சிட்னியில் வசித்தவருமான சின்னத்தம்பி ஆறுமுகம் 13.10.2014 திங்கட்கிழமை 95ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (முன்னாள் உடுவில் கிராம சபை தலைவர்) - இராசம்மா தம்பதியரின் மருமகனும், சிட்னியில் வசிக்கும் புவனேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை வசாவிளான் ம.ம.வி) அன்புக் கணவரும், ராதா (U.K), சிறீஸ்கந்தன் (ஆஸ்திரேலியா), வசந்தா, மனோகரன், யசோதா, காலஞ்சென்ற சாந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தங்கச்சியம்மா (உடுவில், தொம்பை), பொன்னம்மா (மீசாலை), அன்னப்பிள்ளை (மகாதனை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தம்பியும், மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஜெகந்நாதன் மற்றும் இராமநாதன் (U.K), யோகநாதன், இரத்தினேஸ்வரி (இளைப்பாறிய நூலகர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2014) வியாழக்கிழமை சிட்னியில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி இ.பாலசிங்கம்.
021 300 7781,
0061298631623

நாலக வீதி,
உடுவில் கிழக்கு,சுன்னாகம். (53254) (12.3.6)

## திருமதி துளசியம்மா நாகரட்ணம்



பொலிகண்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துளசியம்மா நாகரட்ணம் நேற்று (15.10.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், நாகரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகசிங்கத்தின் அன்புச் சகோதரியும் புஸ்பராணியின் அன்பு மைத்துனியும், திருஞான சம்பந்தமூர்த்தி, சந்திரவதனா (கனடா), காலஞ்சென்ற சந்திரகலா ஆகியோரின் அன்புத் தாயாரும் உமாமகேஸ்வரனின் அன்பு மாமியாரும், வைகுந்தன் (கனடா), யசோதா (கனடா), விகிர்தன் (கனடா), கிருபா கரன் (கனடா), தயாளினி(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சபிதா(கனடா), அக்ஷிதா(கனடா), அபிதா(கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(15.10.2014) புதன்கிழமை பி.ப.4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
021 320 0599
416 558 5599 - வைகுந்தன்
647 781 7846 - விகிர்தன்
647 801 2026 - கிருபாகரன்
647 781 3086 - தயாளினி
067 707 0314 - யசோதா

சேர்பாடு,
பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை. (51965)(5.6.3)

## கந்தையா நயினார்



*(முன்னாள் அம்பாள் பஸ் உரிமையாளரும், அம்பாள் பழைய பாட்ஸ் கடை உரிமையாளரும்)*

இல.5, 5ஆம் ஒழுங்கை அரசடி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நயினார் 14.10.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அமிர்தவாசகம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி, சில்வேஸ்திரி ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, சாமியார், திருநாவுக்கரசு, இராசம்மா, கண்மணிப்பிள்ளை, சண்முகராசா மற்றும் சதாசிவம், பிள்ளையம்மா, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரணிஸ்குமார் (தொழிநுட்ப உத்தியோகத்தர், வேலணை), டிலிஸ்குமார், அகிலா, அனுலா (கனடா), அலெஸ்ரெலா, அனிலா (உதவிக்கணக் காளர்BCAS Jaffna), நிரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லேக்குமார் (சுதன்), சசிகலா (ஆசிரியர், யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க.பாடசாலை), விஜயகாந் (கனடா), ஜெசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கவி, சங்கீத், நிகிதா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராசமணி மற்றும் மகாலட்சுமி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, அருள்ராசா, நடராசா மற்றும் ஜெயராணி, முத்தம்மா, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்வரட்ணம், தேவராசா மற்றும் யேசுராசா, துரைராசா, செல்வராசா, யோகராசா, யோகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(53247) (12.3.6)

# வீதியை விரைவில் புனரமைக்குமாறு கோரிக்கை

பண்டாரவன்னி துவரமோட்டைக் குளத்துக்கு அண் மையில் செல்லும் வீதி மிக நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமையால் போக்குவரத்தை மேற்கொள்ளமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதனைப் புனரமைத்துத் தரு மாறு மக்கள் கோரியுள்ளனர்.

முத்துஐயன் கட்டு டி-2 வாய்க்கால் வீதியிலிருந்து பண்டாரவன்னி கிராமத்துக்கு துவரமோட்டைக் குளத்தை அண்டிச் சென்று முல்லை வீதியை அடையும் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையிலான வீதி முத்துஐயன் கட்டு நீர்ப்பாசனத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்தபோதிலும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமையால் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. இதனால் அங்கு வாழும் மக்கள் போக்குவரத்துச் செய்வதிலும். வாகனங்கள் கொண்டு செல்வதி லும் பெரும் இடர்களை எதிர் கொள்கின்றனர். எனவேஇதனை விரைவாகப்புனரமைக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர். (த-500)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமான

திருமதி பராசக்தி கனகரெட்ணம்

பிறப்பு 11.01.1932 — இறப்பு 26.09.2013

திதி: 16.10.2014

ஆழ்கடல் முத்தே! பெறுதற்கரிய உறவே!
உங்களை இழந்து ஓராண்டு முடிந்தும்
நீங்காத நினைவுகளாய் நெஞ்சில்
நீங்கள் வாழ்கிறீர்கள்.

பிள்ளைகளும், மருமக்களும்,
பேரப்பிள்ளைகளும்,
பூட்டப்பிள்ளைகளும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஸ்ணகுமாரி (புஸ்பம்) மோகனசுந்தரம்



சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணகுமாரி (புஸ்பம்) மோகனசுந்தரம் 14.10.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணேசரட்ணம் மற்றும் இராசலக்சுமி தம்பதியரின் மருமகளும், பிரபல தவில் வித்துவான் (சின்னக்கணேசு) மோகனசுந்தரத்தின் அன்பு மனைவி யும், சுகந்தன், வசந்தன், ரஜீகன், ரதீபன்,பிரதீபன், பிரதாப் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஸ்ணவேணி, பாக்கியலக்சுமி, கதிரவேல், வடிவேல், பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2014) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 987 7325
077 443 6354

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (53265)(5.6.3)


## சாரதி அனுமதி பத்திரத்துக்கு மருத்துவ சான்றிதழ் பெற வசதி

முல்லைத்தீவு, ஒக்.16

முல்லை மாவட்டத்தில்சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவோர் நன்மைகருதி முல்லை மாவட்ட செயலகத்தால் தேசிய போக்குவரத்து மருத்துவ நிர்வாகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவோர் மருத்துவச் சான்றிதழைப் பெறுவதற்குஅலைவதுடன் கூடுதலான பணத்தைச் செலுத்தியும் வருவதைக் கருத்திற் கொண்டு, இலகுவாகவும் குறைந்த கட்டணத்திலும் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக மருத்துவ நிர்வாகம் கடந்த 9ஆம் திகதி மேலதிக அரச அதிபர் மோகன்ராஸினால் திறந்து வைக்கப்பட்டது. (த-500)

## கிறிஸ்ரி றெஜினோல்ட் இராஜசிங்கம்



இல. 182, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட கிறிஸ்ரி றெஜினோல்ட் இராஜசிங்கம் 13.10.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கலஸ்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், அமலதாஸ், றுக்மணி, கில்பேட், ஸ்ரெலா, அஞ்சலா, விக்ரர், றஞ்சினி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மரியம்மா, பிரான்சிஸ் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்ற பெனடிக்ற் மற்றும் அலோசியஸ், பத்திநாதர், யோகறாணி, றீற்றா, வசந்தா ஆகியோரின் மைத்து னரும், சிரோமி, டொறின், சிகான், டெரிக் நிலுசா ஆகியோரின் சிறிய தகப்பனும், ஜோயல், ஜெரமி, அன்ரோனியோ, சரோண், செறின், கெலன் ஆகியோரின் பெரிய தகப்பனும், நிரோசன், றுக்ஷி, நிசுதன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 18.10.2014 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

182, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 9366. (53266)(10.6.3)

தகவல்:
சகோதரர்கள்.

## பதின்நான்கு (14) ஆண்டின் முன்னால் இறையோடு கலந்திட்ட எமது இனிய அன்னையார்



திருமதி தையல்நாகேஸ்வரி அரியநாயகம் அவர்களை

(தாதியர் உத்தியோகஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலை)

என்றும் நாம் நினைவுகூர்வோம்.

மாணிடற்காய் 14.08.1946 — இறைவனுக்காய் 16.10.2000

திதி:11.10.2014

பிறர்சேவை ஒன்றையே பிரியமுடன் ஏற்றுநின்று
திறமான சேவையினை நிறைவோடு ஆற்றிவிட்டு
உறவோடு உற்றாரைப் பெற்றாரைத் தலைவரினை
துறந்திறைவன் அடிசேர்ந்த அரும்பெரும் அன்னையார்
அறத்துயர்ந்த அற்புதத்தாய் தையல் நாகேஸ்வரியாரை
மறவாமல் மனத்துள்ளே மங்காத விளக்கேற்றி
உறங்காமல் உண்ணாமல் உயர்விரதம் காத்தின்று
சிறப்போடு போற்றிடுவோம் சிந்துவிழி நீர்துடைத்தே!

அன்னையாரின் பிரிவால் துயருறும்: கணவர், பிள்ளைகள்.

81/2, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (53249)(12.3.6)

## உள்ளூராட்சி வாரம், வாசிப்பு மாதம் மிகச் சிக்கனமாகக் கொண்டாட்டம்

வலி.தென்மேற்கு, ஒக். 16

வலி.தென்மேற்குப் பிரதேச சபை நிதி நிலைமை காரணமாக உள்ளூராட்சி வாரத்தையும் தேசிய வாசிப்பு மாதத்தையும் ஆடம்பரமின்றிச் சிக்கனமான முறையில் ஒரே நாளில் கொண்டாடவுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளையும் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

பொதுமக்களிடமிருந்து எந்த விதமான அன்பளிப்பும் நிதி உதவியும் பெற்றுக்கொள்ள வேண்டாமென்று பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையடுத்து இந்த வருடத்துக் கான உள்ளூராட்சி வார நிகழ்வும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் ஒரே நாளில் சிக்கனமான முறையில் கொண்டாடப்படவுள்ளது. (த-115)

## பனம் பாத்தி அமைக்கும் வேலைகள் துரிதம்

வரணி, ஒக் 16

தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணி, கொடிகாமம் பகுதிகளில் தற்சமயம் பனம் பாத்திகள் அமைக்கும் வேலைகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

பருவ மழையைத் தொடர்ந்து வயல் வேலைகள் முடிந்த கையோடுதான் பனம் பாத்திகள் அமைக்கப்பட்டு பனம் விதைகள் அடுக்கப்பட்டு அவற்றின் மீது மண் பரவப்படும்.

இதன் பின்பு மழை ஈரத்தின் உதவியுடன் பனம் விதைகள் முளைத்துக் கட்டம் கட்டமாக வளர்ந்து அவை முற்றிய பின்பு பனம் கிழங்கு பிடுங்கி எடுக்கப்படும்.

இந்த வருடம் கடும் கோடை காரணமாகப் பனைகளில் குறைந்த அளவிலேயே காய்கள் காய்த்தமையால் வழமை போல் போதிய பனம் விதைகள் கிடைக்காது போய் விட்டது. அடுத்த வருடம் பனம் கிழங்கு உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சி ஏற்படும் என்பதுடன் பனங்கிழங்குகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஒடியல், புளுக்கொடியல் என்பனவற்றுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது. (த-122)

# போகம் தப்பிய பயிர்ச் செய்கை யாழ். விவசாயிகளுக்கு பாதிப்பு

## காப்புறுதி இழப்பீட்டையும் பெறமுடியாத நிலை

அச்சுவேலி, ஒக். 16

யாழ்.மாவட்ட விவசாயிகள் காலபோக, சிறுபோகப் பயிர்ச் செய்கை நடைமுறைகளுக்கு முரணாகவும் மண் வகைக்கு ஏற்காத வகையிலும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பெருமளவு பாதிப்புக்களை எதிர்நோக்குவதோடு வருமான இழப்புக்கும் உள்ளாகுகின்றனர்.

பருவகால நடைமுறைகளுக்குப் புறம்பான நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலம் இவர்களால் காப்புறுதி இழப்பீட்டையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு வருகின்றது.

எனவே, விவசாயிகள் விவசாயத் திணைக்களம் மற்றும் பிரதேச விவசாயப் போதனாசிரியர்களின் அறிவுறுத்தல், ஆலோசனைகளுக்கு அமைய உரியகாலநடைமுறைக்குஅமைவாக பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முன்வரவேண்டும் என யாழ்.மாவட்ட விவசாய திணைக்களபணிப்பாளர்ஸ்ரீபால சுந்தரம் அறிவித்துள் ளார்.

யாழ்.மாவட்ட விவசாயிகளின் சமகால செயற்முறை தொடர்பாக மாவட்ட பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்.மாவட்டத்தில் வெங்காயப் பயிர்ச்செய்கை பெரும்போகம், சிறுபோகம் என்ற வகையிலேயே மேற்கொள்ளப் படும். வழமைக்கு மாறாக ஆர்வ மேலீட்டினால் இடைப்பட்ட காலங்களிலும் செய்கை பண்ணப்படுவதையும் பருவகால நடைமுறைக்கு மாறாகச் செய்கை பண்ணிவிட்டுப் பயிர்ச் செய்கையில் பாதிப்பு எனக் கூறுவதும் மேலோங்கி வருகின்றது.

போகம் தப்பிய முரண்பாடான பயிர்ச் செய்கை நடைமுறையால் நிலம் வளத்தை இழப்பதோடு பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், பங்கஸ் போன்றன அழியாமல்பெருகிவருகின்றன.

மணல் பாங்கான வடமராட்சி கிழக்கு, தென்மராட்சிப் பிரதேசங்களில் மாரி காலத்தில் மணல் மண் இயல்புக்கேற்ப மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை நடவடிக்கை தற்பொழுது வெள்ளம் தேங்கி நிற்கும் தாழ்நிலப் பிரதேசங்களிலும் களிமண் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்மூலம் பெருமளவில் பாதிப்பும் பொருளாதார இழப்பும் ஏற்படுகின்றது.

பருவகால நடைமுறையைக் கருத்தில்கொள்ளாமல் முரண்பாடான நிலையில் மேற்கொள்ளும் பயிர்ச் செய்கையால் ஏற்படும் நட்டத்துக்கு காப்புறுதி இழப்பீட்டு தொகை யையும் பெற்றுக்கொள்ள முடியாது.

உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையிலும் விவசாயத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை கருத்திற் கொள்ளாமல் விவசாயிகள் நடந்து கொள்வதும்அவதானிக்கப்பட்டுள்ளது.

சமகாலப் பயிர்ச் செய்கை மூலம் நஷ்டமடைவது கவலை அளிக்கின்றது. விவசாயத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களையும் பிரதேச விவசாயப் போதனாசிரியர்களின் தொடர்பு நிலை மூலம் தமது சந்தேகங்களுக்கு உரிய ஆலோசனைகளைப் பெற்று பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது பயன்தரும் எனத் தெரிவித்தார். (த-11)

## லண்டனில் வாழும் நெடுந்தீவு வாசி வழங்கிய பணத்தை மாணவருக்குப் பரிசளித்த மஹிந்த



லண்டனில் வதியும் நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவர் அந்தப் பகுதி மாணவர்களின் கல்விக்கான உதவித் தொகையாக வழங்கிய ரூபா ஒரு லட்சத்துக்கான வங்கி சேமிப்புப் புத்தகத்தை நெடுந்தீவைச் சேர்ந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் மூவருக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழா வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெற்றது.

திறப்பு விழாவின் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கையின் முதல் பெண் கிராம சபைத் தலைவியான நெடுந்தீவு கிராம சபைத்தலைவி திருமதி நாகேந்திரா செல்லம்மா ஞாபகார்த்தமாக அவரது உறவினர் செல்வரட்ணம் சுரேஷ் என்பவர் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்றமூன்று மாணவர்களின் கல்விக்கு உதவும் பொருட்டு ரூபா ஒரு லட்சம் நிதி வழங்கியிருந்தார்.

இந்த உதவித் தொகையில் தீவுப் பகுதியில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்ற நெடுந்தீவு மகா வித்தியாலய மாணவருக்கு ரூபா 50 ஆயிரமும் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை, நெடுந்தீவு றோ.க. வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்கு தலா ரூபா 25 ஆயிரமும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மகா வித்தியாலயத்துக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் வித்தியாலய அதிபர் நிறையப் பரிசில்களை வழங்கினர். (த-7)

## 8 ஐஸ்கிறீம் நிலையங்களுக்கு மறு அறிவித்தல் வரை தடை

வலி.தென் மேற்கு, ஒக். 16

யாழ். மாநகர சபைப் பகுதியில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகவும் அனுமதியின்றியும் இயங்கி வந்த 8 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள் சுகாதாரக் குழுவினரின் பரிசோதனைகளின் போது இனம் காணப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களில் மறு அறிவித்தல் வரை ஐஸ்கிறீம் உற்பத்தி செய்வதற்கு தடை விதித்துள்ள குழுவினர், அங்கு சுகாதாரமற்ற முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்காகச் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ்கிறீம் வகைகளைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.

குடாநாட்டில் வருமானத்தை மட்டும் கருத்திற்கொண்டு சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றியும் ஐஸ்கிறீம் வகைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் பலர் ஈடுபட்டுள்ளனர். இதனால் பொதுமக்கள் பெரிய அளவில் சுகாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களில் இடம்பெறும் இத்தகைய முறையற்ற செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து பாவனையாளர்களைப் பாதுகாக்க முன்வந்துள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் 12 சுகாதார வைத்திய அதிகாரிகளைக் கொண்ட குழுவை நியமித்து ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களைக் கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்திருந்தார்.

பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய குழுவினர் கடந்த சில நாள்களாகப் பிரதேச ரீதியாக ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களையும், ஆலயங்கள் உட்பட்ட விற்பனை நிலையங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு அவற்றின் தரம் குறித்து ஆராய்ந்து வருகிறார்கள். இந்த நிலையில் யாழ்.மாநகர சபைப் பகுதியில் இயங்கி வரும் உற்பத்தி நிலையங்களில் சோதனையை மேற்கொண்ட சுகாதாரக் குழுவினர் சுகாதார விதிமுறைகளுக்கு மாறாகவும் அனுமதியின்றியும் இயங்கி வந்த 8 ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களைக் கண்டுபிடித்தனர். (த-115)

# தமிழரசுக் கட்சி மேல் குற்றம் காண்பது சுரேஷ் எம்.பியின் குறுகிய மனோ நிலை

## மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி கூறுகிறார்

வலி.கிழக்குப் பிரதேசசபை தவிசாளர் பதவி இழந்தமைக்கும், உட்கட்சி இழுபறிகளுக்கும் சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டி இருப்பது உண்மைக்குப் புறம்பானது. தமிழரசுக் கட்சி மேல் குற்றம் காண்பது அவரது குறுகிய அரசியல் மனோபாவமாகும். ஆகவே இனிமேலாவது தமிழரசுக்கட்சி மேல் குற்றம் காண்பதை தவிர்த்துக்கொள்வது அவரது எதிர்காலத்துக்கு நல்லது என இலங்கை தமிழரசுக் கட்சியின் கோப்பாய் பிரதேச கிளையின் செயலாளரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான அ.பரஞ்சோதி தெரிவிததுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வலி கிழக்கு பிரதேச சபையின் ஆளுந்தரப்பு உட்பூசலுக்குத் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களே காரணம் எனக் குற்றஞ்சாட்டி பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்து வருவதற்கு மறுப்பு தெரிவித்து கோப்பாய் பிரதேச தமிழரசுக்கட்சி கிளையின் செயலாளர் அ.பரஞ்சோதி உண்மை நிலைமையை விளக்கி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில நாள்களுக்கு முன்னர் சாவகச்சேரி பிரதேச சபையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரனால் வலி.கிழக்குப் பிரதேச சபை குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானதும் சோடிக்கப்பட்டதுமாகும். வலி.கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பதவி நீங்கியமைக்குக் காரணம், தமிழரசுக் கட்சியினரே என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். உண்மையில் முன்னாள் தவிசாளர் பதவியிழந்தமைக்கு அவரது சர்வாதிகாரப் போக்கும் அவரால் மேற்கொள்ளப்பட்ட ஊழலுமே காரணம். முன்னாள் தவிசாளரின் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளமைமையே தவறாகும்.

அவர் அச்சுவேலியிலுள்ள ஒரு இறைச்சிக்கடைக்கான ஏலத்தில் பிரதேச சபைக்கு ரூபா 2 லட்சத்து 54 ஆயிரம் ரூபா வரை இழப்பை ஏற்படுத்தியுள்ளார். இது சம்பந்தமாக உள்ளூராட்சி ஆணையாளர் விசாரித்த பின்பு மேற்படி தொகையை பிரதேச சபைக்குச் செலுத்துமாறு முன்னாள் தவிசாளருக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார்.

தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் செயற்பட்டுத் தனக்குத் தெரிந்த பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளார். இது சம்பந்தமாக விசாரணை முடிவுற்று இவரால் உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குக் காரணமாகத் தீர்ப்பு வெளியிடப்படவில்லை. இதில் வேலை வாய்ப்புப் பெற்றோருக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை சபைக்குச் செலுத்துமாறும் அதிகாரிகளால் முன்னைய தவிசாளருக்குப் பணிப்புரை விடப்பட்டுள்ளது.

நெல்சிப் வேலைத்திட்டத்தில் வீதிகள் போடப்பட்டபோது வீதியிலுள்ள மக்களிடம் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக வீதி மருங்கிலுள்ளோர் தெரிவிக்கின்றார்கள். சபை நிதியில் வீதி விளக்குகள் போடப்பட்ட போது அதற்காக பலரிடம் பணம் வாங்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த விடயங்களுடன் சபையின் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டபோதும் சபை உறுப்பினர்களது கருத்துக்களைச் செவிமடுக்காது தயாரித்தமையினாலேயே உறுப்பினர்கள் பெரும்பாலானோர் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்படியாக சுமார் 26 குற்றச்சாட்டுக்கள் முன்னாள் தவிசாளரின் மீது உறுப்பினர்களினால் தெரிவிக்கப்பட்டுதமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையிடம் குற்றச்சாட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் தவிசாளரினால் தொடுக்கப்பட்ட வழக்கின் முடிவைப் பொறுத்து இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணை நடைபெறலாம் என எதிர்பார்க்கலாம்.

தற்போது மேற்படி விடயங்கள் சம்பந்தமாக முதலமைச் சருக்கெதிராகவும் உயர்நீதிமன்றத்தில் முன்னாள் தவிசாளர் வழக்குத் தொடர்ந்து உள்ளமையால் கூட்டமைப்பானது விசாரணை செய்யாது தாமதித்து வருவதாக அறிகின்றேன். இப்படியிருக்கையில் சுரேஷ்பிரேமச்சந்திரன் தமது கட்சியின்மேல்உள்ள காழ்ப் புணர்ச்சியினாலேயே தமிழரசுக் கட்சியினர்தவிசாளர் பதவி இழந்த விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக உண்மைக்குப் புறம்பாக பிரஸ்தாபித்துள்ளார்- என்றுள்ளது. (த-11)

# துணுக்காய் கமநல நிலையத்தின் 8 டிராக்டர்களில் பற்றறி திருட்டு

## காலபோக உழவுப் பணிகள் பாதிப்பு என துணுக்காய் விவசாயிகள் விசனம்

துணுக்காய், ஒக். 16

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் 8 டிராக்டர்களின் பற்றறிகள் களவாடப்பட்டமையினால் தற்போது காலபோக உழவு வேலையில் பெரும் நெருக்கடிகளை விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த 15 நாள்களுக்கு முன்னர் துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 8 டிராக்டர்களின் பற்றறிகள் களவாடப்பட்டன. இது தொடர்பாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தினரால் மல்லாவி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது காலபோக உழவுப் பணிகள் நடைபெறுவதன் காரணமாக கமநல சேவை நிலையத்தின் டிராக்டர்கள் வயல்களில் இயக்கத்தை நிறுத்திவிடும் சந்தர்ப்பங்களில் வயல்களில் இன்னொரு டிராக்டரைப் பயன்படுத்திக் கட்டி இழுத்து இயங்க வைக்கும் செயற்பாடுகள் நாள்தோறும் நடைபெறுகின்றன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உழவில் ஈடுபட்டுள்ள கமநலசேவை நிலையத்தின் டிராக்டர்களினால் விவசாயிகள் நெருக்கடிகளைஎதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

டிராக்டர்கள் இயக்கத் தொடங்கினால் நாள் முழுவதும் வயலில் நிறுத்தமுடியாமல் தொடர்ச்சியாக உழுது கொண்டே இருக்க வேண்டும். இதனால் பல நெருக்கடிகளை விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக துணுக்காய் கமநலசேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியத்திடம் கேட்டபோது, பற்றறிகள் களவாடப்பட்டமையினால் தற்போதைய காலபோக உழவில் நெருக்கடிகள் எதிர்கொள்ளப்படுவதாகவும், களவாடப்பட்ட பற்றறிகள் ஒவ்வொன்றும் தலா 20 ஆயிரம் ரூபா பெறுமதியானவையென்றும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம் - என்றார். (த-18)

## சிமெந்து பைக்கெற்றுகள் கையளிப்பு



கிளிநொச்சி, ஒக் 16

கிளிநொச்சி மாவட்டத்தில் யு.என். ஹபிற்றற் நிறுவனத்தால் அமைக்கப்படும் நிரந்தர வீட்டுத் திட்டங்களில் வீடுகளை அமைக்கத் தொடங்கி வறுமை காரணமாக அவற்றை அமைக்கமுடியாத மிக வறிய குடும்பங்களை இனங்கண்டு ஹொல்சிம் சிமெந்து நிறுவனத்தினால் நன்கொடையாக சிமெந்துப் பைக்கெற்றுகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட 1000 சீமெந்துப் பைக்கற்றுகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி யு.என். ஹபிற்றற் அலுவலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது.

எஸ்.கலிஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யு.என் ஹபிற்றற் மாவட்ட முகாமையாளர் அன்வர் கான், பிரதித் திட்ட முகாமையாளர் முகமட் யசீர், ஹொல்சிம் சிமெந்து நிறுவனத்தின் பிரதிநிதி சபீர் கான், கரைச்சி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் கவாஸ்கர் ஆகியோர் கலந்துகொண்டு சிமெந்து பைக்கெற்றுகளை வீடமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு வழங்கினர்.

வீடுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டு அதனைத் தொடர்ந்து அமைக்க முடியாத மிகவும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டே இந்தச் சிமெந்துப் பைக்கெற்றுகள் வழங்கப்பட்டன. (த-18)

## கிளிநொச்சியில் புழுதி விதைப்பு மழை பெய்யாதமையால் பாதிப்பு

கிளிநொச்சி, ஒக் 16

கிளிநொச்சி மாவட்டத்தில் புழுதி விதைப்பை மேற்கொண்ட விவசாயிகள் மழை பொழிவு இடம்பெறாமையினால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

முன்னர் பெய்த மழையை அடுத்து வேகமாகப் புழுதி விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் தற்போது பயிர் முளைவிட்டுள்ளதை அடுத்து மழை வீழ்ச்சி இன்மையால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்கள் எல்லாம் நிரம்பி வழியும் காலமான இந்தக் காலத்தில் இவ்வாண்டு வறட்சி காரணமாக பல குளங்களில் நீர் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

இரணைமடுக்குளத்தில் 10 அடி 71.2 அங்குலம், அக்கராயனில் 1 அடி 8.5 அங்குலம், புதுமுறிப்பில் 3 அடி 2 அங்குலம், கனகாம்பிகைக்குளம், பிரமந்தனாறுகுளம், கரியாலை நாகபடுவான்குளம் ஆகியவற்றில் நீரில்லை. வன்னேரிக்குளம் 2 அடி 41.2 அங்குலம், கல்மடு 4 அடி 8 அங்குலம், குடமுறுட்டி 1 அடி 8 அங்குலம் என நீர் மட்டங்கள் குளங்களில் காணப்படுகின்றன.



பூநகரிப் பிரதேசத்தில் 12 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப் பரப்பில் மேற்கொள்ளப் பட்ட மானாவாரி நெற்செய்கை வறட்சியினால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. (த-18)

## காற்றினால் வீடு சேதம்

வவுனியா, ஒக் 16

வவுனியா வடக்கு நெடுங்கேணி குளவி சுட்டான் கிராமத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ஏற்பட்ட மழை, காற்று காரணமாக ஒரு வீடு பகுதி அளவில் சேதம் அடைந்துள்ளது.

அந்த வீட்டில் உள்ள அத்தியாவசியப் பொருள்களும், நெல் மற்றும் வான் பயிர்களும் காற்றினால் முறிந்து சேதம் அடைந்துள்ளன. (த-435)



சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள், விழிப் புலனற்றோர் நேற்றுக் காலை நடத்திய பேரணி கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலடியிலிருந்து ஆரம்பித்து கிளிநொச்சிக் கூட்டுறவு மண்டபத்தைச் சென்றடைந்தது. இதில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். (த-18)

## அரச பஸ் தரிப்பிட நுழைவாயிலில் காக்க வைக்கப்பட்ட நகர முதல்வர்

மன்னார், ஒக் 16

மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தினுள் செல்வதற்காக வாகனத்தில் வருகை தந்தபோது நுழைவாயிலில் நீண்ட நேரம் காத்திருக்க வைக்கப்பட்ட பின்னர் உள்ளே அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம் பெற்றது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

ஜனாதிபதியினால் மன்னார் சாலைக்கு சேவைக்காக வழங்கப்பட்ட 10 பஸ்களை வைபவ ரீதியாக வழங்கும் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் மேற் கொள்ளப்பட்டன.

வீதித்தடை போடப் பட்டிருந்த இடத்தில் பாதுகாப்பு அலுவலர் இல்லாமையினால் நகர சபைத் தலைவரின் வாகனம் உள்ளே செல்ல முடியாமல் நீண்ட நேரம் நுழைவாயிலில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன்போது தனியார் வாகனங்கள் அரச பஸ் தரிப்பிடத்தினுள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டதோடு பஸ் தரிப்பிட நுழைவாயிலில் வீதித் தடை அமைக்கப்பட்டுப் பாதுகாப்பு அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் கடமை நிமித்தம் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் அலுவலக வாகனத்தில் மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தினுள் செல்ல முயன்றார்.

எனினும் வீதித்தடை போடப்பட்டிருந்த இடத்தில் பாதுகாப்பு அலுவலர் இல்லாமையினால் நகர சபைத் தலைவரின் வாகனம் உள்ளே செல்லமுடியாமல் நீண்ட நேரம் நுழைவாயிலில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

சிறிது நேரத்தின் பின் அவ்விடத்துக்கு வந்த மன்னார் சாலை அதிகாரி ஒருவர் குறித்த வீதித் தடையை அகற்றி வாகனத்தை உள்ளே செல்ல அனுமதித்தார். (த-56)

## மன்னார் அரச செயலகத்தின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

### அமைச்சர் செனவிரத்ன நட்டார்

மன்னார், ஒக் 16

மன்னாரில் புதிய மாவட்ட செயலகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், புதிய அரச பஸ்களைக் கையளிக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னாருக்கு வருகை தந்த அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் செனவிரத்ன மன்னார் இ.போ.ச சாலைக்கு 10 பஸ்களை வைபவ ரீதியாகக் கையளித்தார்.

இதில் வர்த்தக கைத் தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன், அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் விஜய தகநாயக்க, மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகத்தை வலுப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட செயலகத்தின் புதிய நான்கு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மாலை 4:30 மணிக்கு மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம் பெற்றது. இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் செனவிரத்ன நட்டு வைத்தார்.

மன்னார் மாவட்டப் பிரதேச செயலகங்கள் மற்றும் வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட பொருள்களையும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கான உதவிகளையும் அமைச்சர் கையளித்தார். (த-56-421)



# வடக்கு மக்கள் மஹிந்தவுக்கு வாக்களிக்கவே மாட்டார்கள்

## அகிலவிராஜ் காரியவசம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.16
வடக்கு தமிழ் மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று ஐ.தேக. நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அண்மையில் தங்கம் பெற்றுக் கொண்டவர்கள், ஆளும் கட்சிக்கு வாக்களிக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முடக்கியது என்பது தெரிந்த விடயமே.
அதனால் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது"- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
"போரின் பின்னர் அனைத்து இன சமூகங்களும் ஒரேவிதமாக நோக்கப்படும் என அரசு அறிவித்த போதிலும், வடக்கு தமிழ் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன.
யாழ்ப்பாண மக்கள் ராஜபக்ஷ வழங்கும் எதனையும் ஏற்றுக் கொள்ளவார்கள்.
ஏனெனில் அது அவரது சட்டைப் பையில் இருந்து எடுத்துக் கொடுக்கப்படவில்லை என்பதனை அவர்கள் அறிவார்கள்"- என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.
இதுகுறித்து, அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"ஐக்கிய தேசியக் கட்சியே அனைத்து இன சமூகங்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக கடந்த காலங்களில் குற்றம் சுமத்தப்பட்டு வந்தது.
தற்போது அவர்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ள நிலையில் நாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைவடைந்திருக்க வேண்டும். ஆனால் தொடர்ந்தும் குற்றச் செயல்கள் நடைபெற்று வருகின்றன.
அரசு நல்லாட்சி பற்றிப் பரப்புரை செய்து வருகின்ற போதிலும், வடக்கு மாகாண சபையின் அதிகாரங்களை முடக்கி வருகின்றன. அரசின் பொய்யான தேர்தல்கள் அல்ல"- என்று தெரிவித்துள்ளார். (ற)



"யாழ்ப்பாண மக்கள் ராஜபக்ஷ வழங்கும் எதனையும் ஏற்றுக் கொள்ளவார்கள். ஏனெனில் அது அவரது சட்டைப் பையில் இருந்து எடுத்துக் கொடுக்கப்படவில்லை என்பதனை அவர்கள் அறிவார்கள்"

# சட்ட மா அதிபர் பாலித நேற்றுடன் பதவி ஓய்வு

கொழும்பு, ஒக்.16
சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ நேற்றுடன் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். நேற்று தனது 60 வயதில் காலடி எடுத்து வைக்கும் பாலித பெர்னாண்டோ, 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் சட்டமா அதிபராக நியமனம் செய்யப்பட்டார். சுமார் இரண்டரை வருடங்கள் இப்பதவியில் அவர் இருந்துள்ளார்.
ஜனாதிபதி மஹிந்த தரப்புக்கு நெருக்கமானவர் என்ற ஒரே காரணத்துக்காக பலரது எதிர்ப்பையும் மீறி பாலித பெர்னாண்டோ இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.
அரசின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் திவிநெகும சட்டமூலம், முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கை போன்றவற்றில் இவர் சர்ச்சைக்குரிய முறையில் அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தார்.
சட்ட மா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் பாலித பெர்னாண்டோ விரைவில் வெளிநாடொன்றுக்கான தூதுவராக நியமனம் செய்யப்படவுள்ளார் என்று அலரி மாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அதற்கிடையே வெற்றிடமாகியுள்ள சட்ட மாஅதிபர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது குறித்து ஜனாதிபதி இதுவரை தீர்மானிக்கவில்லை என்றும் அறியக் கிடைத்துள்ளது. (ற)



அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரரால், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.
அதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர பஸில் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பல அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டனர். (ற)

# வாழ்க்கையில் மறைப்பதற்கு எதுவுமில்லை - பொன்சேகா

கொழும்பு, ஒக்.16
எனது வாழ்க்கையில் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ள ஜனநாயக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, அரசுக்கு நெருக் கமான சில ஊடக நிறுவனாங் கள் மற்றும் ஊடகவியலாளர் களைப் பயன்படுத்தி எனக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.
ஜனநயாகக் கட்சியின் பிரதான காரியாலயத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"இரகசிய உளவுப் பிரிவு ஒன்றின் மூலம் இவ்வாறு சேறு பூசும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. என்னைப் பற்றி உளவாளிகளைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டிய அவசியம் என்ன என்பது புரியவில்லை. "- என்று தெரிவித்துள்ளார்.(ற)



பாகிஸ்தானின் தேசிய சபையின் சபாநாயகர் அயாஸ் ஷாடிக் மற்றும் அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் ஜெயலத் வீரக்கொடி ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. அந்த சந்திப்பில் பாகிஸ்தானிய அரசும் மக்களும் இலங்கையுடனான உறவின் பெறுமதியை அறிந்துள்ளனர் என்று அந்த நாட்டின் தேசிய சபையின் சபாநாயகர் அயாஸ் ஷாடிக் தெரிவித்துள்ளார். (ற)

# சுதந்திரக் கட்சி அமைப்பாளருக்கு கலந்துரையாடல்

கொழும்பு, ஒக்.16
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.
ஜனவரி மாதத்தில் நடைபெற விருப்பதாக கூறப்படும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கலந்துரையாடலுக்கே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை இன்று 16 ஆம் திகதியும் 18,19ஆம் திகதிகளில் மாவட்ட அமைப்பாளர்களையும் சந்திக்கவுள்ளார். (ற)

# வாக்காளர் பெயர் பதிவு; 80,000 மேன்முறையீடு

கொழும்பு, ஒக்.16
2014ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்படாத சுமார் 80 ஆயிரம் பேரிடம் இருந்து மேன்முறையீடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.
தற்போது மேன்முறையீடுகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.
இந்த விசாரணைகளில் பங்கேற்காதவர்களின் மேன்முறையீடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப் போவதில்லை எனவும் தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டுகின்றது. எவருக்கேனும் விசாரணைகளில் பங்கேற்க முடியாத பட்சத்தில், முன் அறிவிப்பின் ஊடாக திகதியை மாற்றிக்கொள்ள அல்லது கடிதம் மூலம் அதிகாரத்தை வழங்கி ஒருவரை விசாரணைகளில் கலந்து கொள்ளச் செய்ய முடியும் என பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார்.
வசிப்பிடத்தை உறுதி செய்வதற்காக, பதிவு செய்யப்பட்ட கடிதம் மூலம் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.
2014 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் எதிர்வரும் 31 ஆம் திகதி உறுதி செய்யப்படவுள்ளதுடன், அதனை கிராம உத்திகேத்தர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், உள்ளூராட்சி மன்றங்களில் காட்சிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற)



# ஜனாதிபதி தேர்தல் நடந்தால் ஆளும் கட்சிக்குப் பாதகமே

## ஆளும் கட்சி உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவிப்பு

மக்களால் உணரக்கூடிய் மாற்றங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காலம் முடிவடைந்ததன் பின்னர் எந்த நேரத்திலும் தேர்தல்களை நடத்த முடியும்.

கொழும்பு, ஒக.16
ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் ஆளும் கட்சிக்கு பாதக நிலைமை ஏற்படும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும் என்று தெரிவித்துள்ளார் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"ஊவா மாகாணசபைத் தேர்தலின் மூலம் எதிர்க்கட்சிகளினால் வெற்றியீட்ட முடியும் என்ற நிலைப்பாடு உருவாகியுள்ளது. ஆளும் கட்சியின் காலம் முடிவடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலைப்பாடுகள் உறுதி யாவதனை மாற்றியமைத்தே அரசின் தேர்தல்களுக்குச் செல்ல வேண்டும்.
எம்மில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
மக்களால் உணரக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். காலம் முடிவடைந்ததன் பின்னர் எந்த நேரத்திலும் தேர்தல்களை நடத்த முடியும்.
எனினும், அரசியல் ரீதியான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் மக்களினால் உணரக்கூடிய் மாற்றங்களை செய்ததன் பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
தற்போது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் ஆளும் கட்சிக்கு பாதக நிலைமை ஏற்படும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.
ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சிக்கும், எதிர்க்கட்சியினர் ஆளும் கட்சிக்கும் தாவ உள்ளதாக கருத்துக்கள் வெளியாகி வருகின்றன.
எனினும் ஆளும் கட்சியை விட்டு விலகிச் செல்லும் அளவிற்கு முட்டாள்கள் இல்லை என்றே நான் கருதுகின்றேன்.
பொது வேட்பாளர் அல்லது பல வேட்பாளர்கள் போட்டியிட்டால் அது எதிர்க்கட்சிகளுக்கு பாதக நிலைமைகளை ஏற்படுத்தக் கூடும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# கழிப்பறை உணவகம்









சீனாவில் விசித்திரமான வடிவமைப்பில் கழிப்பறை உணவகம் தொடங்கப்பட்டுள்ளது. இது மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

சீனாவின், தையுயானின் ஷஜுங்ஜி மாகாணத்தில் தொடங்கப்பட்டுள்ள கழிப்பறை உணவகத்தில், மேற்கத்தேய கழிப்பறை வடிவில் நாற்காலிகளும், கை கழுவும் பேசின்களைப் போன்று மேசையும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கழிப்பறையுடன் கூடிய குளியலறையில் நுழைவது போன்ற உணர்வு ஏற்படும் வகையில், தரை மற்றும் சுவர்களுக்கு, குளியலறை மாபிள்களும், கதவுகளில் கழிப்பறை பேப்பர் மற்றும் குழாய்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உணவகத்தில் பரிமாறப்படும், நூடில்ஸ், இறைச்சி, சைவ உணவுகளுடன், சுருண்ட பிரவுன் நிற பின்னல் போன்ற ஐஸ்கிறீம்களும் பிரபலமானவை. பார்ப்பதற்கு மனிதக் கழிவுகள் போல தோற்றமளிக்கும் இவை, கழிப்பறை வடிவிலான பாத்திரங்களில் பரிமாறப்படுகிறது.

சீனாவில் இயங்கும் உணவகங்களில் கழிப்பறை வசதி கிடையாது. இங்கு வரும் வாடிக்கையாளர்கள் உணவகத்துக்கு வெளியில் உள்ள பொதுக் கழிப்பறையைத்தான் பயன்படுத்த வேண்டும்.

புதிதாக திறக்கப்பட்டுள்ள கழிப்பறை உண்வகங்களுக்கு முதன் முறையாக வருபவர்கள் ஏராளமான கழிப்பறைகளைக் கண்டு ஆச்சரியமடைகின்றனர்.

# தானு வெட்ஸ் மானு - 2




மாதவன். கங்கனா ரணாவத் நடித்து 2011 ஆம் ஆண்டு வெளிவந்த படம் தானு வெட்ஸ் மானு. ஆனந்த் எல்.ராய் இயக்கி இருந்தார். பெரிய வெற்றி பெற்ற இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தை இப்போது எடுக்கிறார்கள். அதிலும் மாதவன், கங்கனா ரணாவத்தே நடிக்கிறார்கள்.

லண்டன் வைத்தியரான மாதவன் திருமணம் செய்து கொள்ள இந்தியா வருகிறார். கான்பூரில் கங்கனாவை பெண் பார்க்கிறார். ஆனால் வேறொருவரை காதலிக்கும் கங்கனா அதனை மாதவனிடம் சொல்கிறார். உடனே மாதவன் திருமணத்தை நிறுத்திவிட்டு லண்டன் சென்று விடுகிறார். ஆனாலும் அவரால் கங்கனாவை மறக்க முடியாது. நண்பன் திருமணத்துக்கு மீண்டும் இந்தியா வரும் மாதவன் அந்தத் திருமணத்தில் மீண்டும் கங்கனாவைச் சந்திக்கிறார். திருமணமாகும் நண்பன்தான் கங்கனாவின் காதலன் என்பது தெரிய வருகிறது. அவர்கள் காதல் முறிந்ததும் தெரிகிறது. இதனால் மாதவன், கங்கனாவை திருமணம் செய்து கொள்கிறார். இதனை நகைச்சுவையாகச் சொன்ன படம். இப்போது இரண்டாம் பாகத்தின் கதை. முதல் பாகம் முடிந்த இடத்திலிருந்து தொடங்குகிறது. மாதவனும், கங்கனாவும் திருமணமாகி 4ஆண்டுகளுக்குப் பிறகு எப்படி இருக்கிறார்கள். அவர்களுக்குள் வரும் பிரச்சினைகள் என்ன? அதற்கான தீர்வு என்ன என்பதை நகைச்சுவையாகக் காட்டப்போகிறார்கள். முதல் பாகத்தை இயக்கிய ஆனந்த். எல்.ராயே இரண்டாம் பாகத்தையும் இயக்குகிறார். அப்போது புதுமாப்பிள்ளையாக நடித்த மாதவன் இப்போது கொஞ்சம் தாடிவைத்த குடும்பத்தவராக நடிக்கிறார். முதல் பாகத்தில் புதுப்பெண்ணாக நடித்த கங்கனா இதில் ஒரு குழந்தைக்கு தாயாக நடிக்கிறார்.

# அணி வெற்றி நளினி



தென்னிந்திய சின்னத்திரை நடிகர்கள் சங்கத்துக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும். அந்த வகையில் 2014 - 2017 ஆம் ஆண்டுக்கான தேர்தல் கடந்த 12 ஆம் திகதி நடந்தது. சென்னை விருகம்பாக்கம் ஏ. கே. ஆர் திருமண மண்டபத்தில் நடந்த தேர்தலில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்களித்தனர். வாக்களிப்பதற்கு ஆயிரத்து 300 பேர் தகுதி பெற்றிருந்த போதும் 700 பேர் வரையிலேயே வாக்களித்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் நடிகை நளினி, முன்னாள் தலைவர் ராஜேந்திரன், சிவன் சீனிவாசன் ஆகியோர் தனித்தனி அணி அமைத்து போட்டியிட்டனர். வாக்கு பதிவு முடிந்ததும் முக்கிய நிர்வாகிகளுக்கான வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் நடிகை நளினி தலைமையிலான அணியினர் பெரும்பாலான வெற்றிகளைப் பெற்றனர். தலைவராக நளினியும், பொதுச் செயலாளராக நளினி அணியை சேர்ந்த பூவிலங்கு மோகனும், பொருளாளராக நளினி அணியைச் சேர்ந்த [illegible] வெற்றி பெற்றனர். வசனகர்த்தாவும் இயக்குநருமான லியாகத்அலிகான் தேர்தல் அதிகாரியாக இருந்து தேர்தலை நடத்தினார்.

# இவனும் தொழிலதிபர்

அமெரிக்காவில் சிறுவன் ஒருவன் 5 வயதிலேயே மிகச் சிறந்த தொழிலதிபராய் உருவெடுத்துள்ளான். அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தைச் சேர்ந்த சிறுவன் நிவேஸ் கோரி(வயது - 10).

தினமும் பள்ளிக்கூடத்துக்கு தனது தாய் காரில் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக, 5 வயதில் இருந்தே பிஸ்கெட்டுக்களை விற்கத் தொடங்கியுள்ளான்.

தற்போது வாரத்துக்கு 1000 இற் கும் மேற்பட்ட பிஸ்கெட்டுக்களை விற்று வரும் கோரி, சிறந்த தொழிலதிபராக உருவெடுத்துள்ளார்.

மேலும், குறிக்கோளுடன் இப்பொழுதில் இருந்தே உழைத்து வரும் கோரி, பிரன்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் சேருவதற்காக தற்போதே பணமும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.




இதுமட்டுமன்றி சிறந்த நடிகராகவும் உருவெடுத்துள்ள கோரிக்கு, சமூக வலைத்தளங்களில் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளது.



# சுறா

நியுஜெர்சியைச் சேர்ந்த ஆசிரியையும் சமூக ஆர்வலருமான அமென்டா பிரவெர் என்பவர் மத்திய கிழக்கு கடற்பகுதிக்கு பயணம் மேற்கொண்ட போது கடல் பகுதியில் சுறாவை மிக நெருக்கமாக புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளார். உலகில் சுறாவின் முகத்தை மிக அருகில் எடுக்கபட்ட படங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.



## சாயி சிந்தனை

**அகம்- அகங்காரம் இரண்டினதும் வித்தியாசம் என்ன?**

அகமானது தன்னை உடம்புடன் தொடர்பு படுத்திக் கொள்ளும் போது அகங்காரமாகின்றது. அகம் தெய்வீகமானது. அகங்காரம் மனித இயல்பானது.

விமர்சனம்

காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது எவர் என்று ஆண்களைக் கேட்டால் ஆண்கள் என்பர். பெண்களைக் கேட்டால் பெண்கள் என்பர். உண்மையில் தோல்வி என்றால் அது இருபாலாருக்கும் பொதுவா னதே.

இதையே திருப்பி அதிகமாக, காதலில் வெற்றி அடைபவர்கள் எவர் என்று கேட்டால் என்ன சொல்வீர்களோ அதே பதில் தோல்விக்கும் கிடைக்கும்.

நீங்களும் எழுதலாம்....

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது

ஆண்களா? பெண்களா?

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

# காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது ஆண்களே



தலைப்பை வாசித்தவுடன் இருபாலாரிடமும் வினவியபோது அதிகமான பெண்கள் ஆண்கள் என்றனர். ஆண்களின் தோல்விக்கான காரணங்களை அலசி ஆராய்ந்தால் ஒரு பெண் தன்னைப் பார்த்து சிரித்தவுடன், பழகியவுடன் அதைக் காதல் என்று ஆண்கள் அர்த்தம் கொள்வதே எனக் கொள்ள முடியும்.

உண்மையில் காதல் எப்போது எவர்மீது ஏற்படும் என்று நுணுக்கமாகக் கூற முடியாது. ஓர் ஆண் பெண்ணைப் பார்த்தவுடன் அவளது வயது, இனம், மதம் என்னவென்று தெரிந்து கொள்ளாமல் அந்த பெண்ணை விரும்பத் தொடங் குகின்றான்.

இது தெரியவந்ததும் பெண்ணானவள் தனது வயது அதிகம் என்பதைக் காட்டியோ, சமூகத்தில் இருவரும் ஒரே மதத்தில், இனத்தில் இருந்தால் தான் வாழ முடியும் என்று கூறியோ, தனது பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக எதுவும் செய்ய முடியாது என பல காரணங்களைக் கூறியோ அந்த ஆண் மகனது காதலை உதாசீனப் படுத்துகின்றாள்.

மேலும் பெண்கள் ஆடம்பர வாழ்வைத் தேடி போகின்றனரே தவிர அவர்க ளுடைய காதல் ஆண்களின் ஏ.ரி.எம். காட், டெபிட் காட், கிரடிட் காட், மாஸ்ரர் காட், வீசா இவற்றையே கருத்தில் கொண்டதாகவே அமைகிறது. சில பெண்கள் கறக்கும் வரைக்கும் கறந்து கொண்டு அவனை விட வசதி வாய்ப் புக்கள் அதிகமான ஆண்மகன் கிடைத் தவுடன் பாம்பு சட்டையை கழற்றுவது போல் தமது காதலை மாற்றி விடுவர்.

உண்மைக் காதல் தோற்காது என்றே கூற வேண்டும். ஆண் தாடி வளர்த் தவுடன் காதலில் தோல்விய டைந் தவன் என்கிறீர்களே பெண் தோல்வி யடைந்ததை எவ்வாறு இனம் காட்டு வது?

ஆண் தான் விரும்பிய பெண் கிடைக்கும் வரைக் கும் எவ்வளவு காலமும் காத்திருப்பான். பெண் காத் திருந்ததாக கூற முடியுமா?

**காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது ஆண்கள் தான். ஆண்களுக்கு அது தோல்வி அல்ல வாழ்க்கை என்ற பாடம் கற்றுத் தந்த தத்துவமே.**

இரு பாலாரும் ஒருவரை ஒருவர் விரும்புவதாக எண்ணி னால் அடுத்த கட்டம் அவரவர் வீட்டில் தத்தமது விருப்பத்தை தெரிவித்து பெரியவர்களின் சம்மதத்துடன் மணம் புரிதலே.

பெற்றோர் என்றுமே காதலுக்கு எதிரிகள் அல்லை என் பதை காதலர்கள் புரிந்து கொண்டால் காதலில் தோல்வி ஏற்படாது. காதலிக்க நேரமில்லை, காத லிப்பார் யாரு மில்லை என்ற பழைய பாடல் நினைவுக்கு வருகிறது. சிலர் பொழுது போக்குக்காகவே காதலிக்கின் றனர். காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது ஆண்கள் தான். ஆண்களுக்கு அது தோல்வி அல்ல வாழ்க்கை என்ற பாடம் கற்றுத் தந்த தத்துவமே.



இப்பண்டிகைக் காலத்தைக் கொண்டாட HNB நிறையவே தருகின்றது

உங்கள் HNB அட்டையை (CREDIT/DEBIT) உபயோகித்து 25% வரை விலைக்கழிவினைப் பெற்றுக்கொள்ளுங்கள்

| | | | |
|---|---|---|---|
| Nellai Silks<br>நெல்லை சில்க்ஸ்<br>நெல்லியடி | 20% வரை | Topaz<br>டொபாஸ்<br>யாழ்ப்பாணம் | 15% |
| Fashion Park<br>பஷன்பார்க்<br>சுன்னாகம் | 25% வரை | Top Lady<br>டொப் லேடி<br>வவுனியா | 15% வரை |
| One Minute<br>ஒன்மினிட்<br>மன்னார் | 20% | Venukka Text<br>வேனுகாடெக்ஸ்<br>வவுனியா | 5% |
| Fashion Connection<br>பஷன் கனெக்ஷன்<br>கிளிநொச்சி | 15% | Ishara Textile<br>இஷாரா டெக்ஸ்டயில்<br>யாழ்ப்பாணம் | 10% |
| Arun Tex<br>அருண் டெக்ஸ்<br>நெல்லியடி | 15% | Family Style<br>பமிலிஸ்டயில்<br>வவுனியா | 10% |
| Style Park<br>ஸ்டயில் பார்க்<br>யாழ்ப்பாணம் | 10% | Rasi Silks<br>ராசி சில்க்ஸ்<br>யாழ்ப்பாணம் | 10% |
| City Asraf Palace<br>சிட்டி அர்சப் பலஸ்<br>மன்னார் | 5% | Sivaganesan Textile<br>சிவகனேசன்டெக்ஸ்டயில்<br>யாழ்ப்பாணம் | 10% |
| SAR Bookshop<br>SAR புத்தகசாலை<br>மன்னார் | 5% | | |

இச்சலுகை ஒக்ரோபர் 15ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி 2014 வரை மட்டுமே

HNB CARDS

Don't postpone happiness

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..................................................

முகவரி :-..................................................

.......................... திகதி


.......................... கையொப்பம்

**இளவல்கள் வட்டம்**,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நட்பா, காதலா?

நட்பு, காதல், மணவாழ்க்கை மூன்றுக்கும் உறவுதான் அடிப்படை. இந்த மூன்றின் இலக்கணங்க ளும் வேறு வேறு. நட்பு திறந்த அமைப்பைக் கொண்டது. அதில் விசாலமான இடம் இருக்கிறது.

விட்டுக்கொடுத்தலும், வளைந்து கொடுத்தலும் இருக்கின்றன. பரஸ்பரம் மரியாதையும், மதிப்பும் இருக்கின்றன. மற்றவரின் தனித்துவம் அங்கீகரிக்கப்படுகிறது.



காதலில் நெருக்கம், ஆழம், வீச்சு எல்லாமே அதிகம். ஆனால் பரஸ்பர மரியாதையும், மதித்தலும் குறைவு. தனித்துவம் குறித்த அங்கீகாரம் மறுக்கப் படுகிறது. சொந்தம் கொண்டாடுதல் அதிகரிக்கிறது. நெருக்கம் அதிகமானால் இவை யிரண்டும் ஏன் குறைய வேண்டும்?

மண வாழ்க்கையில் நெருக்கம் இன்னும் அதிகரிக்கிறது. தனித்துவத்துக்கு ஏறக் குறைய இடமே இல்லாமல் போகிறது.

கணவனும், மனை வியும் ஒருவருக்கொருவர் சொந்தமான பொருளாகிவிடுகிறார்கள். விதிகள் பெருமளவுக்கு உறவை ஆள்கின்றன. இதைச் செய்யலாம். இதைச் செய்யக் கூடாது. அதற்கு அனுமதி உண்டு; இதற்குக் கிடையாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் அமைகின்றன.

பயத்தின் அளவும் மாறுபடு கிறது. நட்பில் பயத்தின் பங்கு மிகக் குறைவு. காதலில் அது அதிகரிக்கிறது. மண வாழ்க்கையில் பெரும்பாலும் பயமே உறவின் அடிப்படையாக இருக்கிறது. பயம் இருக்கும் அளவுக்கு உண்மை யான நெருக்கம் இல்லாமல் போகிறது.

உறவின் வெளியைக் காதல் ஏன் குறுக்க வேண்டும்? மண உறவு ஏன் பயத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்? காதல், மண உறவு இரண்டிலும் வரையறைகள் அதிகம். அதனால் தனித்துவம் வாய்ந்த ஒரு ஆணும் பெண்ணும் காதலன், காதலி, கணவன்-மனைவி என்ற உறவு எல்லைக்குள் மாட்டிக் கொண்டு தனித் துவத்தை இழக்கிறார்கள். இந்த உறவுகள் பற்றிய மறுபரிசீலனை மிகவும் அவசியம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அவமானப்பட்டது யார்?

தமிழர்கள் மத்தியில், ஒருவர் பேசும், பழகும் விதத்தை வைத்தே தனிமனித மதிப்பீடுகள் செய்யப்படும். அவர் பேசும் தோரணையையும், மொழி வழக்கையும் வைத்து இவர் இந்தச் சூழலில், இப்படி வளர்ந்தவர் என்று ஆளுமை சார்ந்தமுடிவுகளைக்கூட நம்மவர்கள் வழங்கி விடுவார்கள். அதில் அதிகளவு உண்மையும் இருப்பதாகவே படுகின்றது. ஒருவர் பொதுவெளியில் நல்லது செய்தாலோ அல்லது கெட்டது செய்தாலோ, உடனடியாக நம்மவர்கள் கேட்கும் முதல் கேள்வி, எந்தப் பள்ளிக்கூடத்தில படிச்சனி? எந்த வாத்தியாரிட்டைப் படிச்சனி? என்பதே ஆகும். இந்தக் கேள்விகளுக்குப் பின்னரே, பெற்றோர் பெயர் விசாரிக்கப்படும். ஆகவே தீய காரியமொன்றைச் செய்த, கூடாத சொற்களை உதிர்த்த ஒருவராலோ அதிகம் அவமானப்படுவது அவர் கற்ற பாடசாலையும், அவருக்குக் கற்பித்த ஆசிரியர்களும், அவர் வாழ்ந்த சூழலும் தான். அதே நேரத்தில் அவர் செய்யும் நற்செயல்களால் இவற் றுக்குப் பெருமையும் கிடைக்கும்.

உதாரணத்துக்கு இந்த இடத்தில் ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டலாம். அண்மையில் இந்த நாட்டின் ஜனாதிபதி, தமிழர்களின் பூர்வீக பகுதியான வடக்குக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அவர் முன்னிலையில் கூடியிருந்த பெருந்தொகையான தமிழர்களின் மத்தியில் உரையாற்றவும் தலைப்பட்டிருந்தார்.

அவர் ஆற்றிய உரைகளில் மிக முக்கியமாக ஊடகங்களாலும், பொது மக்களாலும் பேசப்பட்ட விடயம், வட மாகாண சபையினரை வைக்கோல் பட்டடை நாய்கள் என விமர்சித்தது ஆகும்.

தமிழ் மொழிக்கே உரிய நாட்டாரியல் மொழி வழக்குகளில் சிறப்பானவை பழமொழிகள் மற்றும் சிலேடைகள். இவற்றைக் கொண்டு வெளிப்படையாக சொல்ல முடியாதவற்றை குறிப்பால் உணர்த்திவிடலாம். நல்லவைகளைப் புகழவும், தீயவைகளை கீழ்த்தரமாக இகழவும் இந்தப் பழமொழிகளை தமிழ் மொழி இன்னமும் வைத்திருக்கின்றது. ஜனாதிபதி பொதுவெளியில் மக்கள் முன்னிலையில் வைத்துக் குறிப்பிட்ட 'வைக்கோல் பட்டடை நாய்கள்' என்பது மிகக் கேவலமான நாட்டாரியல் மொழி வழக்கு ஆகும். எமது கிராமத்தவர்கள் இந்தச் சொற்களை ரகசியமாகப் பயன்படுத்துவர். அதன் விளக்கம் என்னவெனில், வைக்கோல் பட்டடைக்குள் படுத்திருக்கும் நாய், மாட்டை வைக்கோலை சாப்பிட விடாது குரைக்கும். அதேவேளையில் தானும் அதனை உண்ணாது, குரைத்துக் கொண்டேயிருக்கும் என்பது.

நாய் என்ற விலங்கைச் சுட்டி ஒருவரைப் பேசுதலென்பது மிகத் தாழ்வானதாகவும், கீழ்த்தரமானதாகவும் இருக்கின்றபடியால், இந்த மொழி வழக்கைப் பலர் முன்னிலையில் பயன்படுத்துவதில்லை. ஆனால் ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றவர், அதே நாட்டின் ஒரு பகுதியை ஆளுகின்ற தலைவர்களை நோக்கி இவ்வாறான கீழ்த்தரமான வார்த்தைகளை பயன்படுத்திப் பேசினார்.

அந்த வார்த்தைகளால் சிறுமைப்பட்டது யார்? வட மாகாண சபையினரா? இந்த நாட்டின் ஜனாதிபதியா? அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு அங்கு கூடியிருந்த மக்கள், இந்த மொழி வழக்கை ஜனாதிபதி வாயால் கேட்டவுடன் உடனடியாகவே என்ன நினைத்திருப்பர்? இங்கு உண்மையில் அவமானப்பட்டது யார் என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ளுமளவுக்குத் தமிழ்ப் பண்பாட்டையும், இங்கிருக்கும் மொழிப் பயன்பாட்டையும் அறிந்தவரல்லர் அவர். அவருக்குத் தமிழ் சொல்லிக்கொடுத்த 'புலமையாளர்கள்' இனிமேலாவது தமிழ் மரபில் சபைப் பேச்சு ஒன்று உண்டு என்பதை சொல்லிக் கொடுக்க வேண்டும். அது முடியாவிட்டால், திருக்குறளில்


திருவள்ளுவரும், ஔவையார் பாடல்களில் ஔவையாரும் சபையில் ஒருவர் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் எனக் கூறியிருப்பதை சொல்லிக் கொடுக்க வேண்டும்.

வடக்குக்கு ஜனாதிபதி வரும்போதெல்லாம் அவர் கூடவே ஒட்டிக்கொண்டும், தமிழ் சொல்லிக் கொடுத்துக் கொண்டும் இருக்கின்ற அமைச்சரால் இதைச் செய்ய முடியாது. ஏனெனில் அவரும் அதே மேடையில் தான் சிலேடையாக, குறியீடாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு, அவர் கற்ற பாடசாலக்கும், தமிழ் கற்பித்த வாத்தியாருக்கும், அவமானத்தை அள்ளிவீசியவர். ஜனாதிபதிக்குத் தமிழ் கற்பிப்பவர்கள் இந்த அமைச்சருக்கும் தமிழை, மொழி வழக்கை சிறப்பாகக் கற்பிக்கவேண்டும்.

# நம்பிக்கை தரும் நரேந்திர மோடி

சேரலாதன்

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அடுக்கடுக்காக அதிரடித் திட்டங்களை வெளியிட்டு வருகின்றார். மக்கள் அனைவருக்கும் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து வைத்தல், இந்தியாவைத் தூய்மைப்படுத்தும் திட்டம், சுமார் 2,500 கிராமங்களை உடனடியாக அபிவிருத்தி செய்தல், அந்நிய நாடுகளிலிருந்து முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலான 'மேக் இன் இந்தியா' திட்டம், நதிகள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் திட்டம் இவ்வாறு தினமும் புதிது புதிதாக அறிவிப்புக்களை அவர் வெளியிட்டு வருகின்றார்.



நரேந்திரமோடி என்ற அந்த மனிதரின் மீது இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளில் வாழும் மக்களிடத்திலும் ஓர் அதீத நம்பிக்கை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

### ஊழல் இல்லாத இந்தியா

ஊழல் இல்லாத இந்தியா என்பதே அவரது கனவாக உள்ளதையும் காண முடிகின்றது. தொலைக்காட்சிகளில் தோன்றும் போது அவர் தூங்கி வெகு நாள்களாகின்றன என்பது போல் தோற்றமளிக்கின்றார். சில இடங்களில் பேச முடியாத அளவுக்கு அவரது குரல் கரகரப்புடன் காணப்படுகின்றது. மோடியின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது வளமான இந்தியா வெகு விரைவில் உருவாகி விடும் என்ற நம்பிக்கை மனதில் பிறக்கின்றது. முன்னாள் பிரதமர்களைவிட மோடிக்கு சில சிறப்புக்கள் உள்ளன. இந்தியா சுதந்திரம் அடைந்ததன் பின்னர் பிறந்தவர் என்பதும், அவரைப் பெற்றெடுத்த தாயார் உயிரோடு இருப்பதும் சிறப்பான அம்சங்களாகும். மேலும், இந்துத்துவத்தில் பெரும் நம்பிக்கை கொண்ட அவர் அதனைப் பிசகாது கடைப்பிடித்தும் வருகின்றார். அண்மையில் பிரதமர் மோடி ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றிருந்த போது நவராத்திரி விரதத்தை முன்னிட்டு அமெரிக்க அதிபர் ஒபாமா அளித்த விருந்தின்போது உணவு எதனையும் தொடாது ஒதுக்கியமையும் வெறும் எலுமிச்சைரசத்தை மட்டுமே அருந்தியதும் இதற்கொரு சிறந்த உதாரணமாகும்.

### இன்று வரை பிரம்மசாரி

அவர் சிறு வயதில் விருப்பமின்றி திருமண பந்தத்தில் இணைக்கப்பட்ட போதிலும் இன்றுவரை ஒரு பிரம்மசாரியாகவே தமது வாழ்க்கையைக் கடத்தி வருகின்றார். அவரது தனிப்பட்ட நடத்தை பற்றி தவறான தகவலொன்றும் வெளிவராமை அவருக்கு மேலும் சிறப்புச் சேர்க்கின்றது.

இவருக்கு முன்பாகப் பிரதமர் பதவியில் அமர்ந்திருந்த மன்மோகன்சிங், சோனியா குடும்பத்தின் தாளத்துக்கு ஏற்பவே ஆடிக் கொண்டிருந்தார். அவருக்கெனத் தனியானதொரு கொள்கை இருக்கவில்லை. முடிவுகளை எடுப்பதில் தடுமாறிக் கொண்டிருந்தார். மிகப் பெரிய நாட்டின் தலைமைப் பதவியில் அமர்ந்திருந்த அவர் அதற்கேற்ற வகையில் நடந்து கொள்ள முடியாத அளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் முடங்கிக் கிடந்தார். ஆனால் மோடி பிரதமர் கதிரையில் அமர்ந்தபின்னர் குறுகிய காலத்தினுள்ளேயே மாற்றங்கள் தெரியத் தொடங்கி விட்டன.

### குஜராத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்

முன்னர் அவர் தாம் பிறந்த குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்து, அந்த மாநிலத்தை சகல வகையிலும் இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டினார். இத்தனைக்கும் குஜராத் இந்திய - பாகிஸ்தான் எல்லையோரத்தில் அமைந்திருப்பதால் எப்போதுமே ஆபத்தை எதிர்கொண்டு வந்தது. மேலும், நிலநடுக்கம் போன்ற இயற்கை இடர்களுக்கும் அங்கு குறைவிருக்கவில்லை. இத்தனைக்கும் மத்தியில் அந்த மாநிலத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றமை மோடியின் திறமைக்கு ஒரு சான்றாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது இந்தியாவின் வடக்கு மாநிலங்களில் வீசிய மோடி அலை தெற்கில் அவ்வளவாக வீசவில்லை. குறிப்பாகத் தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் பாரதீய ஜன தாக் கட்சியினால் பெரிய வெற்றிகளைப் பெற முடியவில்லை. இதனை மோடியும் உணர்ந்து கொண்டிருப்பார். இதனால் அந்த மாநிலங்களில் பாரதீய ஜனதாக் கட்சியை தூக்கி நிறுத்தி வைப்பதற்கான திட்டங்கள் முழுவீச்சில் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது. அதிலும் எவராலும் அசைக்க முடியாதவர் எனக் கருதப்பட்ட முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதால் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பாரதீய ஜனதாக் கட்சி பெருமளவில் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. நடிகர் ரஜினி காந்தை வளைத்துப் பிடிக்கும் முயற்சியை இதன் ஓர் அங்கமாகவே கருதமுடிகின்றது. மேலும், சிறைக்குச் சென்றவர்களுடன் கூட்டு என்ற பேச்சுக்கே இடமில்லையென மோடி பகிரங்கமாக அறிவித்துள்ளதால் ஜெயலலிதா தலைமையிலான அ.இ.அ.தி.மு.கவுடன் அவர் உறவுகளை ஏற்படுத்தமாட்டாரென்பது தெளிவாகத் தெரிகின்றது.

### திறந்த வாழ்க்கை வரலாறு

தேசபிதா மகாத்மா காந்தியின் சுயசரிதை ஒளிவு மறைவற்ற ஒரு திறந்த புத்தகமாகக் காணப்படுவதைப் போன்றுமோடியின்வாழ்க்கை வரலாறும் அமைந்துள்ளது. தமது இளம் பராயத்தில் ரயில் நிலையத்தில் தேநீர் விற்றதை அவர் ஒரு போதுமே மறைத்ததில்லை. ஆனால் குடும்ப பாரத்தைச் சுமக்கும் பொருட்டுத் தாம் பங்களித்ததைப் பெருமையாகவே கூறுவார். அவரது சகோதரர்கள் இன்னமும் எளிய வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். மோடி மூன்று முறை முதலமைச்சர் பதவியில் அமர்ந்திருந்த போதிலும் தமது குடும்பத்தைச் சேர்ந்த எவருக்குமே அவர் சலுகை காட்டியதில்லை. அவரைப் பெற்றெடுத்த தாயார் மோடியின் சகோதரர் ஒருவரது வீட்டில் தங்கியுள்ளார். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மோடி அவரைச் சென்று பார்ப்பதும், ஆசீர்வாதம் பெறுவதும் வழக்கமான நிகழ்வுகள். தமது பிறந்த தினத்தன்று தாயாரின் பாதத்தில் வீழ்ந்து மோடி ஆசீர்வாதம் பெற்றதும், தாயார் தமது நடுங்கும் கையால் ஊட்டிய இனிப்பை உண்டதும் பார்த்தவர்களின் கண்களில் நீரை வரவழைக்கத் தவறவில்லை. அந்த வேளையில் சீன ஜனாதிபதி இந்தியா வந்திருந்த போதிலும் மோடி தனது திட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாது அவரைத் தாம் தங்கிய இடத்திலேயே சந்தித்தமை அவரது மனவுறுதிக்கு ஒரு சான்றாக அமைந்து விட்டது.

### இலங்கைத் தமிழர்களிடத்தில் அக்கறை

இதற்கெல்லாம் மேலாக மிகவும் மோசமான நிலையில் காணப்படும் இலங்கைத் தமிழர்கள் விடயத்திலும் அவர் தமது கவனத்தைச் செலுத்தியுள்ளார். பல்வேறு தடைகளுக்கும், எதிர்பார்ப்புக்களுக்கும் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்தியத் தலைநகரில் வைத்து மோடி சந்தித்ததும், ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக உரையாடியதும், இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அமெரிக்காவில் சந்தித்தபோது எடுத்துக் கூறியதும் இலங்கைத் தமிழர்களின் மனங்களில் ஏதோவொரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்பதை எவருமே மறுக்க முடியாது.

நரேந்திரமோடி என்ற அந்த மனிதரின்மீது இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களிடம் கூட ஓர் அதீத நம்பிக்கை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. சிலர் இந்தியாவை மீட்க வந்த மேய்ப்பராகவும் அவரைக் கருதுகின்றனர். ஆனால் அவர் தமது மீட்பராகவும் மாற வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அந்த நம்பிக்கையையும் பொய்ப்பிக்காத வகையில் மோடியும் நடந்து கொள்வார் என எதிர்பார்ப்போம்!

■ கு.மைத்ரேயி

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில்

## விவசாயத்தின் பங்களிப்பு

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கை, போருக்குப் பின்னரான விரைவான பொருளாதார வளர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருப்பதாக உலக நாடுகள் வியந்து பார்த்துக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் அதன் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத்தின் பங்களிப்பு பற்றி உற்று நோக்குவது பொருத்தமுடையதாகும்.

"ஆசியாவின் ஆச்சரியமாக" விளங்கும் இலங்கை, ஒரு விவசாய நாடாகவே அடையாளம் காணப்படுகிறது. யானை கட்டிப் போரடித்த மன்னராட்சி காலத்தை வரலாறாகக் கொண்ட எமது நாடு விவசாயத்தை பாரம்பரியமான தொழிலாகக் கொண்டிருந்தது. மேலும் நெற்பயிர்ச் செய்கையில் தன்னிறைவெய்திய காலங்கள் வரலாற்றில் இன்றும் வியந்து பார்க்கப்படுகிறது.



எமது நாட்டின் தட்ப வெப்ப காலநிலை விவசாயத்துக்கு பெரிதும் உகந்ததாக அமைந்துள்ளதுடன் இந்தச் சிறிய தீவினுள் மூன்று பிரதான காலநிலை வலயங்கள் அமைந்துள்ளமை பல்வகைப்பட்ட பயிர்ச் செய்கைக்கு ஏதுவாக அமைந்துள்ளது.

எமது ஏற்றுமதி வருமானத்தில் கணிசமான தொகையை பெற்றுத் தரும் தேயிலைப் பயிர்ச் செய்கை இலங்கைப் பொருளாதாரத்தில் விவசாயத்தின் பங்களிப்பை உலகுக் உணர்த்தி நிற்கின்றது.

எமது நாட்டின் கடந்த ஆண்டுக்கான மொத்த தேசிய உற்பத்தி 134.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது இதற்கு முன்னைய ஆண்டான 2012 ஆம் ஆண்டை விட 6.3வீதம் வளர்ச்சியைக் எட்டியுள்ளது.

மேலும், மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு 10.6 வீதம் ஆகும். இது கைத்தொழில் மற்றும் பொதுச் சேவைத் துறைகளை விடக் குறைவாகும்.

மேலும், கடந்த 30 ஆண்டுகளை உற்று நோக்கின் மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு கணிசமான அளவு குறைந்துள்ளது. இங்கு 70 வீதமான மக்களின் வாழ்வாதாரமாக விவசாயத் துறை விளங்குகிறது. அதிலும் கிராமிய பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாக விவசாயத்துறை விளங்குகிறது. எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அனைத்து மக்களும் அனுபவிக்க வேண்டுமெனில், அது விவசாயத்துறையின் வளர்ச்சியினூடாகவே சாத்தியமாகும்.

இருந்த போதிலும் நடைமுறையில் கடந்த வருடம் நிலவிய கடும் வறட்சி மற்றும் எதிர்பாராத காலநிலை மாற்றத்தால் விவசாயத்துறை பாதிப்புக்களை எதிர்நோக்கி இருந்தது.

ஆயினும் அரசின் பொருளாதாரக் கொள்கைகள் விவசாயத் துறையை வளர்க்கும் நோக்குடன் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் குறைந்த வட்டி வீதத்தில் விவசாயத்துக்கான கடன் வசதிகளை வழங்குகின்றன.

இத் தருணத்தில் விவசாயத்தை பாதுகாத்து இந்தத் துறையை இலாபகரமான தொழிற்துறையாக மாற்றியமைக்கக் கூடிய நடைமுறைச் சாத்தியமான திட்டங்கள் காலத்தின் தேவையாகும்.

இதனடிப்படையில் விவசாயத்தை தனிநபரின் தொழிலாகக் கொள்ளும் எண்ணத்திலிருந்து விடுபட்டு கூட்டு முயற்சியாக தொழிற்படும் போது சில நிச்சயமற்ற தன்மைகளிலிருந்து விடுபட முடியும். இதற்கு விவசாயத்துறையில் கூட்டுறவின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும்.

விவசாயத் துறையானது, பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் வளர்ச்சி அடைய வேண்டும்.



- நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து அனைத்து மக்களுக்கும் தரமான உணவுப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.
- இளைய சமுதாயத்துக்கு தேவையான சுயதொழில் வாய்ப்புக்களை வழங்கி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவுதல்.
- வெளிநாட்டு இறக்குமதியைக் குறைத்து தன்னிறைவான நாடாக மாற்றமடைதல்.
- சூழலுக்குநேசமானவாழ்க்கை முறை மற்றும் நீடித்திருக்கக் கூடிய அபிவிருத்தியை எட்டுதல்.

மேற்படிநோக்கங்களை நிறைவு செய்வதற்கான இயற்கை, மனித வளங்களும் உழைக்கும், திறனுள்ள மக்களும் மலிந்து கிடக்கும் எமது நாடு விவசாயத்துறை வளர்ச்சியினூடாக ஆசியாவின் ஆச்சரியமாக மாறுவது சாத்தியமே.

ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள எமது நாட்டில் வடக்கு மாகாணம் உலகின் கவனத்தை ஈர்த்து வைத்திருக்கும் இந்தத் தருணத்தில் மொத்த தேசிய உற்பத்தியில் எமது பங்களிப்பு என்ன? விவசாயத் துறையின் இன்றைய நிலை என்ன? என்று சிந்திப்பது சாலச் சிறந்தது.

மொத்த தேசிய உற்பத்தியில் வடக்கு மாகாணத்தின் பங்களிப்பு 4 வீதமாகும். இது கடந்த காலங்களை விட அதிகரித்துள்ளது. ஒன்பது மாகாணங்களில் அதிகபட்சமாக மேல் மாகாணம் 43.4 சதவீத பங்களிப்பைச் செலுத்துகிறது. பொருளாதார ரீதியாக எந்த வொரு சமூகம் பலமடைகிறதோ அந்தச் சமூகம் அரசியல் பலம் அடைந்ததாக மாறுவது திண்ணம். வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டு ஓராண்டு கடந்த நிலையில் எமக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு உட்பட்டு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதே மக்களின் எதிர்பார்ப்பு எனலாம்.

இதன் அடிப்படையில் 13ஆம் திருத்தச் சட்டத்தின் நிரல் I இல் மாகாண சபைக்கு விவசாயம், கால்நடை அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிரல் III இல் மத்திய அரசுடன் இணைந்து விவசாயத் துறையை வளர்க்கும் திட்டங்களை வகுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எமக்கு பொருத்தமான செயற்திட்டங்களை நாமே உருவாக்கி உலகுக்கு உணவளிக்கும் உன்னதகலையாம் விவசாயத்தையும் விவசாயியையும் வளமான எதிர்காலத்தை நோக்கி இட்டுச் செல்வது காலத்தின் தேவையாகும்.

---

■ குமாரசாமி யோகன்ராஜ்

*(நேற்றைய தொடர்ச்சி)*

# எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும்

# இலங்கையின் கல்விச் சீர்திருத்தம்

சுறுசுறுப்பு மிக்க புதிய உலகின் கேள்விகளுடன் இசைந்து செல்லும் பொருட்டு இலங்கையின் உயர் கல்வித் துறையில் மிகப் பெரும் மாற்றமுறும் தன்மையொன்று இடம்பெற்று வருகின்றது. எனவே கல்வித் துறையானது பாரம்பரிய மாதிரிகளிலிருந்து விலகி எந்த நாட்டுக்கும் செல்லக்கூடிய தொழில் படையொன்றை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்ற ஊழியர்களின் தேவையுடன் இணைக்கின்றதொரு விதத்தில் தகுதியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமையொன்றுக்கு மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது. உயர் கல்விக்கான கேள்வியுடன் இணைந்து செல்வதற்கு அரசால் மாத்திரம் முடியாததாகையால் உயர் கல்வியில் அரசின் தனியுரிமை பெரும் அழுத்தங்களுக்கு உட்படுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது. மேலும், மாணவர்களின் எதிர் நோக்கப்படும் கல்வியின் தரத்துக்கும் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் தரங்களுக்கிடையே இடைவெளி உருவாகின்றது. இதனை கிடைக்கத் தக்க வளங்களின் மூலம் நிரப்புவது இடர்பாடானதாகும். ஆகவே இலங்கைப் பல்கலைக்கழகங்களினால் வழங்கப் படும் பாடநெறிகளை பன்முகப்படுத்துவது அவசியமாகவுள்ள வேளையில் உலக சந்தையின் உச்ச நிலையை மாணவர்கள் அடைவதற்கு மாணவர்கள் வெளிப்படுத்த வேண்டிய தேர்ச்சி மட்டத்தை விரிவாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

உயர் கல்வியில் அரசின் ஏக போகத்தைக் குறைக்கும் நோக்குடன் முறைமை சார்ந்த இரு அடுக்கு முறைமையொன்றை நோக்கி நகர்வது பொருத்தமானதாகும். இதில் கல்வியியல் சார்ந்த விசேட தகைமைக்காக அரசும் தனியார் துறையும் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் தன்மை காணப்படுகிறது. அரசு அல்லாத துறை நிறுவனங்களினால் பேணப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட தகைமைத் தரங்கள் தொடர்பில் உயர் கல்வி அமைச்சில் அரசு அல்லாத துறைப் பிரிவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அங்கீகரிப்பு மற்றும் தகைமைச் சான்று தொடர்பில் துணை நிலைக் குழுவொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. மேலும் ஆள்கள் - நிறுவனங்கள் ஏதேனும் பட்டம் அல்லது கல்விசார் சான்றிதழ்களும் வழங்குவதை குறிப்பாகத் தடை செய்கின்ற விதத்திலமைந்த 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 128 ஆவது பிரிவுக்கு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக முறைமையின் உச்ச நிறுவனமாகத் தொழிற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர் கல்வி நிறுவனங்களை முகாமைத்துவம் செய்து சீரான நடவடிக்கைகளை உறுதிப் படுத்தியது.

2013 இல், 2011/ 12 கல்வியாண்டுக்கான வழமையான மற்றும் சிறப்பு ஏற்பாடுகளின் கீழ் பல்கலைக்கழக முறைக்கு அனுமதிக்கப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 28,908 ஆகும்.

மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தற்பொழுது ஜி.சீ.ஈ. உ.த. பாடப் பிரிவாக வழங்கப்பட்டுள்ள தொழிநுட்பவியல் பாடங்களை பல்கலைக்கழக நுழைவுப் பாடங்களாக ஒப்புதளித்திருப்பதுடன் 2016 இல் மாணவர்களை அனுமதிப்பதற்காக தொடர்பான பீடங்களில் தொழிநுட்பவியல் திணைக்களங்களை உருவாக்க பல்கலைக்கழகங்களை தூண்டி வருகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2013 இல் 26 புதிய பட்டப்பின் படிப்புபட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

உயர் கல்வி அமைச்சு பட்டம் வழங்குவதற்கு பல உயர் கல்வி நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கமைய இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், வியாபார முகாமைத்துவ தேசிய பாடசாலை, இலங்கை பன்னாட்டு பௌத்த கல்வி நிறுவனம், கொழும்பு பன்னாட்டு கப்பல் துறை பொறியியல் கல்லூரி என்பவை இளமாணி மட்டத் தகைமைகளை வழங்குவதற்கு ஒப்புதலளிக்கப் பட்டுள்ளன. இளமாணி மட்டத் தகைமைகளை பெறுவதற்கு அதிகரித்துள்ள வாய்ப்புக்கள் தொழில்துறையின் தேவைகளுக்கும், தகைமை பெற்ற தொழில் அபிலாசைகளுக்குமிடையில் இப்பொழுது அகன்ற அளவில் காணப்படுகின்ற இடைவெளியை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என்பனவற்றின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளை பயன்படுத்திக் கொள்வதற்காக உயர் கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் புதுமையான ஆராய்ச்சிக் கொடைத் திட்டம் ஒன்றை கூட்டாக ஆரம்பித்துள்ளன. இந்தத் திட்டம் அடிப்படைப் பிரயோகம், பொருத்தமான ஆராய்ச்சி என்பவற்றுக்கு உதவுவதற்கும் அதேவேளையில் மனித வள மூல வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் எதிர்பார்க்கிறது.

தொழில்நுட்ப மற்றும் தொழிற் பயிற்சிக் கல்வி மற்றும் பயிற்சித் துறை 2013 இல் மூன்றாம் தரக் கல்வியைத் தொடர்ந்தும் பயன் படுத்தியது. கல்வி சார்ந்த மற்றும் கல்வி சாராத அலுவல்கள் தொடர்பில் வரையறைகள் காணப்பட்ட போதும் பயன்படுத்திக் கொள்ளப் படாத அனேக நன்மைகள் காரணமாக தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி கல்வித்துறை அதிகரித்து வருகின்ற உத்வேகத்தைக் கொண்ட துறையாக விளங்குகின்றது. 2013 இல் நாட்டில் தொழில் நுட்ப மற்றும் தொழில் பயிற்சிக் கல்வியில் 519 அரச துறை நிறுவ னங்களும், 562 தனியார் மற்றும் அரச சாரா நிறுவனங்களும் 1,601 அங்கீகரிக்கப் பட்ட பாட நெறிகளை வழங்கின. தேசிய தொழிற்பயிற்சி தகைமை முறையின் கீழ் இந்த ஆண்டுப் பகுதியில் மூன்றாம் தர மற்றும் தொழிற் பயிற்சிக் கல்வி ஆணைக்குழுவினால் மாண்வர்களுக்கு 22, 855 தேசிய தொழிற் பயிற்சி தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல், தகவல் மற்றும் தொடர்பூட்டல் பல ஊடக தொழிநுட்பம் மற்றும் மொழிகள் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட துறைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொண்டது.

# உடன் நிவாரணப் பணிக்கு ஆயிரம் கோடி ரூபா நிதி

## புயல்பாதித்த இடங்களைப் பார்வையிட்டபின் மோடி அறிவிப்பு



டில்லி, ஒக்.16
'ஹுட் ஹுட்' புயலால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திர கடலோர மாவட்டங்களில் அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் தவித்து வருகின்றனர். இந்த நிலையில், அங்கு உடனடி நிவாரணப் பணிகளுக்காக ஆயிரம் கோடி ரூபா நிதி வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரையைக் கடந்த 'ஹுட் ஹுட்' புயல் கடும் சேதத்தை ஏற்படுத்திச் சென்றது. விசாகப்பட்டினம் உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் உள்கட்டமைப்புகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

மின்சாரம், தொலைத் தொடர்பு சேவை பெரும்பாலான இடங்களில் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் அடிப்படை வசதிகளின்றி பொது மக்கள் தவித்து வருகின்றனர். உணவுப் பொருள்களுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதைப் பயன்படுத்திப் பெரும்பாலானோர், உணவுப் பொருள்கள் உள்ளிட்டவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

### பிரதமர் நரேந்திர மோடி ஆய்வு

விசாகப்பட்டினத்தில் தங்கியிருந்து நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு வரும் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபுநாயுடு, காய்கறி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் குறைந்த விலைக்கு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

இதனிடையே பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்த பிரதமர் நரேந்திர மோடி, இது தொடர்பாக சந்திரபாபு நாயுடு மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். நிவார்ணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள இடைக்கால நிவாரண நிதியாக ஆயிரம்கோடிரூபாவழங்கப்படும்என்றும்அறிவித்த மோடி, வானிலை ஆய்வு மையத்தையும் பாராட்டினார்.

### 25 பேர் சாவு

ஒடிசா மாநிலத்தில், 'ஹுட் ஹுட்' புயலால் பாதிக்கப்பட்ட கோராபுட் உள்ளிட்ட பகுதிகளை ஆய்வு செய்த முதலமைச்சர் நவீன் பட்நாயக், நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்களும், சம்பந்தப்பட்ட துறைகளும் இதுதொடர்பாக 16 ஆம் திகதிக்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என்று நிவாரப் பணிகளுக்கான சிறப்பு ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். 'ஹுட் ஹுட்' புயலால் ஆந்திராவில் இது வரை 25 பேர் உயிரிழந்துள்ளனர். ஒடிசாவில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். (வ)


ST & IS SINCE 1892

LANKA ORIX FINANCE

LANKA ORIX FINANCE PLC

**Gigantic Auction Sale**

**On TUESDAY 21st OCTOBER 2014**

To Be Held At
Station Road, Wairawapuliyankulam, Vavuniya
Commencing 10.00 a.m Onwards

| BUS | | | |
|---|---|---|---|
| TATA | 2956CC | 2005 | NA XXXX |

| CAB | | | |
|---|---|---|---|
| TATA 207 DI | 2956CC | 2011 | NP PR XXXX |
| TATA 207 DI | 2956CC | 2012 | NP PS XXXX |

| FOUR WHEEL TRACTOR | | | |
|---|---|---|---|
| JOHN DEERE | 2300CC | 2012 | NC RC XXXX |
| JOHN DEERE 5047D | 2300CC | 2012 | NP RC XXXX |
| JOHN DEERE PY5203 | 2900CC | 2011 | NC RC XXXX |
| MAHINDRA 575DI | 2523CC | 2007 | NC RA XXXX |
| MAHINDRA 575DI | 2730CC | 2012 | NP RD XXXX |
| MAHINDRA 575DI | 2730CC | 2012 | NP RD XXXX |
| TAFE 45 DI | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE 45 DI | 2500CC | 2010 | NP RD XXXX |
| TAFE 45 DI | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | NC RC XXXX |
| TAFE 45DI | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | NP RC XXXX |
| TAFE 45DI | 2500CC | 2013 | NC RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2013 | NCRD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2009 | NC RB XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | EP RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | NP RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2010 | NP RB XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | NC RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2013 | NC RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2013 | NC RD XXXX |
| TAFE 45DI | 2500CC | 2012 | NP RC XXXX |
| TAFE 45DI | 2750CC | 2006 | NC RA XXXX |

| MOTOR BIKE | | | |
|---|---|---|---|
| HERO DAWN | 100CC | 2013 | NP BAQ XXXX |
| HERO DELUX | 100CC | 2013 | NP BAP XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2012 | NP.XX XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2013 | NP BAK XXXX |
| HERO HONDA CD DELUXE | 100CC | 2011 | NP XE XXXX |
| HERO HONDA CD DULAXE | 100CC | 2011 | NP XA XXXX |
| HERO HONDA PLEASURE | 100CC | 2012 | NP BAG XXXX |
| HERO HUNK | 150CC | 2013 | NC BAP XXXX |
| HERO PLEASURE | 100CC | 2012 | NC BAN XXXX |
| HERO PLEASURE | 100CC | 2013 | NC BAH XXXX |
| TVS WEGO | 110CC | 2012 | NP BAB XXXX |

| LORRY | | | |
|---|---|---|---|
| MAZDA KG-SY56T | 2490CC | 2000 | NP HL XXXX |
| LANKA ASHOK LEYLAND | 6000CC | 1995 | 47 XXXX |
| TATA LPT1109 | 3784CC | 2009 | NC LH XXXX |

| THREE WHEELER | | | |
|---|---|---|---|
| BAJAJ | 150CC | 2003 | NP HV XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NP YC XXXX |
| BAJAJ | 200CC | 2010 | NP YF XXXX |
| BAJAJ | 174CC | 2010 | NP YB XXXX |
| TVS | 200CC | 2011 | NP YQ XXXX |
| BAJAJ RE 205 | 200CC | 2011 | NP YQ XXXX |
| BAJAJ 4S | 174CC | 2009 | NC QW XXXX |
| BAJAJ 4S | 200CC | 2011 | NC YS XXXX |
| BAJAJ RE 205 | 200CC | 2011 | NP YM XXXX |

| TRAILER | | | |
|---|---|---|---|
| TRAILAR | | 2012 | NP RW XXXX |
| SURENDRA TRAILER | | 2011 | NP RW XXXX |
| TRAILER | | 2012 | NP RW XXXX |
| TRAILER | | 2013 | NC RW XXXX |

| TRUCK | | | |
|---|---|---|---|
| MAHINDRA BOLERO | 2523CC | 2011 | NP PQ XXXX |
| MAHINDRA MAXIMO | 909CC | 2014 | NW PX XXXX |
| MAHINDRA MAXXIMO | 909CC | 2012 | CP PU XXXX |
| MAXIMO 2WD | 909CC | 2013 | NC PV XXXX |
| SUZUKI | 650CC | 2006 | NC PQ XXXX |
| TATA ACE | 702CC | 2011 | NC PR XXXX |
| TATA ACE | 702CC | 2011 | EP PQ XXXX |
| TATA ACE EX | 702CC | 2013 | NP PW XXXX |
| TATA ACE EX | 702CC | 2012 | NP PU XXXX |
| TATA ACE EX | 702CC | 2013 | NC PW XXXX |
| TATA ACE EX | 702CC | 2013 | NW PW XXXX |
| TATA ACE | 702CC | 2011 | NC PR XXXX |
| TATA SUPER ACE | 1405CC | 2013 | NP PV XXXX |

| TWO WHEEL TRACTOR | | | |
|---|---|---|---|
| AESL 125-2 | 624CC | 2012 | NC SL XXXX |
| AGROTECH RV 125 | 624CC | 2012 | NW SL XXXX |
| AGROTECH RV125 | | | NC SL XXXX |
| SIFANG GN12 | 81CC | 2011 | NC SJ XXXX |
| VIKYNO RV125 | 624CC | 2012 | NC SL XXXX |

**On View – 18th ,19th & 20th October 2014**
Between 9.00 a.m – 5.00 p.m

**Conditions of Sale**
✓Entrance: By a non refundable Ticket of Rs. 500.00 per person & a refundable deposit of Rs. 5,000.00 per personon the day of Auction.
✓Payment: Non – refundable initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% &Removal latest by 3:00 pm on Friday 31st October 2014 to be paid to Lanka Orix Finance PLC, No 27,2nd Cross Street, Vauniya.
✓The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.
✓The decision of the Auctioneer will be final.

**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer. Celebrating 122 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

SGS UKAS

City Office & Showroom:
290, Havelock Road, Colombo 5.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com


# இந்தியக் கடற்படையின் 'ஹெலிகள்' கேள்வி ரத்து



இந்திய கடற்படையின் பயன்பாட்டுக்காக வெளிநாடுகளில் இருந்து 56 ஹெலிகள் வாங்குவதற்கான கேள்வியை பாதுகாப்புத்துறை நேற்று ரத்துச் செய்தது.

ரூ.3600 கோடி மதிப்பீட்டில் முக்கியஸ்தர்களின் ஹெலிகள் வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் ஊழல் நடைபெற்றதால், அகஸ்டா வெஸ்ட் லேண்ட் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை மத்திய அரசு ரத்துச் செய்தது. வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து இலகு ரக ஹெலிகள் வாங்குவதற்கான ரூ.6000 கோடி மதிப்பிலான கேள்வியையும் பாதுகாப்பு அமைச்சகம் ரத்துச் செய்து உத்தரவிட்டது.

அந்த வகையில், 9000 கோடி ரூபா மதிப்பீட்டில் 56 கடற்படை ஹெலிகள் வாங்குவ்தற்கான மற்றொரு கேள்வியைப் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று ரத்துச் செய்துள்ளது.

இந்தக் கேள்வியைப் பெறுவதற்கான போட்டியில் ஐரோப்பியன் ஏர்பஸ் ஹெலிகாப்டர்ஸ் மற்றும் அகஸ்டா வெஸ்ட் லேண்ட் ஆகிய நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தன.

கேள்வி ரத்து செய்யப்பட்ட தகவல் அந்த நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் உள்நாட்டிலேயே ஹெலிகளைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (வ)



## ஆவிகளுடன் பேசும் அதிசயமான பெண்

வொஷிங்டன், ஒக்.16
அமெரிக்காவில் பெண் ஒருவர், தான் ஆவிகளுடன் பேசுவதாகவும், நடப்பதை முன்கூட்டியே அறியும் சக்தி தனக்கு உள்ளதாகவும் தெரிவிக்கின்றார்.

அமெரிக்காவைச் சேர்ந்த சாலி குட்மோர் என்ற செவிலியர் பெண், தான் சிறு வயதிலிருந்தே ஆவிகளைக் கண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் நிறங்கள் மற்றும் அடையாளங்களைகண்டு ஒருவரது வருங்காலத்தை முன்கூட்டியே உணர முடிவதாகவும் கூறியுள்ளார்.

அவர் தனது மகளது வயிற்றின் அருகே சிவப்பு நிறத்தைக் கண்டதாகவும் அதையடுத்து மகளுக்கு ஏதோ பிரச்சினை வரப்போவதாக உணர்ந்துமருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவரது மகள் சோபியாவின் கர்ப்பப்பையில் கட்டி உள்ளதைக் கண்டறிந்துள்ளனர். பின்பு சிகிச்சை மூலம் சோபியாவின் உயிரைக் காப் பாற்றியுள்ளனர்.

மேலும் சாலி இதுகுறித்து கூறுகையில், நான் இதுபோல பொலிஸாருக்கும், மற்ற நபர்களுக்கும் பலமுறை உதவியுள்ளேன் என்றும் எனது சக்தியால்தான் எனது மகளின்உயிரைக் காப்பாற்ற முடிந்தது என்றும் தெரிவித்துள்ளார். (வ)

## அமெ. நிலநடுக்கம் ஒருவர் உயிரிழப்பு

மத்திய அமெரிக்காவில் உள்ள எல் சால்டவார் மற்றும் நிகரகுவா நாடுகளில் திங்கட்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஒருவர் உயிரிழந்தார். ரிக்டர் அளவு கோலில் இந்த நிலநடுக்கம் 7.3 புள்ளிகளாகப் பதிவானது. நிகரகுவாவில் உள்ள ஜிகுலியோவின் தென்மேற்கில் இருந்து 67 கிலோ மீற்றர் தொலைவிலும், சான் சால்டவாரின் தென்கிழக்கு பகுதியில் இருந்து 174 கிலோ மீற்றர் தொலைவிலும் நில நடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க ஆராய்ச்சிநிறுவனம்தெரிவித்துள்ளது. நிலநடுக்கம் காரணமாகக் கட்டடங்கள் குலுங்கியதால் பீதி அடைந்த பொது மக்கள் வீதிகளில் தஞ்சம்புகுந்தனர். பல இடங்களில் வீடுகள் சேதம் அடைந்தன. (வ)

## எபோலாவால் பாதிக்கப்பட்ட ஐ.நா.அதிகாரி உயிரிழப்பு



எபோலாவால் பாதிக்கப்பட்ட ஜேர்மனியைச் சேர்ந்த ஐ.நா. அதிகாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள லைபீரியாவில் எபோலாவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பணியாற்றிய ஐ.நா. சுகாதாரக் குழுவின் அதிகாரி ஒருவருக்கு எபோலா பாதிப்பு ஏற்பட்டது.

அதனை அடுத்து அவர் ஜேர்மனில் உள்ள புனித ஜோர்ஜ் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் அவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

இதனிடையே அமெரிக்காவின் டெக்சாஸ் நகரின் டலாஸில் எபோலாவால் பாதிக்கப்பட்ட இரண்டாவது நபரின் நாய்க்கும், எபோலா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதனை அடுத்து அந்த நாய்க்கு எபோலா பாதிப்புக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு வேளை நாய்க்கு பாதிப்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அதனை கொல்லும் முயற்சி மேற்கொள்ளப்படமாட்டாது என்று டலாஸ் ஆளுநர் மைக் ராவ்லிங் உறுதி அளித்துள்ளார்.

இந்த அச்சத்தைத் தொடர்ந்து டெக்சாஸ் மாகாணத்தில் செல்லப் பிராணிகளுக்கு எபோலா பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் எபோலா பாதிப்பு ஏற்பட்டவர் மற்றும் அவரது நாய்க்கு தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அவர் குறித்த விவரம் வெளியிடப் படாமல் உள்ளது. (வ)

# ஐ.எஸ்.வசம் 'ஹீத்'நகர்

பக்தாத், ஒக். 16
தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஈராக்கிலுள்ள இராணுவம் விலகிக்கொள்ள ஹீத் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.



ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பெரும்பாலான நகரங்களைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தற்போது அன்பர் மாகாணத்தில் முற்றுகையிட்டு நகரங்களைக்கைப்பற்றிவருகின்றனர். அவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த இராணுவம் கடுமையாகப் போராடி வருகிறது. அங்கு இயூபிரேட்ஸ் ஆற்றின் கரையில் ஹீத் என்ற நகரம் உள்ளது. அதை முற்றுகையிட்டு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வந்தனர். அவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இராணுவம் அங்குள்ள ஆசாத் முகாமில் தங்கியிருந்து தாக்குதல் நடத்தியது. ஆனால் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இராணுவத்தால் ஈடு கொடுக்க முடியவில்லை.

இதற்கிடையே ஹீத் நகரின் மையப் பகுதியைத் தீவிரவாதிகள் ஆக்கிரமித்தனர். எனவே ஹீத் நகரை தீவிரவாதிகளுக்கு ஈராக் இராணுவம் விட்டுக் கொடுத்து தாரை வார்த்தது.

ஆசாத் முகாமில் இருந்து வெளியேறி வேறு இடத்துக்கு சென்று விட்டது. ஆசாத் முகாம் வடமேற்கு ஹீத் பகுதியில் உள்ள மிகப் பெரிய முகாம் ஆகும்.

இதன் ஒரு பகுதி இன்னமும் அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இது பாலைவனத்தால் சூழப்பட்டுள்ளது. எனவே அது ஐ.எஸ். தீவிரவாதிகளுக்குச் சவாலாக இருந்தது. இருந்த போதிலும் அதைத் தீவிரவாதிகள் முறியடித்துள்ளனர்.

இதற்கிடையே வடக்கு ஈராக்கில் உள்ள யாஷிடி சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும்குழந்தைகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்து சிறை வைத்துள்ளனர். அவர்களை அடிமைகளாக விற்பனைசெய்யப் போவதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். தீவிரவாதிகளின் அட்டகாசத்தை ஒடுக்க அமெரிக்க போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தி வருகின்றன. அமெரிக்காவின் போர் விமானங்கள் தங்கள் முகாம்களைப் பயன்படுத்திக் கொள்ள துருக்கி அனுமதி அளித்துள்ளது. சிரியாவில் சொபானே நகரில் தீவிரதிகளின் தாக்குதலை முறியடிக்க அமெ ரிக்கா துருக்கி இடையே இது குறித்து ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. (வ)



ஹொங்கொங்கில் முழுமையான நிர்வாக சுதந்திரம் கோரி சீன அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருவோருக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. போராட்டக்காரர்கள் வைத்திருந்த வீதித் தடுப்புகளை பொலிஸார் அகற்றியதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. (வ)

## பலஸ்தீனம் தனிநாடாக பிரிட்டன் அங்கீகாரம்

### அந்தநாட்டு நாடாளுமன்றில் தீர்மானம்

பலஸ்தீனத்தைஒருதனிநாடாக அங்கீகரித்து பிரிட்டன் நாடாளுமன்றம் திங்கட்கிழமை தீர்மானம் நிறைவேற்றியது. இஸ்ரேலும், பாலஸ்தீனமும் ஒன்றையொன்று தனித் தனிச் சுதந்திர நாடுகளாக அங்கீகரிப்பதன் மூலம் பலஸ்தீனப் பிரனக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந் தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டன் நாடாளுமன்றத்தின் கீழவையில், 274 இக்கு 12 என்ற வாக்குகள் வித்தியாசத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இஸ்ரேல் நாட்டின் அருகில் அமைந்துள்ள நாடாக பலஸ்தீனத்தை பிரிட்டிஷ் அரசு அங்கீகரிக்கிறது' என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட அமைச்சர்கள் பலர் இதற்கான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. 650 உறுப்பினர்களைக்கொண்ட கீழவையில், பாதிக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தனர். எனினும், அண்மையில் காஸாவில் நடைபெற்ற போருக்குப் பின்பு, பலஸ்தீனப் பிரச்சினைக்கு அமைதித்தீர்வை எட்டுவதற்கான புதிய முயற்சியை இந்தத் தீர்மானம் தொடங்கும் என்று தெரிவித்த எம்.பி.க்கள் வாக்களித்தனர். (வ)

## முக்கிய ஆலோசனை

### ஐ.எஸ். தாக்குதலை முறியடிப்பது குறித்து

வொஷிங்டன், ஒக்.16
சிரியாவில் அமெரிக்கா தலை மையிலான கூட்டு இராணுவத்தின் வான் வழித் தாக்குதலையும் மீறி, ஐ.எஸ். இயக்க தீவிரவாதிகள் கோபனில் முன்னேறி வருகின்றனர். அதைத் தடுத்து நிறுத்துவது தொடர்பாக இராணுவத் தளபதிகள் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.



சிரியாவில், அமெரிக்கா தலைமையில், ஆஸ்திரேலியா, பஹ்ரைன், பெல்ஜியம், பிரிட்டன், கனடா, டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஈராக், இத்தாலி, ஜோர்டான், குவைத், லெபனான், நெதர்லாந்து, நியூஸிலாந்து, கத்தார், சவுதி அரேபியா, ஸ்பெயின், துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் ஐஎஸ் அமைப்புக்கு எதிரான கூட்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. கடந்த மூன்று வாரங்களாக, வான்வழித் தாக்குதல் மூலம் ஐ.எஸ். தீவிரவாதிகளை முன்னேற விடாமல் தடுக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. இருப்பினும், துருக்கி எல்லையில் உள்ள கோபனி நகரில் பாதியை ஐ.எஸ். அமைப்பு கைப்பற்றியுள்ளது.

அதைத் தொடர்ந்து, வொஷிங்டனில் இராணுவத் தளபதிகள் நேற்று முன்தினம் ஆலோசனையில் ஈடுபட்டனர். மேலும் ஜனாதிபதி ஒபாமாவிடமும் இதுதொடர்பாக இராணுவ உயரதிகாரிகள் ஆலோ சனை நடத்தவுள்ளனர்.

இந்த ராணுவக் கூட்டமைப்பு உருவான பின்னர் பல்வேறு நாடுகளின் இராணுவ உயரதிகாரிகள் கூடி ஆலோசிப்பது இதுவே முதல்முறை. தற்போது இக்கூட்டமைப்பில் 60 நாடுகள் இணைந்துள்ளன.

துருக்கி சிரியா எல்லையில் இராணுவ தடுப்பு பகுதியை ஏற்படுத்துவது குறித்து அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. (வ)

# விலங்குகள் மீதான எபோலா நோய்த் தடுப்பூசி சோதனை வெற்றி

லிபியா, ஒக்.16
மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா நோயால் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். 9 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய் பரவாமால் தடுக்க உலக சுகாதார அமைப்பு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

எபோலா நோயைக் கட்டுப் படுத்த, உலகளாவிய ரீதியிலான அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கடந்த 8 ஆம் திகதி உலக சுகாதார நிறுவனம் எபோலா நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கையை வெளியிட்டது. அதில் 7 நாடு களைச் சேர்ந்த 8,399 பேர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 4,033 பேர் இதுவரை இந்த நோயால் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எபோலா நோயால் பாதிக்கப்பட்டுள்ள 7 நாடுகளை இரு பிரிவுகளாக உலக சுகாதார நிறுவனம் பிரித்துள்ளது. முதல் பிரிவில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளாக கினியா, லைபிரியா, சீராலியோன் உள்ளிட்ட நாடுகளும் இரண்டாவது பிரிவில் குறைந்தளவு பாதிக்கப்பட்ட நாடுகளான நைஜீரியா, செனாகால், ஸ்பெயின், மற்றும் அமெரிக்கா உள்ளிட்டவற்றையும் அறிவித்துள்ளது. மற்ற நாடு களுக்கும் நோய் பரவி விடும் என்ற அச்சம் ஏற்பட்டு உள்ளது. இதனால் ஒவ்வொரு நாடுகளும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு உள்ளன.



இந்தநிலையில் கனடாவில் எபோலா கொடூர நோய்க்கான சோதனை தடுப்பூசி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதை விலங்குகள் மூலம் சோதனை செய்தபோது 100 சதவீதம் நோய் பரவுவதைத் தடுத்து உள்ளது. ஆனால் இன்னும் மனிதர்களில் சோதனை செய்து பார்க்கப்படவில்லை. தற்போது அமெரிக்காவில் மனிதர்கள் மீதான சோதனை ஆரம்பித்துள்ளது. இந்தத் தடுப்பூசி சோதனை ஆரோக்கியமான நபர்கள் மீது சோதனை நடத்தப்படும். இது எவ்வாறு வேலை செய்கிறது? பக்க விளைவுகள் உள்ளனவா? எந்தளவில் மருந்து கொடுக்கப்படவேண்டும்? என்பது குறித்து சோதனைகள் நடைபெற்றுவருகின்றன. கனடா கண்டுபிடித்துள்ள இந்த தடுப்பூசி மிகுந்த நம்பிக்கை அளிக்கிறது. விலங்குகள் மீது சோதனை செய்து பார்த்த போது இது 100 சதவீதம் எபோலா நோய் பரவாமல் தடுத்துள்ளது என்பது உறுதியாகியுள்ளது என்று சுகாதாரத் துறை அமைச்சர் ரோனா ஆம்ரோஸ் கூறினார். (வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபப்படாமல்மேல் அதிகாரிகள் சொன்ன வேலையைச் செய்துமுடிப்பது நல்லது.

**இடபம்:** சக ஊழியர்கள் பேச்சைக் கேட்டு நடப்பதை தவிர்ப்பது நன்மை தருவதாக இருக்கும். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்களுடன் பேசும்போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது.

**மிதுனம்:**வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. அடுத்தவர்களுக்கு ஆதரவாக செயற்படும்போது கவனம் தேவை. தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கும். செல்வம் சேரும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**கடகம்:** மறைமுக எதிர்ப்புகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய் தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். விரிவாக்கம் செய்வது தொடர்பான ஆலோசனைகளில் ஈடுபடுவீர்கள்.

**சிங்கம்:** பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கப் பெறலாம். மேலதிகாரிகளால் உத்தியோகத்தர்களுக்கு நன்மை உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த நன்மைகள் உண்டாகும்.

**கன்னி:** அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். சக ஊழியர்களிடம் அலுவலகம் தொடர்பான இரகசியங்களை கூறுவதைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் பதற்றம் ஏற்படுத்துவதாக இருக்கும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**துலாம்:** பிள்ளைகள் எதிர்பார்த்தபடி நடந்து கொள்வார்கள். பெண்கள் நண்பர்களிடம் உறவினர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது. வீண் மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். புதிய செயல்களை யோசித்துச் செய்வது நல்லது.

**விருச்சிகம்:** கூடுதல் கவனத்துடன் இருப்பது நன்மையைத் தரும். மனக் குழப்பம் நீங்கும். வெளியூர் பயணங்கள் உண்டாகும், அதனால் நன்மையும் ஏற்படும். நண்பர்கள் பலவிதங்களிலும் ஆதரவாக இருப்பார்கள்.

**தனுசு:** ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த இடையூறுகள் குறையும். தொழில் விருத்தி அடைவதுடன் ஆதாயமும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திருப்தியாக உணர்வார்கள்.

**மகரம்:** பணவரத்தும் இருக்கும், சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதைக் கேட்டு நடப்பார்கள். அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** மனத் தெளிவு உண்டாகும். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். விருப்பமானவர்களை சந்தித்து உரையாடி மகிழ்ச்சி அடைவீர்கள். மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள்.

**மீனம்:** அனைத்துவிதமான நன்மைகளையும் பெறுவீர்கள். புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். தந்தை வழி உறவினர்களுடன் மனக்கிலேசம் வரலாம். உத்தியோகத்தில் மேலிடத்திலிருந்து அதிக வேலைப்பளு வரும்.


## நாளை

**புரட்டாதி-31 வெள்ளிக்கிழமை | 17.10.2014**

திதி: நவமி மா.06.01 வரை
நட்சத்திரம்: பூசம்
பி.ப.04.11 வரை

சுபநேரம்:06.02-07.32 வரை
இராகுகாலம்:10.32-12.02 வரை

# பிங் பொங் விளையாடும் ரோபோ அறிமுகம்



பல்வேறு விளையாட்டுக்களையும் விளையாடக் கூடிய ரோபோக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் தற்போது பிங்பொங் விளையாட்டை விளையாடக்கூடிய ரோபோ அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஜப்பான் நிறுவனம்ான (Omron) ஓம்றொன் நிறுவனம் இந்த ரோபோவை உருவாக்கியுள்ளது.

ஆறு மாத கடின உழைப்பில் உருவாக்கப்பட்ட இந்த ரோபோ, 2.7 மீற்றர் உயரமும், 600 கிலோகிராம் நிறையையும் கொண்டது.

மேலும் பிங் பொங் பயிற்சியில் ஈடுபட இந்த ரோபோ பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## அறிவுக்கு அனுபவமே அடிப்படை

நமது அறிவு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அனுமான அறிவுக்கும் அனுபவமே அடிப்படை. அனுமான அறிவில் நாம் சாதாரண அறிவிலிருந்து பொது அறிவுக்கோ பொது அறிவிலிருந்து விசேட அறிவுக்கோ செல்கிறோம். நிச்சய விஞ்ஞானம் என்று அழைக்கப்படுபவற்றுள் உள்ள உண்மையை மக்கள்எளிதில்அறிந்துகொள்ளலாம். ஏனெனில் அது ஒவ்வொருவருடைய தனி அனுபவங்களை ஒத்திருக்கிறது. தான் கூறும் எதையும் நம்புமாறு விஞ்ஞானி சொல்வதில்லை. அவன் தனது சொந்த அனுபவங்களிலிருந்து சில முடிவுகளைக் கண்டறிந்துள்ளான். ஆராய்ந்த பின்னரே அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அவன் கூறுகிறான். அவனது முடிவுகள் உலகம் முழுவதிலுள்ள மனித அனுபவங்களுடன் ஒத்திருக்கின்றன. நிச்சய, விஞ்ஞானம் ஒவ்வொன்றிலும் மனிதகுலம் முழுமைக்கும் பொதுவான அடிப்படை ஒன்று உள்ளது. எனவே அதிலிருந்து பெறப்பட்ட முடிவுகள் சரியா தவறா என்பதை நாம் உடனடியாகக் காண முடியும்.

உலகம் முழுவதும் பொதுவாக உபதேசிக்கப்பட்டுவருவது மதம் என்பதன் அடிப்படை நம்பிக்கை முழு நம்பிக்கை என்று கூறப்படுகிறது. பல மதங்கள் பல்வேறு கொள்கைளை மட்டுமே கொண்டவையாக உள்ளன. அதனால் தான் மதங்களுக்கிடையே பூசலை நாம், காண்கிறோம். இந்தக் கொள்கைகளும் நம்பிக் கையை அடிப்படையாகக் கொண்டவையே. மேகங்களுக்கு மேலே அமர்ந்து பிரபஞ்சம் முழுவதையும் ஆள்கின்ற ஒரு மாபெரும் தெய்வம் இருப்பதாக ஒருவர் கூறுகிறார். தாம் கூறுவதை மட்டுமே ஆதாரமாகக்கொண்டு நானும் அதை நம்ப வேண்டும் என்று என்னிடம் சொல்கிறார். எனக்கும் அது போலவே சொந்தக் கருத்துக்கள்இருக்கலாம்.அவற்றை நம்புமாறு மற்றவர்களுக்கு நானும் கூறலாம். அத[illegible] யாராவது காரணம் கேட்டால் எந்தக் காரணத்தையும் என்னால் கொடுக்க முடியாது. இதனால்தான் தற்காலத்தில் மதமும் தத்துவ ஞானமும் கெட்ட பெயரைச் சம்பாதித்து வருகின்றன. இந்த மதங்களில் வெறும் கொள்கைகள் மட்டுமே மூட்டைமூட்டையாக உள்ளன. இவற்றை நிர்ணயிக்க ஓர் அளவுகோலும் இல்லை. ஒவ்வொருவரும் தனக்குப் பிடித்த கருத்துக்களைப் பரப்புகிறார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | 4 | | | | | |
| | | | | 8 | 6 | | 7 | 4 |
| | 9 | | | | 7 | | 2 | 8 |
| 4 | 1 | 9 | 3 | 7 | | | | |
| | 8 | 3 | | 4 | | 7 | 1 | |
| | | | | 5 | 1 | 4 | 3 | 9 |
| 1 | 3 | | 7 | | | | 8 | |
| 6 | 7 | | 1 | 9 | | | | |
| | | | | | 5 | 1 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 3 | 4 | 9 | 2 | 1 | 5 |
| 1 | 4 | 5 | 2 | 7 | 8 | 3 | 9 | 6 |
| 9 | 3 | 2 | 6 | 5 | 1 | 8 | 4 | 7 |
| 8 | 5 | 3 | 1 | 2 | 7 | 4 | 6 | 9 |
| 4 | 1 | 9 | 8 | 6 | 5 | 7 | 2 | 3 |
| 7 | 2 | 6 | 4 | 9 | 3 | 1 | 5 | 8 |
| 3 | 6 | 1 | 9 | 8 | 4 | 5 | 7 | 2 |
| 2 | 8 | 7 | 5 | 1 | 6 | 9 | 3 | 4 |
| 5 | 9 | 4 | 7 | 3 | 2 | 6 | 8 | 1 |

# ஸ்ரார் ஈகிள் சம்பியனானது



சென்.நிக்கொலஸ் அணியை 88 ஓட்டங்களால் வீழ்த்தி சம்பியனானது ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழகம்.

பெரியகடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழகம் நடத்திய 10 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது இதில் பெரிய கடை ஸ்ரார் ஈகிள் அணியும், பட்டித்தோட்டம் சென்.நிக்கொலஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெரியகடை ஸ்ரார் ஈகிள் அணியினர் முதலில் துடுப்பாட்டத்தினை தெரிவு செய்தனர். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 186 ஓட்டங்களை பெற்றது. ஸ்ரார் ஈகிள் அணிசார்பாக முருகா 76 ஓட்டங்களையும், பிரிய காந்த் 67 ஓட்டங்களையும், றோய் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சென்.நிக்கொலஸ் அணி சார்பாக யூட்சன், அன்ரனி ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு 187 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென். நிக்கொலஸ் அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். இதன் மூலம் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தினால் வெற்றி பெற்ற ஸ்ரார் ஈகிள் அணி சம்பியனானது. துடுப்பாட்டத்தில் சென்.நிக்கொலஸ் அணிசார்பாக தினேஸ் 37 ஓட்டங்களையும், ஜெகன் 21 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரார் ஈகிள் அணி சார்பாக ஜோர்ச் ஹற்றிக் சாதனையுடன் 3 இலக்குகளையும், அரவிந்த் 3 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

இறுதிப்போட்டியில் ஸ்ரார் ஈகிள் அணியினரால் 10 ஓவர்களில் பெறப்பட்ட 186 ஓட்டமானது மன்னார் மாவட்டத்தில் அணி ஒன்றினால் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்கள் எனும் புதிய சாதனையினை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இறுதியாட்டத்தில் ஆட்டநாயகனாக ஸ்ரார் ஈகிள் அணியின் முருகா தெரிவு செய்யப்பட்டார். தொடரில் அதிக ஓட்டங்களை பெற்ற வீரராக ஸ்ரார் ஈகிள் அணியின் பிரியகாந் தெரிவு செய்யப்பட்டதுடன், தொடரில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வீரராக சென். ஜோசப் அணியின் அருள் தெரிவு செய்யப் பட்டார். (ரி- 23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக்.16

வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாப கார்த்த வெற்றிக்கிண்ணத் துக்கான 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்பற்றிக்ஸ் கல் லூரி அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.16

தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதியாட்டங்கள் இன்று கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் முற்பகல் 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்.செபஸ்தியான் விளையாட்டுக்கழகமும்,

பிற்பகல் 3 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்சேவியர் விளையாட்டுக்கழகமும்,

பிற்பகல் 4 மணிக்கு பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுத்துறை இளந்தென்றல் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ரி- 108)

## மாவட்ட சம்பியனாக தெரிவானது சங்கானை பிரதேச செயலக அணி



அரசாங்க அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப் பட்டது.

யாழ் மாவட்ட செயலக நலன் புரி சங்கத்தினால் யாழ் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்படும் கரப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் வேலணை பிரதேச செயலகத்துக்கு உட் பட்ட துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. இதில் வேலணை பிரதேச செயலக அணியும் சங்கானை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் பலம்மிக்க அணிகளாகக் காணப்பட்ட போதிலும் வேலணைப் பிரதேச செயலக அணி இறுதி நிமிடங்களில் விட்ட தவறுகளினால் சங்கானை பிரதேச செயலக அணி வெற்றி வாய்ப்பை தனதாக்கிக் கொண்டது.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை முறையே 25:11, 25:20, 25:18 என்ற புள்ளிகள் அடிப் படையில் சங்கானை பிரதேச செயலக அணி வேலணை பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று 2014ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வேலணைப் பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன், சங்கானை பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (ரி- 86)

## தேசிய மட்டத்தில் தங்கம்



அனித்தா



ரிசோத்

யாழ்ப்பாணம்,ஒக்.16

இலங்கைப் பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்படும் 84ஆவது தேசிய மட்ட ஜோன் கப்பற தடகளப் போட்டியில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தாவும், ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் ரிசோத்தும் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினை பெற்றுள்ளனர். கடந்த திங்கட்கிழமை தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா 3.20 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தினையும், 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் ரிசோத் 3.90 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து முதலாம் இடத்தையும் பெற்று தங்கப்பதக்கத்தினையும் வென்றுள்ளனர். (ரி- 23)

# கொம்மாந்துறை கிரிக்கெட் தொடர் முடிவுகள்

கரணவாய்,ஒக்.16

கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டின இமையாணன் இளைஞர், காந்தி ஸ்ரார், உடுவில் ஸ்ரைல்ஸ் விளையாட்டுக் கழகங்கள்.

கொம்மாந்துறை இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும், அணிக்கு 8பேர் கொண்ட 8 பந்துப் பரிமாற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் அண்மையில் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக 'பி' அணியும் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய உதய சூரியன் விளையாட்டுக்கழகம் 8 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக ஹரி 38 ஓட்டங்களையும் பிரசாத் 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் துவாகரன், பிரசாத், நாகரூபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

அடுத்து 132 என்ற இமாலய வெற்றி இலக்குடன் களமிறங்கிய இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக 'பி' அணி 7 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மட்டும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று 3 இலக்குகளால் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக கஜந்தன் 23 ஓட்டங்களையும் துவாரகன் 24 ஓட்டங்களையும் விந்தன் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நிலோ 3 இலக்குகளையும் அகந் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

அடுத்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் காந்திஸ்ரார் விளையாட்டுக்கழகமும், ஐங்கரா விளையாட்டுக் கழகமும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய காந்தி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 8 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக டேமியன் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் நவா ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் கிரி 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சின்னா 2 இலக்குகளையும் ரவி, ரமேஸ் தலா ஒரு இல்க்கினையும் கைப்பற்றினர். தொடர்ந்து 107 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஐங்கரா அணி 5பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து வெறும் 47 ஓட்களைப் பெற்று 59 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது. அந்த அணி சார்பில் விது 19 ஓட்டங்களையும் சின்னா 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கீர்த்தி ஹட்ரிக் உட்பட 6 இலக்குகளையும் கோபி ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஸ்ரைல்ஸ் விளையாட்டுக் கழகமும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 19 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அந்த அணி சார்பாக மணாளன் மட்டும் அதிகபட்சமாக 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரதீப், பிரவீன் ஆகியோர் தலா 2 இலக்குளைக் கைப்பற்றினர். பதிலுக்கு 20 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய உடுவில் ஸ்ரைல்ஸ் அணி 3ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 4 இலக்குகளை இழந்து 20 ஓட்டங்களைப் பெற்று 3 இலக்குகளில் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பாக பிரதீஸ் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மணாளன் 3 இலக்குகளையும் சைமன்ஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ரி- 108)

# மூத்தவீரர்கள் முன்வராததால் தலைமைப் பதவியை ஏற்றேன்



அணியின் ஏனைய மூத்த வீரர்கள் யாரும் அணித்தலைவர் பதவியை பொறுப்பேற்க முன் வராததால் அந்தப் பதவியை தான் பொறுப்பேற்றுக் கொண்டதாக இந்திய முன்னாள் அணித்தலைவர் அனில் கும்ப்ளே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது : 17 ஆண்டுகளாக இந்திய அணிக்காக விளையாடி வந்த நிலையில், யாருமே அணித்தலைவர் பதவியை பொறுப்பேற்க முன் வராத காரணத்தால் நான் இயல்பாகவே பதவியைப் பொறுப்பேற்றேன். ராகுல் டிராவிட் பதவியில் இருந்து விலகிய நேரத்தில், டோனிக்கு அதுதான் ஆரம்ப காலகட்டமாக இருந்தது. சச்சினும் பதவியைப் பொறுப்பேற்க விரும்பவில்லை. எனவே தான் அணித்தலைவர் பதவியை எனக்கு அளித்தனர் என்று கூறினார். அத்துடன் தனது தலைமைப் பொறுப்பின் பாணி எப்போதும் இளைஞர்களின் முடிவை உள்ளடக்கித்தான் இருந்தது என்றும் குறிப்பாக இந்தியாவில் பந்துவீச்சாளராக இருப்பது மிகவும் கடினமான காரியம் என்றும் தெரிவித்தார்.

கும்ப்ளே தலைமையில் 14 டெஸ்ட் ஆட்டங்களில் களம்கண்ட இந்தியா 3 ஆட்டங்களில் வெற்றியும், 5இல் தோல்வியும், 6இல் சமனிலையும் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# நெய்மர் அசத்தல்; பிரேஸில் வெற்றி



ஜப்பானுக்கும் பிரேஸிலுக்கும் இடையிலான நட்பு உதைபந்தாட்டப் போட்டியில் நெய்மரின் அசத்தல் கோல்களின் உதவியுடன் பிரேஸில் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆசியக் கண்டத்துக்கு குறுகிய கால சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரேஸில் அணி, ஆசிய நாடுகளுடன் நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்று வருகிறது.

ஏற்கனவே சீனத் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற ஆட்டத்தில் ஆர்ஜென்ரினாவை 2- 0 என வீழ்த்திய பிரேஸல், நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஜப்பானை எதிர்கொண்டது. இந்தப் போட்டியில் பிரேஸிலின் நம்பிக்கை நட்சத்திரமான நெய்மர் 18, 48, 77, 81 ஆகிய நிமிடங்களில் நான்கு கோல்கள் அடித் தார். எனினும் பிரேஸிலின் அதிரடிக்கு ஜப்பான் வீரர்களால் கடைசி வரை பதிலடி கொடுக்க முடியாமல் போக 4:0 என்ற கணக்கில் பிரேஸில் வெற்றி பெற்றது. (ரி)



# ஆக்ரோஷத்தை விரும்பும் அப்ரிடி

எப்போதும் ஆக்ரோஷமாக விளையாடுவதையே விரும்புவதாக பாகிஸ்தான் ரி- 20 அணித்தலைவர் சயீட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.



இணையத்தளம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், தலைமைப் பதவியின் அணுகுமுறையில் மிஸ்பா உல்ஹக்கிடம் இருந்து நான் முற்றிலும் வித்தியாசமானவன். நான் ஆக்ரோஷமாக விளையாடுவதையே எப்போதும் விரும்புகிறேன். ஆக்ரோஷமாக செயல்படும் போது சில நேரம் தோல்வியை சந்திக்க வேண்டி வரும் என்பதை அறிவேன். ஆனால் அணித் தலைவர் என்பவர் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். களத்தில் ஆவேசம். முழு முயற்சி, போராட்ட குணம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் போது சாதகமான முடிவும், சிறந்த செயற்பாடும் தானாகவே வெளிப்படும் என்ற நம்பிக்கை கொண்டவன் நான். பாகிஸ்தான் மக்கள் ஆக்ரோஷமான கிரிக்கெட் ஆட்டத்தையே விரும்புவார்கள். எனது வீரர்களும் ஆக்ரோஷமாக ஆடுகிறார்கள். எனக்கும் அதுதான் பிடிக்கும் என்று கூறியுள்ளார். (ரி)

## சமநிலையில் முடிந்த ஆட்டம்

ரசிகர்களின் மிகுந்த ஆவலுக்கு மத்தியில் நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்காமல் ரசிகளை ஏமாற்ற டில்லி, புனே அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமனிலையில் முடிந்தது.

நேற்று முன் தினம் டில்லி நேரு விளையாட்டரங்கில் நடந்த 3ஆவது லீக் ஆட்டத்தில் டெல்லி டைனமோஸ் எப்.சி அணியும், எப்.சி. புனே சிற்றி அணியும் மோதின. பலம் வாய்ந்த டெல்லி அணி ஆரம்பத்தில் இருந்தே தாக்குதல் தொடுத்த போதிலும் கிடைத்த வாய்ப்புகளை வீணடித்தது. உலகக்கிண்ணத்தை வென்ற அணியில் ஆடியவரான நட்சத்திர வீரர் இத்தாலியின் அலெக்சாண்ட்ரோ டெல் பியர்டோ 37ஆவது நிமிடத்தில் களம் இறங்கிய போது, ரசிகர்களின் ஆரவாரம் காதை பிளந்தது. ஆனால் அவரால் ஆட்டத்தின் போக்கில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. டில்லி அணியினர் 5 முறை இலக்கை நோக்கி பந்தை அடித்தனர். ஆனால் அவர்களின் அனைத்து முயற்சிகளையும் புனே கோல்காப்பாளர் இமானுலே பெலார்டி முறியடித்து அசத்தினார். கடைசி வரை பந்து ஒரு முறை கூட கோல் வலைக்குள் நுழையாததால் சுமார் 30 ஆயிரம் ரசிகர்களும் ஏமாற்றத்திற்குள்ளானர்கள்.

முடிவில் ஆட்டம் கோல் எதுவுமின்றி 0:0 என சமனிலையில் முடிந்தது. இந்தத் தொடரில் சமனிலையில் முடிந்த முதல் ஆட்டம் இது தான். இதன் மூலம் இரு அணிகளும் தலா ஒவ்வொரு புள்ளியைப் பகிர்ந்து கொண்டன. (ரி)



# ஐ.சி.சி.யின் மருமகன்கள் அல்ல

சுழற்பந்து வீச்சளர்கள் தொடர்பான டாரல்ஹேரின் கருத்துக்கு பதிலடி கொடுத்துள்ள ஹர்பஜன் சிங், தாங்கள் ஐ.சி.சி.யின் மருமகன்கள் அல்ல என ஆவேசமாகப் பேசியுள்ளார்.

பந்துவீச்சு விதிமீறல் மீதான நடவடிக்கை காலதாமதமானவை என அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஐ.சி.சி. நடுவர் டாரல்ஹேர் கூறியிருந்தார்.

மேலும் 20 ஆண்டுகளுக்கு முன்பே இதை நிவர்த்தி செய்து இருக்க வேண்டும் என்றும், இது மாதிரியான சந்தேகத்துக்குரிய பந்து வீச்சுக்கு இலங்கையின் முரளிதரன், பாகிஸ்தானின் சக்லைன் முஸ்தாக், இந்தியாவின் ஹர்பஜன்சிங் ஆகியோர் தான் முன்னோடியாக இருந்தார்கள் எனவும் குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் டாரல்ஹேர் மிகவும் அதிகமாக பேசுகிறார் என இந்திய அணியின் சுழற்பந்து வீரரான ஹர்பஜன்சிங் அவர் மீது கடுமையாக பாய்ந்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், நாங்கள் ஐ.சி.சி.யின் அனுமதியின் பேரில் தான் எப்போதும் பந்துவீசி வந்தோம். எனது பந்து வீச்சு பற்றி ஐ.சி.சி. ஒப்புதல் அளித்த போது அந்த நேரத்தில் டாரல் ஹேர் ஏன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஏனென்றால் ஐ.சி.சி. நடுவர் பதவியை இழந்து விடுமோ என்ற காரணத்தில் தான். நாங்கள் ஒன்றும் ஐ.சி.சி.யின் மருமகன்கள் அல்ல என பதிலடி கொடுத்துள்ளார். (ரி)



# டோனி தலைமையில் மீண்டும் உலகக் கிண்ணம் இந்தியாவுக்கே

டோனியின் தலைமையின் கீழ் உலகக் கிண்ண இந்திய அணி சிறப்பாக செயற்பட்டு மீண்டும் கிண்ணத்தை வெல்லும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி. அந்நிய மண்ணில் இந்திய அணியின் வெற்றி சதவீதம் குறைவாக இருக்கின்ற போதும், தற்போதைய அணி வெற்றி பெறும் வலிமை உடையது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அணி ஒருநாள் உலகக் கிண்ணத்தை தக்க வைக்க வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ஒரு நாள் ஆட்டங்களின் சிறந்த அணியை நாம் கொண்டிருக்கிறோம். என்வே டோனி தலைமையிலான இந்திய அணியே மீண்டும் கிண்ணத்தைக் கைப்பற்றும் என அவர் தெரிவித்துள்ளார். (ரி)

## வைத்தியசாலையில் களுவிதாரண

இலங்கை கிரிக்கெட் ஏ அணியின் பயிற்றுவிப்பாளரும், இலங்கை அணியின் முன்னாள் இலக்குக் காப்பாளருமான ரொமேஷ் களுவிதாரண திடீரென சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்படுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை திடீரென சுகவீனமுற்ற நிலையில் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ரொமேஷ் களுவிதாரண நேற்று முன் தினம் காலை விசேட விமானம் மூலம் கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபை அறிவித்துள்ளது. களுவிதாரணவுக்கு இதயம் சம்பந்தமான பிரச்சினையே ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ரி)

## தொடர்ச்சிகள்

### நிலைமைகளை

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வந்திருந்த பிரிட்டனின் பிரதித் தூதுவர், சுன்னாகம் சபாபதிப் பிள்ளை நலன்புரி நிலையத்துக்கு நேற்று மதியம் சென்றார். நலன்புரி நிலையத்தை முழுமையாகப் பார்வையிட்ட பின்னர், தனது யாழ்ப்பாணத்துக்கான பயணம் தொடர்பில் அங்கு வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடபகுதிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் நான் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் தடவை. யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன். அவர்களுடன் பல்வேறு விடயங்கள் பேசியுள்ளேன்.

இதன் பின்னர் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலைய மக்களைச் சந்தித்துள்ளேன். இங்கு மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை என்னால் அறிந்து கொள்ள முடிந்துள்ளது. இந்த நலன்புரி நிலையத்திற்கு எமது பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் 11 மாதங்களுக்கு முன்னர் வந்து சென்றுள்ளார். இந்த மக்கள் தமது சொந்த நிலத்துக்குச் செல்லவேண்டும்என்றுவிரும்புவதுஎனக்குப்புரிகின்றது"-என்று அவர் குறிப்பிட்டார். (ற-5)

### ராஜபக்ஷக்க

வதோ கொஞ்சம். அதை வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் தேர்தலில் அவரை வீழ்த்த தமிழ் மக்கள் தங்களால் முடிந்தவற்றைச் செய்ய வேண்டும். ஜனாதிபதியின் வடக்கு மாகாண மக்கள் மீதான கரிசனை, ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுததைப் போல் உள்ளது" என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடுமையான பதிலடி வழங்கினார்.

தொண்டமனாறு நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகத்தில் வடக்கு மாகாண நீரியல் ஆய்வு மையத் திறப்பு விழா நேற்று மாலை இடம்பெற்றது. இதன் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பல வழிகளிலும் எம்மைக் கட்டுப்படுத்தி செயலற்றதாகச் செய்ய அரசு நடவடிக்கைகளில் இறங்கி வருகையில் ஏதோ ஒரு வழியில் மக்கள் சேவையில் நாங்கள் இறங்கக் கூடியதாக இருக்கின்றது என்பது எனக்குப் பெரு மகிழ்வைத் தருகின்றது. எம்மைப் பல விதங்களில் அரசு குறை கூறி வருகின்றது. தாம் செய்யும் தவறுகளை மூடி மறைக்க எம்மைச் சாடுகிறது.

**மக்கள் விருப்பையும் மீறினேன்**

முதன் முதலில் நேசக்கரம் நீட்டி எனது மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு உறுதியுரையை எடுக்க ஜனாதிபதியிடம் சென்றவன் நான். நாட்டில் சுமுக நிலை ஏற்பட வேண்டும். எமது மக்கள் ஒதுக்கி வைக்கப் படக்கூடாது என்ற எண்ணத்தில் இதைச் செய்தேன்.

அதன் பின்னர் எமக்குத் தேவையான பல விடயங்களை ஜனாதிபதியிடம் முன் வைத்தேன். அவர் தருவதாக அன்றே உறுதி மொழி கூறி இன்று இதுவரையில் தரவில்லை. அந்த ஒரு காரணமே போதும் அவரின் வருகையை நாங்கள் புறக்கணிக்க. ஆனால் அதற்கு மேலும் பல காரணங்களைக் கூறியே எம்மால் கலந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது என்று மன வருத்தத்துடன் கூறிக் கடிதம் அனுப்பி வைத்தேன். கடிதத்தில் குறிப்பிட்டவற்றைக் குறிப்பிடாமல் அவற்றிற்குப் பதில் இறுக்காமல் வைக்கோல் பட்டடை நாய் போல வட மாகாண சபையின் செயற்பாடுகள் இருப்பதாக ஜனாதிபதி அவர்கள் கிளிநொச்சியில் வைத்துக் கூறியுள்ளார்.

**மமதையில் பேசக் கூடாது**

ஒரு பிரதம செயலாளரை சட்டப்படி நியமிக்க வக்கில்லாதவர், ஒரு ஆளுநரை மக்கள் கோரிக்கைப் படி மாற்ற முடியாதவர் அதிகாரம் தன் வசம் என்ற மமதையில் வாயில் வந்ததை எல்லாம் பேசக் கூடாது. 2012 இல் நடந்தவற்றுக்கு 2014 இல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வைப்பவர். அதுவும் 2013 இல் நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் எம்முடன் கலந்தாலோசியாமல் கூட்டம் வைப்பவர் எமக்கு நன்மை செய்ய வருகின்றாரா, இல்லை ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு நன்மை தேட வருகின்றாரா?

அவரின் நப்பாசை யாராவது ஒரு உண்மையான வடமாகாணத் தமிழ் மகனோ - மகளோ தப்பித் தவறித் தமக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கக் கூடும் என்பதுதான். நாம் எமது மக்களுக்குக் கூறியுள்ளோம் - அவர் தருவதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால் அவர் உங்களுக்குப் பெருவாரியான நட்டஈடு வழங்க வேண்டியுள்ளது. அவர் தற்போது தரப்பார்ப்பது அதில் ஒரு மிகச் சிறு தொகை தான். அதனை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் தேர்தலில் அவரை வீழ்த்த உங்களால் முடியுமானவற்றைச் செய்யுங்கள் என்று.

**ஜனாதிபதி எங்களுடன் கவனமாக இருக்க வேண்டும்**

ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுவது போலத்தான் இருக்கின்றது ஜனாதிபதியின் கூற்று. வட மாகாண மக்கள் மீது கரிசனை இருந்திருந்தால் அவர் எம் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளு டன் கலந்தாலோசித்து இங்கு வந்திருப்பார். நாங்கள் கேட்ட மிகக் குறைந்த கோரிக்கைகளையாவது கொடுத்து விட்டு வந்திருப்பார். அப்பொழுது நாங்கள் நன்றியுடன் வரவேற்றிருப்போம். நாய்களுடன் அவர் கவனமாக இருக்கட்டும்."-என்றுஅவர்அங்குமேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### காங்கேசன்துறை

பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான யாழ்தேவி ரயில் சேவை ஆரம்ப நிகழ்வில் பங்கெடுப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை வருகை தந்திருந்தார். யாழ் மத்திய ரயில் நிலையம் வரையில் யாழ்தேவியில் ஜனாதிபதியுடன் வருகை தந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய, அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றிருந்தார்.

அன்றையதினம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் அவர் பங்கெடுக்கவில்லை. இந்த நிலையில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை இருநாளும் தங்கியிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், செவ்வாய்க்கிழமை இரவு வெளிச்சவீட்டைத் திறந்து வைத்துள்ளார்.

கடந்த கால போரால் குறித்த வெளிச்சவீடு சேதமுற்றிருந்தது. 1892 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட இந்த வெளிச்சவீடு 22 மீற்றர் உயரமானது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெளிச்சவீடு என்பதால், இதனை இராணுவத்தினர் தொல்பொருள் திணைக்களத்தினரின் மேற்பார்வையில் புனரமைத்தனர் என்று இராணுவ செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, யாழ்.மாவட்டச் செயலகத்தின் முன்பாகவுள்ள பழைய மாவட்டச் செயலகத்தையும் பார்வையிட்டிருந் தார். அத்துடன் 52 ஆவது டிவிசன், 523 ஆவது பிரிகேட், 11 ஆவது விஜயபாகு ரெஜி மென்ட், 23 ஆவது கெமுனு வோர்ச் படைத்தளத்திற்கும் சென்று பார்வையிட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.(ற-5)

### எல்லோரையும்

முதலமைச்சர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

"அமைச்சர் ஒருவர் கருடா சௌக்கியமா? என்று கேட்கத் தலைப்பட்டுள்ளார். தான் யார், எங்கு இருக்க வேண்டியவர் என்பதை மறந்து பேசியுள்ளார். மு.விக்னேஸ்வரனை ஜனாதிபதியின் நிகழ்வுக்கு அழைத்தோம். ஆனால் அவர் வரவில்லை. மு.விக்னேஸ்வரன் என்றால் முட்டாள் விக்னேஸ்வரன் என்று நான் கூற வில்லை. முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்றே கூற வந்தேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சியில் வைத்து கிண்டல் அடித்துள்ளார்.

நண்பர் டக்ளஸ் கெட்டிக்காரர் என்பதை நான் ஒத்துக் கொள்கின்றேன். தென்னிந்தியாவில் பாதுகாப்பாக ஒரு தனியிடத்தில் இருத்தப்பட வேண்டியவர், தொடர்ந்து வந்த அரசுகள் எல்லாவற்றையும் முட்டாள்கள் ஆக்கி அவற்றில் அங்கம் வகித்து தனக்கெதிராக தென்னிந்தியாவில் விடுக்கப்பட்ட பகிரங்க பிடிவிறாந்தில் இருந்து இது வரையில் அவர் தப்பி இருந்து வருவது, அவரின் கெட்டித் தனத்தைக் காட்டுகிறது. அதற்காக அவர் எவரை வேண்டுமானாலும் அடிவருடி, அவர்களுக்கு அடிமையாகச் செயற்பட்டு தனது காரியத்தைச் சாதித்து வருவதையும் நான் அறிவேன். ஆனால் சில நேரங்களில் தம்மைக் கெட்டிக்காரர்களாக அடையாளம் காண்பவர்கள் தாமே முட்டாள்கள் ஆகின்றார்கள். அப்படி ஏதாவது நண்பர் டக்ளஸுக்கு நடந்தால் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டால் நான் அவரை முட்டாள் என்று அழைக்க மாட்டேன். முதலமைச்சர் என்றும் அழைக்க மாட்டேன்.

முற்றிலும் முடியாத பரிதாபத்துக்குரிய முன்னாள் அமைச்சர் என்று தான் குறிப்பிடுவேன். சிலரை எக்காலமும் ஏமாற்றலாம். பலரை ஒரு சில தருணங்களில் ... ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது என்பதை நண்பர் அறிந்து வைத்திருந்தால் நல்லது."- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### காணாமற்

வருகின்றது. அவற்றில் இராணுவத்தினரிடம் நேரடியாக சரணடைந்து காணாமற் போனவர்கள் மற்றும் இராணுவ ஒட்டுக் குழுக்களால் கடத்திச் செல்லப்பட்டவர்கள் தொடர்பிலும் மக்கள் நேரடியாக வழங்கிய சாட்சியங்களும் உள்ளன.

இந்த நிலையில், இலங்கையில் காணாமற்போயினர் என்று கூறப்படும் பலர் வெளி நாடுகளில் வசிப்பதாக ஆணைக் குழு நம்புகின்றது என்றும், அதனால் அவர்கள் தொடர்பில் தகவல் அறிவதற்காகவே வெளி நாட்டு தூதரகங்களின் உதவியை ஆணைக்குழு நாடியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

வெளிநாட்டுத் தூதரகங்களிடம் குறித்த முறைப்பாடுகளை கையளிப்பதற்கு ஏதுவாக, வெளிவிவகார அமைச்சிடம் ஆணைக்குழு முறைப்பாடுகளை நேற்று முன்தினம் கையளித்துள்ளது. வெளிவிவகார அமைச்சு அவற்றை இலங்கையிலுள்ள வெளி நாட்டுத் தூதரகங்களிடம் சமர்ப்பித்து அதனூடாக விசாரணை மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### வேலையின்மை

மாவட்டத்தில் 5.1 சதவீதமாக இருந்துள்ளது.

இதேபோன்று வறுமையின் வீதம் கடந்த 2010 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் 4 சதவீதமாகக் காணப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் 16.1 சதவீதமாக இருந்தது. 2013 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் 6.7 சதவீதமாக வறுமையின் வீதம் காணப்படுகின்றது. ஆனால் யாழ்.மாவட்டத்தில் 8.3 சதவீதமாக காணப்பட்டுள் ளது.

வேலையின்மை மற்றும் வறுமை என்பன தேசிய சுட்டியுடன் ஒப்பிடுகையில் யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் அதிகமாகவே காணப்படுகின்றது. ஆனாலும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது அவை குறைவடைந்து வருகின்றது. (ற-5)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் ரிசாத்பதியுதீன் பவுண்டேசனால் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பங்களை அலுவலக நாட்களில் வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ள வர்த்தக கைத்தொழில் அமைச்சின் அலுவலகத்தில் வந்துபெற்றுக்கொள்ளலாம் என்றும் ரிசாத் பதியுதீண் பவுண்டேசன் உறுப்பினரும், வர்த்தக கைத்தொழில் அமைச்சின் வவுனியா மாவட்ட இணைப்பாளருமான எம்.எஸ்.அப்துல்பாரிகேடுக் கொண்டுள்ளார். (ரி- 421)

* * *

இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால். அணிக்கு 8 பேர் பங்குபற்றும் 7 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்படவுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. (ரி-422)



கடந்த திங்கட்கிழமை நெல் லியடியில் இடம்பெற்ற டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவின் 130 ஆவது ஜனன தினநிகழ் வின் போது தேசியமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் சாதனை படைத்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி அனித்தா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கௌரவிக் கப்பட்டார். அருகில் கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன காணப்படுகிறார். (ரி- 23)

## தீபாவளிக்கு தாச்சிப் போட்டி

தீபாவளி தினத்தை முன் னிட்டு வடமாகாண விளை யாட்டுத் திணைக்களமும் யாழ்.மாவட்ட தாச்சி விளை யாட்டுச் சங்கமும் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியிலான தாச்சி சுற்றுப் போட்டி ஒன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு றொட் டியாலடி காமதேனு ஒழுங்கையிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம் மயிலிட்டி கண் ணகி விளையாட்டுக் கழக மைதானத்திலே நடத்தவுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் அன் றைய தினம் காலை 8.30 மணிக்கு மைதானத்துக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ரி-208)

**ஒத்துமாறல்**

கொழும்பில் H.N.D.A பயிலுநர் நியமனம் பெற்ற ஒருவர். யாழ்ப்பாணத்துக்கு 'ஒத்து மாற விரும்புகின்றார். விருப்பம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். (சி/17024) (10)

தொடர்பு: 077 33 98 000

## மரண அறிவித்தல்



### கோமதிஅம்மா கனகரத்தினம்

(சித்த ஆயுள்வேத வைத்தியர்) வைத்தியஜோதி

உரும்பிராய் இரத்தின வைத்தியசாலையின் உரிமையாளர் சிவஞானம் கனகரத்தினத்தின் அன்பு மனைவி ஆயுள்வேத வைத்தியர் கோமதிஅம்மா நேற்று (15.10.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா-சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும், சிவஞானம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சந்திரரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், முத்துத் தம்பி ம.வி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), ஜெயபாலரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அருள் ஜோதி (ஜேர்மனி), கோபாலரத்தினம் (சுவிஸ்), திலகரத்தினம் (சுவிஸ்) ஆகி யோரின் அன்புத் தாயும், இராஜேஸ்வரி, சரோஜினிதேவி, துரைசிங்கம், சதா னந்தி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். துவாரகன், தாட்சாயினி, கீர்த்தனன், ஜெய பிரசாத், ஜெயதினேஷ், துஷாணா, துவானா, தூரிகா, துளசினி, சாரங்கன், பிரியங்கா, திலக்ஷன், தீபிகா ஆகியோர் இவரது பேரப்பிள்ளைகள் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்... (16.10. 2014) பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று ... பூதவுடல் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை ... உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இரத்தினம் டிஸ்பென்சரி,
உரும்பிராய்.

(53276)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

# காத்தான்குடி வாவிக்கரையில் திண்மக்கழிவு கொட்டுவதற்கு நிபந்தனையுடன் அனுமதி

காத்தான்குடி, ஒக்.16

காத்தான்குடி ஐந்தாம் குறிச்சி வாவிக்கரையோரத்தில் திண்மக்கழிவு கொட்டுவதற்குக் காத்தான்குடி நகரசபைக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம்வழங்கியிருந்த இடைக்கால தடை உத்தரவு நீக்கப்பட்டு, அப்பகுதியில் நிபந்தனையுடன் காத்தான்குடி நகரசபை திண்மக்கழிவு கொட்டுவதற்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமைஅனுமதிவழங்கியுள்ளது.

காத்தான்குடி ஐந்தாம் குறிச்சி வாவிக்கரையோரத்தில் காத்தான்குடி நகரசபை கொட்டும் திண்மக்கழிவால், அப்பகுதியில்வசிக்கும்பொதுமக்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதுடன், சூழல் மாசடைவதாகவும் கூறி அப்பகுதி பொதுமக்களில் 23 பேர் கையொப்பமிட்டு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இந்த முறைப்பாடு தொடர்பில் கடந்த 9 ஆம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் கவனத்துக்கு காத்தான்குடி பொலிஸார் கொண்டு சென்றனர். இதன் போது, அப்பகுதியில் காத்தான்குடி நகரசபை திண்மக்கழிவு கொட்டுவதற்கு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. இந்த இடைக்கால தடை உத்தரவை மட்டக் களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் என்.எம். அப்துல்லாஹ் பிறப்பித்தார்.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த இடைக் கால தடை உத்தரவு தொடர்பில் காத்தான்குடி நகரசபை யானது சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஊடாக மனுவொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. அத்தோடு, காத்தான்குடி சுகாதார அலுவலகத்தால் இது தொடர்பான அறிக்கையொன்றும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இவற்றை ஆராய்ந்த நீதிவான் என். எம். அப்துல்லாஹ், குறித்த பகுதியில் திண்மக்கழிவு கொட்டுவதற்கு நிபந்தனையுடன் அனுமதி வழங்கி உத்தரவிட்டுள் ளார். குறித்த பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு பாதகமில்லாமல் திண்மக்கழிவை கொட்டுவதுடன், வாவியினுள் திண்மக்கழிவை கொட்டாமல் கரையோரத்தில் திண்மக்கழிவை கொட்டியவுடன் மண் போட்டு அதை மூடு மாறும் இவற்றை காத்தான்குடி சுகாதார அலுவலகம் கண்காணிப்புச் செய்ய வேண்டு மென வும் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை சுற்றாடல் மத்திய அதிகார சபையின் மட்டக் களப்பு உத்தியோகஸ்தர்கள் இதை பார்வை யிட்டு நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் நீதிவான் அப்துல்லாஹ் உத்தரவிட்டுள்ளார்.

அத்தோடு, காத்தான்குடி பொலிஸார் இந்த இடத்தில் பொது மக்கள் திண்மக்கழிவுகளை கொட்டுவதை தடுக்கும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனவும் நீதிவான் கேட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடை உத்தரவை அடுத்து கடந்த ஒருவாரமாக காத்தான்குடி நகரசபையினால் திண்மக்கழிவுகள் காத்தான்குடி நகர சபை பிரிவில் சேகரிக்காமல் இருந்ததுடன், நீதிமன்றம் இந்த இடைக்கால தடை உத்தரவைத் தளர்த்தி நிபந் தனையுடன் கூடிய வகையில் கொட்டுவதற்கான அனுமதி வழங்கியதையடுத்து புதன்கிழமை தொடக்கம் திண்மக்கழிவுகள் வீடுகளில் இருந்து காத்தான்குடி நகர சபையினால் சேகரிக்கப்பட்டுவருவதாக காத்தான்குடி நக்ர சபை தலைவர் எஸ்.எச்.அஸ்பர் தெரிவித்தார்.

(கு-10)

## மரண அறிவித்தல்

### சுப்பையா நவரெத்தினம்



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 35/1, குமார வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நவரெத்தினம் நேற்று (15.10.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசாத்தியின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(53266)(7.6.3)

தகவல்:
35/1, குமார வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## VACANCIES

**Applications are invited from suitable candidates for the following posts for immediate appointment:**

1. Matron - Nursing Officer of Class I or above with SLMC registration
2. Senior Nurses with experience in ward / theater / ICU management
3. Chief Pharmacist - A senior Pharmacist with SLMC registration and experience in stores management to do full time work. Computer literacy is added advantage.

**Those interested are requested to send in their self prepared application with the following documents to reach the undersigned on or before 31st October by post or by hand.**

1. Up to date bio data
2. Letter from Gramasevaka
3. copies of:
   a) Educational certificates
   b) Birth certificate
   c) National Identity card
   d) PP size photograph

Salary negotiable, based on qualifications and experience

**Director, Human Resources,**
**Northern Central Hopitals (Pvt) Ltd,**
**342, Palaly Road, Jaffna,**

(சி17021)(12.3.6) 12.10.2014

### கோறளைப் பற்று பகுதிகளில் சமூக பாதுகாப்பு பிரிவு திறப்பு



கோறளைப்பற்று, ஒக். 16

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வோர் சைல்ட் கோலண்ட் அமைப் பின் நிதியுதவியால் எஸ்கோ நிறுவனம் நடைமுறைப்படுத்தும் சிறுவர் பராமரிப்புச் செயற்திட் டத்துக்கு அமைய கோறளைப் பற்று பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட கருவாக்கேணி சமூக பராமரிப்புப் பிரிவு திறந்து வைக் கும் நிகழ்வு எஸ்கோ நிறுவனத் தின் பணிப்பாளர் எஸ்.ஸ்பிரித் யோன் தலைமையில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கோறளைப் பற்று பிரதேச செய லாளர் தட்சணாகௌரி டினேஸ் கலந்துகொண்டதுடன் சிறப்பு அதிதியாக நிதியுதவி வழங்கும் வோர் சைல்ட் கோலண்ட் அமைப் பின் இலங்கைக்கான பணிப்பா ளர் மரீனா டொரீஸ் கலந்து கொண்டார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட கோறளைப் பற்று பிரதேச செயலாளர் மூலமாக சிறுவர்களுக்கான பராமரிப்பு பிரிவு உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்ட துடன் எஸ்கோ நிறுவனத் தின் செயற்திட்டக் கோவையும் கைய ளிக்கப்பட்டது. மேலும்சிறப்புஅதிதியாக நிதி யுதவி வழங்கும் வோர்சைல்ட்கோலண்ட் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் மரீகா டொரீஸ் மூலமாக செயற் திட்டம்அறிமுகம்செய்யப் பட்டதுடன் 1 லட்சத்து 54 ஆயிரம் ரூபா பெறுமதியான அலுவலக பாவனைக் கான கணினிகளும் தளபாடங்களும் வழங்கப் பட்டன.


நிகழ்வில் எஸ்கோ நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், கோறளைப் பற்று பிரதேச செயலக பிரிவிற் குட் பட்ட 12 கிராம சேவக பிரிவு களின் கிராம சேவகர்கள், சிறுவர் பராமரிப்பு உத்தியோ ... எனப் பல கத்தர்க... ரும் கலந்துகொண்ட

### கிளிநொச்சி மாவட்ட அழகக உரிமையாளர்களுக்கும் வாடிக்கையாளருக்கும்

23.10.2014ஆம் திகதிக்குப் பின்பு அனைத்து அழகக நிலையங்களும் காலை 7.00 மணி முதல் இரவு 8.30 மணிவரையுமே திறந்திருக்கும். அத்துடன் எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு 19.10.2014 ஞாயிறு அன்று அனைத்து அழகக நிலையங்களும் திறந்திருக்கும்.

நிர்வாகம் - அழகக
தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம் - கிளிநொச்சி.
(47902)(12.3.6)

## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா நயினார்

[முன்னாள் அம்பாள் பஸ் உரிமையாளர், அம்பாள் பழைய பாட்ஸ் கடை உரிமையாளர்]

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

சந்நிதி முருகன் வேர்க்சொப் அன் சேர்விஸ் (மருமக்கள்)
(53264)(12.3.6)

**2015 CHEMISTRY PERSONAL CLASSES**

Basic, inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.SC (Cey) M.SC (Cey) Chemistry கற்பிக்கப்படும்.
(53265)(12.3.6) தொடர்பு: 077 603 8913

### அறை வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில் மாணவிகளுக்கு அறை வாடகைக்குண்டு.
(53263)(12.3.6) தொடர்பு: 071 817 5820

### விற்பனைக்கு

தச்சுவேலை மற்றும் சிற்ப வேலைகளுக்கு உகந்த இத்தாலி மெசின் 400 மொடல் வவுனியாவில் விற்பனைக்கு உண்டு.
(53267)(12.3.6) தொடர்பு: 077 037 5262

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புதுக்குடியிருப்பு வேணாவில் சிறீமுருகானந்தா வித்தியாலயம் 2014 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திய செல்வி பொ.கம்சனாவையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

... இடமிருந்து வல... ... யோகனப் ப.சங்கீர்த்தன் - 133, த.ம... பிரியா - 140, சா.சாருகாசினி - 104, மு.டிலக்சனா - 154, த.கோபிதா - 118, வி.டிலக்சனா - 153,ச.கிருசாந்தன் - 105.

Congratu... ...lation

வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்
வேணாவில் சிறீ முருகானந்த வித்தியாலயம் புதுக்குடியிருப்பு.

Best Wishes

IHCA
INTERNATIONAL HEALTH CARE ACADEMY

உங்களுக்கு CANADA வில் தொழில் மற்றும் குடியேறுவதற்கான ஒரு சுலபமான வழிமுறை. எங்கள் Academy யில் பராமரிப்பாளர் (Live -IN CAREGIVER PROGRAM திட்டத்தில் பதிவு செய்யுங்கள்

தகுதி: A/L Simple Pass ஆங்கிலம்

இது பற்றி ஒரு இலவச கருத்தரங்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

18th October 2014 at Hotel Nelly Star
2nd Cross Street Vavuniya Srilanka
(9 am onwards)

19th October 2014 at Tilco Jaffna City Hotel
70/6, K.K.S Road, Jaffna, Srilanka.
(9 am onwards)

முன் கூட்டிய பதிவுகளுக்கு உடனடியாக அழைக்கவும்

தொலைபேசி இலக்கம்:
077 192 3430/077 192 5 727

No.3, Charlemont Road, Colombo- 6
Tel: + 94112501416
www.ihcasrilanka.com
email ihcacolombo@gmail.com
(சி/16969)(4.3.8)

# நாவலர் சிலை திறப்புநிகழ்வு மாத்தளையில்

கொழும்பு, ஒக்ரோபர் 16

மாத்தளையில் உள்ள மூன்று பாடசாலைகளில் சைவப்புரவலராகவும், தமிழ்ப்புலவராகவும் விளங்கிய நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் திருவுருவச் சிலைகள் நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.

நாளை காலை 8 மணிக்கு தேசிய பாடசாலையான மாத்தளை ஸ்ரீ பாக்கியா வித்தியாலயத்திலும் முற்பகல் 10.30 மணிக்கு மற்றொரு தேசிய பாடசாலையான மாத்தளை இந்துக் கல்லூரியிலும், பின்னர் பிற்பகல் 12.30 மணிக்கு இரத்தோட்டை தமிழ் வித்தியாலயத்திலும் சிலை திறப்பு விழா நிகழ்வு இடம்பெறும்.



பாடசாலைகள் தோறும் நாவலர் சிலையைத் திறந்து வைப்பதன் மூலம் நாவலர் ஏற்படுத்திய சைவத் தமிழ் சீர்திருத்தத்தின் பெருமை யையும் சிறப்பையும் மாணவ சமுதாயத்துக்கு உணர்த்தும் கைங்கரியத்தை இலங்கை நாவலர் நற்பணி மன்றம் முனைப்புடன் முன்னெடுத்து வருகின்றது. அத் தொடர் நடவடிக்கையின் பயனாக கொழும்பு றோயல் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, முகத்துவராம் இந்துக் கல்லூரி, இரத்மலானை இந்துக் கல்லூரி, மன்னார் சித்தவிநாயகர் வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உள்ளிட்ட பல பாடசாலைகளில் நாவலர் திருவுருவச் சிலைகள் திறக்கப்பட்டுள்ளன. இன்னும் பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளில் நாவலர் சிலைகள் திறக்கப்படவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)


## மரண அறிவித்தல்

திருமதி.தனகுணபதி(சரோ) தம்பிராசா

(நேற்று)15.10.2014 உதயனில் மேற்படி மரண அறிவித்தலில் இறுதிக்கிரியைகள் 18.10.2014 ஞாயிற்றுக்கிழமை எனப் பிரசுரமாகிவிட்டது இதனை சனிக்கிழமை எனத் திருத்தி வாசிக்கவும்.

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.

தகவல் : ப.பாராஜசிங்கம்(சகோதரன்)

## விற்பனைக்கு உண்டு

MD90E 2409725
HONDA
தொடர்பு-077 7291927

## தேவை

எமது பட்டயக்கணக்காளர் நிறுவனத்தில் கீழ் வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை

1. பட்டதாரிகணக்காளர் : B.Com/HNDA பட்டம் பெற்றவர்கள் நாளாந்த படியாக 500ரூபா வழங்கப்படும்
2. கணக்கியல் உதவியாளர் : A/L வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்தோர். நாளாந்த படியாக 300 ரூபாய் வழங்கப்படும்.

மற்றும் உணவு, தேவைப்படின் தங்குமிட வசதியும் வழங்கப்படும் நேரில் வரவும்

தொடர்பு : 140,பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி (பெற்றோல் செற் முன்பாக)- 021 222 2478

## SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதிய மாணவர்கள்,தொழில் புரிவோருக்கான 3 மாத வார,வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.

சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 18.10.2014
பிரிவு 1. மாலை 3.00-05.00

செவ்வாய்,வியாழன் பிரிவுகள் ஆரம்பம் – 21.10.2014
1.காலை 08.00-10.00 2.காலை 10.00-12.00

நெல்லியடியில்
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 18.10.2014 மாலை : 03.00
திங்கள்,புதன் பிரிவுகள் ஆரம்பம் : 20.10.2014 மாலை : 03.00

18.10.2014 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு 20 புத்தகங்கள்,சான்றிதழ் இலவசம்.

SAAMSON
Experts in English Training
279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
24, நெல்லியடி சந்தி. நெல்லியடி.
077 621 4567
021 320 3313

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2014
சித்தியடைந்த மாணவர்களுக்கான

### பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 19.10.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்


# கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு உதவிகள் வழங்கல்

வவுனியா, ஒக். 16

வடமாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வவுனியா மாவட்டத்தில் 10 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தலா 50 பிளாஸ்ரிக் கதிரைகள் வீதம் அண்மையில் வழங்கப்பட்டன.

ஈச்சங்குளம், தரணிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், அம்மி வைத்தான், மதுராநகர், தோணிக்கல், புலவனூர், நாகர் இலுப்பைக்குளம், சன்னாசி பரந்தன், துட்டுவாகை என 10 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கே தலா 50 பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கப்பட்டன.

இந்த பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கும் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா, கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகேஸ்வரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி. நடராசா, செட்டிக்குளம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் தலைவர், செயலாளர் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (த-402)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானம்மா சிங்கராசா (கிளி)



கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் விநாயகர் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கிளி என செல்லமாக அழைக்கப்படும் திருமதி ஞானம்மா சிங்கராசா கடந்த (14.10.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிங்கராசாவின் அன்பு மனைவியும் சதாசிவம், யோகம்மா, தெய்வானை(பிரான்ஸ்), அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பூலோகசிங்கம் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), சின்னையா(பிரான்ஸ்), செல்வரட்ணம், காலஞ்சென்ற அருட்சோதியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2014) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
0770366053 (53273)(08)

## Vacancy Announcement

Position : Assistant Accountant
Project : "Gender economic empowerment & sustainable livelihoods"
Locations : Vavuniya
Contract : fixed Term Appointment subject to annual extensions

**Requirements:**

* Part qualification in CASL, CIMA or fully qualified in AAT
* Excellent written and oral communication skills in English, Tamil/Sinhala.
* Knowledge and experience of project cycle management, monitoring and evaluation.
* At least two (2) years previous work experience in Finance (NGO Sector) that involed processing and tracking payments, accounting and producing financial and other reporting.
* Ability to work in a Quick book Accounting software systems.

**How to Apply:**

Please send your application
To: rahama.vav@rahama.lk & copy to : rahame.cmb@rahama.lk

Admin & Finance Manager
RAHAMA office,
No 60/15, Sinthamany Pillaiyar Kovil View, Vavuniya.

**Closing date for appliaction: Friday 24th October, 2014**

"Women are encouraged to apply"
"Only short listed candidates will be contacted" (52170)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம் (இரத்தினம்)



54/6, ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம் (இரத்தினம்) 12.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர்-சரஸ்வதி தம்பதி யரின் மூத்த மகளும், சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், தர்மினி யின் (கொலன்ட்) பாசமிகு தாயும், கஜேந்திரனின் (லண்டன்) மாமியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் குணசேகரம் விமலா சாந்தி (கனடா) ஆகியோரின் சகோதரியும் விமலாதேவியின் (பிரான்ஸ்) மைத்துனியும், தங்கம்மா, கண்மணி, சற்குணம், பாக்கியம் ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான பசுபதி, சிவராசா, கனகசபை ஆகியோரின் மருமகளும், டிசாந், ரக்ஸ்மன், டினக்ஸ் ஆகியோரின் அத்தையும், யோதிஸ்கா, யாதித், யாதிர்னாவின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 154/63, திருமதி சற்குணம் பரமானந்தம் அவர்களின் இல்லத்தில் (16.10.2014) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

154/63, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (53274)(10)

தகவல்:
சகோதரன்
சீ.குணசேகரம் (குணம்)

## அமெரிக்க லொத்தர் விசா - V2 Travels & Tours

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு - உடனே விரையுங்கள்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்

| கிளிநொச்சி | யாழ்ப்பாணம் | நெல்லியடி | வல்வெட்டித்துறை |
| --- | --- | --- | --- |
| 0771516537 | 0773867257 | 0776699892 | 0776697960 |

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் வசிக்கத்தக்க வீடு தேவை. உரும்பிராய், கோண்டாவில்,மருதனார்மடம், சுன்னாகம், கோப்பாய், கல்வியங்காடு பிரதேசங்களில் விரும்பத்தக்கது. (53268)(7,6,3)

தொடர்பு:077 886 6832, 076 628 0350

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கண் மகிழ
28.05.1948

நெஞ்சம் நெகிழ
27.09.2014

### அமரர் வாமதேவன் உலகேஸ்வரி (கிளி)

கடந்த 27.09.2014 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணக் கிரியைகளின்போது கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறியும் எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும், உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் தொலை பேசி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாளை (17.10.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது நினைவிற்கப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத்தவறி இருப்பின் பெருந்தன்மையுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் (53275)(10)

இல. 309, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை விவேகானந்தன்(ஆனந்தம்) (வரணியார் பேரனின் பேரன்)



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விவேகானந்தன் (ஆனந்தம்) நேற்று (15.10.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திரலீலாவின் அன்புக் கணவரும் திருக்குமாரி, திருப்பதி (பிரான்ஸ்), திருநந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தலை(பிரான்ஸ்), நந்தசீலன்(பிரான்ஸ்) ஆகியோரது அன்பு மாமனாரும் நகுலராணி(பிரான்ஸ்), நாகராசா(லண்டன்), யோகராணி (லண்டன்) ஆகியோரது பாசமிகு சகோதரனும் வைரவ நாதன், கனகசபை(பிரான்ஸ்), நவரத்தினம், பாக்கியலீலா, குமாரவேல், சிவஞானசுந்தரம், சற்குணவதி(குஞ்சு), ஜீவரட்ணம் ஆகியோரது அன்பு மைத்துனரும் பிருத்திகா, தருண், கிருஷ்(பிரான்ஸ்) ஆகியோரது அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு
மீசாலை
வரணியார் வளவு

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
(47314)(08) 0213001574, 0766397775

# தொடர்ச்சிகள்

## ஜனாதிபதித்

இந்த நிலையில், கிளிநொச்சியில் வைத்து ஜனாதிபதி மஹிந்த தெரிவித்துள்ள கருத்தானது. தமிழ் மக்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் ஏமாற்றும் ஒன்றாகவே கருதப்படுகிறது. அத்தோடு, இதுமுற்றிலுமாக சிங்கள வாக்குகளை கவரக்கூடிய ஒரு கருத்தாகவே கருதப்படுகிறது.

தமிழீழக் கோரிக்கை குறித்து நாம் எமது தெளிவான முடிவை பல இடங்களில் தெரியப்படுத்திவிட்டோம். ஆகவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தை உடனடியாக இல்லாதொழிக்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்." என்றார்.

அதேநேரத்தில், "அவசர அவசரமாக அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கும் நாம் எதிர்ப்பினைத் தெரிவித்துக் கொள்கிறோம்." என்றும் சுமந்திரன் இதன்போது தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இன்னும் இரண்டு வருட காலங்கள் இருக்கின்றபோது தற்போது தேர்தலை நடத்துவதற்கான தேவைதான் என்ன?

மக்களின் பணத்தை வீணாக்கும் ஒன்றாகவே எம்மால் இத்தேர்தல் கருதப்படுகின்றது. எனவே, இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு நாம் கடுமையான எதிர்ப்பினைத் தெரிவிக்கிறோம்"- என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அரசின் பங்காளிக் கட்சிகளான இடதுசாரிக் கட்சிகள் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவையும் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய

வித்ததாவது:-

எங்கள் வாழ்க்கையில் சரித்திரம் என்பது ஒரு பாரம்பரியத்தை, ஒரு தொடர்ச்சியை, தலைமுறைகளுக்கிடையிலான ஒரு பிணைப்பை, பின்னணியை ஏற்படுத்துகின்றது. எமக்கு முன்னர் நடந்தவை அனைத்தும் எமது இன்றைய வாழ்க்கைக்கு ஏதோ வழியில் ஒரு களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றன. எமக்கு முன்வந்து சென்ற அனைவரும் எமது இன்றைய வாழ்க்கைக்கு ஏதோ ஒரு வழியில் அனுபவங்களை அள்ளித் தந்து விட்டுச் சென்றவர்களாக அமைகின்றார்கள். இவை அனைத்துஞ் சேர்ந்துதான் இன்று எமக்கு ஒரு பாரம்பரியத்தை விளக்கி நிற்கின்றன இவ்வாறு வந்து சென்ற நிகழ்வுகளும், நிஜமனிதர்களும் இதற்குச் சான்றாகும்.

பாடசாலைகள், கல்லூரிகள் போதிய கட்டட வசதிகளையும் விளையாட்டுத்திடல் வசதிகளையும் நவீன விஞ்ஞான கலைக்கூட நவீன உபகரண வசதிகளையும் கொண்டிருத்தல் அவசியம். இது சம்பந்தமான அபிவிருத்திகள் அண்மைக் காலங்களில் நடந்து வருவது கண்கூடு.

போரினால் பாதிக்கப்பட்ட இடங்கள் என்ற ரீதியில் பல தரப்பட்ட நிறுவனங்களும் வெளிநாடுகளும் ஐக்கிய நாடுகள் சம்பந்தமான நிறுவனங்களும் எமக்கு உதவி செய்ய முன்வந்துள்ளன. அவற்றை அரசு ஏற்று எமக்கு வழங்க வேண்டிய ஒரு கடப்பாட்டில் உள்ளது. இந்தக் கைங்கரியத்தில் அரசியல் நுழைவதால் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. யாரோ தரும் பணத்தை யார் யாரோ பாதிக்கப்பட்ட அல்லது பயன் பெற இருப்போர் சார்பில் செலவழிக்க இடையிலுள்ள நாங்கள் அரசியலைப் புகுத்துவதால் எவர் எவரையோ அண்டி வேண்ட வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அரசியலானது கொள்கைகள் சம்பந்தமாக இருக்கலாம். நடைமுறைப்படுத்தல் சம்பந்தப்பட்ட விடயங்கள் அலுவலர்களிடமே வழங்கப்பட வேண்டும். அலுவலர்கள் தமது சொந்த நன்மைகளுக்காக அரசியல் வாதிகளுக்குச் சார்பாக நடந்து கொள்வது எமது மக்களின், எமது பிரதேசத்தின் நல்வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும்-என்றார். (த)

## வன்னியில்

ளின் ஏகோபித்த வாக்குகளைப் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை 'வைக்கோல் பட்டடை நாய்' என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விமர்சித்துள்ளமையானது அனைத்து தமிழர்களையும் அவமதிப்பதற்கு சமனானது என்றும் அது நேற்று சாடியது. கொழும்பில் நேற்று நடைபெற்ற 'அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படு' அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரை யாற்றியபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாளக்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் சில தீவுகளுக்கும் அவர் இதன் போது விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்பின்னர் யாழ்தேவியின் வருகை உள்ளிட்ட சில முக்கிய நிகழ்வுகள் அரசினால் அங்கு நடத்தப்பட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றில் கலந்து கொள்ளாது புறக்கணித்தது.

இதற்கான காரணத்தை வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கடிதம் மூலம் தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைக்கான அதிகாரம், தமிழர்களின் உரிமை என பல விடயங்களை காரணம் காட்டியே அக்கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது.

ஆனால், வடக்கில் ஜனாதிபதி மஹிந்த பேசும் போது, இக்கடிதம் குறித்தோ அல்லது எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்தோ ஒரு வார்த்தையேனும் பேசவில்லை.

மாறாக மிக கீழ்த்தரமான முறையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை 'வைக்கோல் பட்டடை நாய்கள்' என வர்ணித்துள்ளார்.

வடமாகாணத்தில் 90 வீதத்திற்கும் அதிகமான தமிழர்களின் ஏகோபித்த வாக்குகளைப் பெற்ற கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இப்படியானதோர் கட்சியை இவ்வாறு வர்ணிப்பதானது ஒட்டு மொத்த தமிழர்களையுமே கேவலப்படுத்துவதற்கு சமமாகும்.

இது ஜனாதிபதியின் மிகவும் கேவலமான தேர்தல் பிரசாரமாகவே கருதப்படுகிறது. இதனை சிங்கள மக்கள் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஜனநாயகம், சட்டம், மனிதம் ஆகியவற்றை புறக்கணிக்கும் இவரை தமிழர் மட்டுமன்றி சிங்களவர்களும் புறக்கணிக்க வேண்டும்" என்றார்.

அதேநேரத்தில், கிளிநொச்சியில் வைத்து கடந்த 13 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மக்களுக்கு வழங்கப்பட்ட தங்கம் குறித்து கருத்து வெளியிட்ட சுமந்திரன்,

"புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒருதொகை தங்கம் தற்போது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஆனால், யுத்தம் முடிவடைந்து சுமார் ஐந்தரை வருடங்களாக இத்தங்கம் எங்கே இருந்து என அரசு பதிலளிக்க வேண்டும்.

அத்தோடு, இவை இவ்வளவு காலமாக எதற்காக பயன்படுத்தப்பட்டன? யாருடைய பாதுகாப்பின் கீழ் இருந்தன? சொந்த வீட்டிலா வைத்திருந்தீர்கள்? ஆகிய கேள்விகளை நாம் ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகிறோம்.

மேலும், கையளிக்கப்பட்ட தங்கம் போக மிகுதி தங்கத்திற்கு என்ன நடந்தது என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விளக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறு மக்களின் தங்கத்தை இவ்வளவு காலம் மறைமுகமாக வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே, ஜனாதிபதி இந்தக் குற்றத்திற்கு முகம் கொடுக்க தயாராக உள்ளாரா?

மேலும், நாட்டின் ஜனாதிபதி மீது வழக்குத் தொடுக்க முடியாது என்ற பாதுகாப்புக் கவசத்தை கழற்றி வைத்து விட்டு எமது இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க வருமாறு நாம் சவால் விடுகிறோம்." என்றார்.

அதேநேரத்தில், இதில் கலந்து கொண்ட ஐக்கியத் தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அஸாத் சாலி, வைக்கோல் பட்டடை நாய் என்ற ஜனாதிபதியின் கருத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு, அனைத்து தமிழர்களிடமும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என வலியுறுத்தினார்.

## பல நாள்

வந்த குடும்பஸ்தர் ஒருவர் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

இவரை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வைத்து கைது செய்த பொலிஸார் 70 பவுண் தங்க நகைகளையும் தண்ணீர் இறைக்கும் 35 மோட்டார்கள், பெருந்தொகையான புட்வால்வுகள் உட்பட பல இலட்சம் ரூபா பெறுமதியான பகைப்பட்ட பொருள்களைப் பல இடங்களிலிருந்து கைப்பற்றியதுடன் நண்பன், மனைவி, காதலி ஆகியோரையும் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர். இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாகக் குடாநாட்டில் இடம்பெற்றுவந்த திருட்டுக்கள், கொள்ளைகள், வழிப்பறிகள் போன்ற குற்றச் செயல்கள் தொடர்பாக சந்தேகத்தின் பெயரில் மானிப்பாய் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 36 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தை பொலிஸாரின் கண்ணின் அகப்படாமல் தலைமறைவாக வாழ்ந்து வந்தார்.

இவரின் நடமாட்டம் குறித்து மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி. றொகான் மகேஷ் தலைமையில் புதுக்குடியிருப்புக்குச் சென்ற பொலிஸார் புதுக்குடியிருப்புப் பொலிஸாரின் உதவியுடன் தலைமறைவாக வாழ்ந்து வந்த இவரை கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோது குடாநாட்டில் பல மாதங்களாக பல இடங்களில் இடம்பெற்ற திருட்டுக்கள் போன்ற குற்றச் செயல்கள் அம்பலத்திற்கு வந்தன.

சந்தேக நபர் வழங்கிய தகவல்களைத் தொடர்ந்து திருடப்பட்ட தங்க நகைகளில் 70 பவுண் எடையுள்ள தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, மோதிரம் போன்ற நகைகளை அடகு வைக்கப்பட்ட, விற்கப்பட்ட இடங்களிலிருந்து உருப்படியாகவும் உருக்கிய நிலையிலும் மீட்ட பொலிஸார், 35 தண்ணீர் இறைக்கும் மோட்டார்கள், பெருந்தொகையான புட்வால்புகள், கைத்தொலைபேசிகள் உட்பட பல இலட்சம் ரூபா பெறுமதியான பலதரப்பட்ட பொருள்களை பல இடங்களிலிருந்து கைப்பற்றியதுடன் திருடப்பட்ட பொருள்களை விற்று வாங்கிய லொறி, மோட்டார் சைக்கிள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றையும் மீட்டனர்.

சந்தேக நபர் வழங்கிய தகவலை அடுத்து இந்தத் திருட்டுக்களுடன் தொடர்புடைய ஏழாலையைச் சேர்ந்த நண்பர் ஒருவரையும் சந்தேக நபரின் மனைவியையும் பொருள்களை விற்பதற்கு உடந்தையாக இருந்த காதலியையும் கைது செய்த பொலிஸார், நால்வரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (த-115)

## யாழ்.ரயிலால்

னால் ஆரம்பித்து வைக்கப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் கடுகதி ரயில் சேவை பிற்பகல் 1.45 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டது. இந்த ரயில் சேவையில் யாழ்ப்பாணத்தில் இருந்து 78 பேர் பயணித்துள்ளனர்.

அத்துடன் நேற்று முன் தினம் முற்பகல் 10.45 மணி வரை தரவுகள் இணைய வழியாக இணைக்கப்படாத காரணத்தால் முற்பதிவுகள் எதுவும் இடம்பெறவில்லை. எனினும் அதனைத் தொடர்ந்து மாலை 6 மணி வரை 350 இற்கும் மேற்பட்டவர்கள் கொழும்பு செல்வதற்கான முற்பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் ஒரே நாளில் 5 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமானம் யாழ்.ரயில் நிலையத்துக்குக் கிடைத்துள்ளது.

அதிகமானோர் கடுகதி ரயில் சேவைக்கான ஆசனங்களுக்கே முற்பதிவை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்.ரயில் நிலையத்தில் ரயில்கள் பயணிப்பு நேர அட்டவணை காட்சிப்படுத்தப்பட்டுள்ள போதும் கட்டண விபரங்கள் எதுவும் காட்சிப்படுத்தப்படவில்லை. (த-14-ரி)

## அதிகாலையில்

கில் வசிக்கும் ஓய்வு பெற்ற அதிபர் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

கொழும்பிலிருந்து வீட்டுக்கு வந்த மகனை மீண்டும் கொழும்புக்கு அனுப்புவதற்காக நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் வீட்டைப் பூட்டித் திறப்பை வழமை போல வைக்கும் இடத்தில் மறைத்து வைத்து விட்டு மகனுடன் தந்தை யாழ்ப்பாணம் சென்று விட்டார்.

இவர்கள் வீட்டை விட்டு வெளியேறியதை மறைந்திருந்து அவதானித்த திருடர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மறைத்து வைக்கப்பட்டிருந்த திறப்பை எடுத்து கதவைத் திறந்து உள்ளே சென்று வீட்டு அலுமாரிக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 15 பவுண் தங்க நகைகளையும் 15 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளார்கள்.

மகனை பஸ்ஸில் ஏற்றி விட்டு அரைமணி நேரத்துக்குள் வீட்டுக்குத் திரும்பி வந்த தந்தை சகல கதவுகளும் திறந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளானதுடன் உள்ளே சென்று பார்த்தபோது பணமும் நகையும் திருடப்பட்டது தெரியவந்தது.

இந்தத் திருட்டு பற்றி மானிப்பாய் பொலிஸில் புகார் செய்ததையடுத்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (த-115)

## ஜனாதிபதி

ணம் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-106)

## இனிக் கடவுள்தான்

யள் என்றாலும் சொந்த நிலத்தில வாழ வேணும்" என்றும் அந்த மக்கள் பிரிட்டன் பிரதித் தூதுவரிடம் குறிப்பிட்டனர்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வந்திருந்த இலங்கைக்கான பிரிட்டன் பிரதித் தூதுவர் லோறா டேவிஸ், சுன்னாகத்தில் அமைந்துள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்திற்குச் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார். அப்போது அங்குள்ள மக்கள் சிலரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

"இங்கு மக்கள் வாழ்வதற்கு மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கடந்த 4 வருடங்களாக எங்களுக்கான நிவாரணமும் நிறுத்தப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகுந்த சிரமமாக உள்ளது. மழை காலம் ஆரம்பிக்கவுள்ளது. மழை காலம் ஆரம்பித்தால் இங்கு வாழவே முடியாது. அத்துடன் மலசலகூட வசதிகள் இன்னமும் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. அடிப்படை வசதிகள் எதுவும் இங்கு சொல்லும்படியாக இல்லை.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி எங்கள் மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டோம். இன்று வரையில் விடுகின்றோம் விடுகின்றோம் என்று சொல்கின்றார்களே தவிர எதுவும் நடக்கவில்லை. இங்கு வரும் பலரிடமும் நாங்கள் எங்கள் நிலைமையைச் சொல்கின்றோம். எங்கள் நிலத்தை விடுமாறு கேட்கின்றோம். ஆனால் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

உயர்பாதுகாப்பு வலயக் காணிகள் ஒருவருக்கே (அரசுக்கு) தேவையென்றால், இங்கு நாங்கள் எத்தனை பேர் வசிக்கின்றோம். எங்களுக்கு எவ்வளவு காணிகள் தேவை. வேண்டுமானால் காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் விமானநிலையத்துக்குச் சொந்தமான காணிகளை சுவீகரிப்பு செய்யட்டும். எஞ்சிய காணிகளை விடுவிக்க வேண்டும்"- என்று அந்த மக்கள் பிரிட்டனின் பிரதித் தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோரும் பிரிட்டனின் பிரதித் தூதுவருடன் அங்கு சென்றிருந்தனர். (ற-5.21.86)

## வடக்கு

தனை மீளவும் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இராணுவப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்குக்குச் சென்றமைக்கும், வெளிநாட்டவர்கள் வடக்குக்குச் செல்வதற்கு அனுமதி பெறப்பட வேண்டும் என்று கொண்டு வந்த நடைமுறைக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் வெளிநாட்டவர்கள் வடக்குக்குச் செல்ல வேண்டுமாயின் இனி மேல் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு அவர்கள் முன் அனுமதி பெற்றால் அவர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் இராணுவம் வழங்கத் தயாராக இருக்கின்றது.

வடக்குக்குப் பெருமளவான வெளிநாட்டவர்கள் செல்கின்றனர். அவர்களில் பலர் அங்குள்ள மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் செல்கின்றனர். அவர்களில் மிகச் சொற்ப வீதத்தினர், அங்குள்ள மக்களிடையே இனக்குரோதத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்க முயல்கின்றனர்.

தேசிய பாதுகாப்பு இராணுவத்துக்கு முக்கியமானது. அதனாலேயே வடக்குக்குச் செல்லும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சில் முன்அனுமதி பெறப்பட வேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டு வந்துள்ளோம். 0112328109 என்ற தொலைநகல் இலக்கத்துடன் பாதுகாப்பு அமைச்சுக்குத் தொடர்பு கொண்டு, தமக்கான முன் அனுமதியை வெளிநாட்டவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்" - என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போர் முடிவடைந்து ஏ-9 வீதி மீளத் திறக்கப்பட்ட பின்னரும் இதே போன்றதொரு நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. அந்த நடைமுறை 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுடன் விலக்கப்பட்டிருந்தது. (ற-5)



சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட அரிமா சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஊர்வல நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் ஆரம்பமாகி தேவநாயகம் மண்டபத்தைச் சென்றடைந்தது. மட்டக்களப்பு தரிசனம் பாடசாலையுடன் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தின் முக்கியத்துவம் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர். இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் எஸ்.கிரிதரன், மாநகர சபை ஆணையாளர் எம்.உதயகுமார், அரிமா சங்க உயர் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். தேவநாயகம் மண்டபத்தில் மட்டக்களப்பு தரிசனம் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-10)

# மீள்குடியேறிய மக்களுக்கு குடிதண்ணீர்த் தாங்கிகள்

அம்பாறை, ஒக்.16

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட மீள்குடியேற்ற கிராமங்களான தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு கிராமமக்களுக்குகுடிதண்ணீரைசேமித்து வைப்பதற்கான குடிதண்ணீர் தாங்கிகள்நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமைவழங்கப்பட்டன. திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், 80 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் தாங்கிகள் வழங்கப்பட்டன. குடிதண்ணீர் தாங்கிகளை அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் மக்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில், பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அதிகாரிகளான ஆர். டபிள்யு. டபிள்யு. விஜயரத்ன, ஜெயதிஸ்ஸ துடுகல, அசேல திஸாநாயக்க, திருக்கோவில் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் எஸ்.ஜெய ரூபன், கணக்காளர் எம்.அரச ரெத்தினம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ)

# இலங்கையரை நாடு கடத்த மலேசிய அரசு தீர்மானம்

கோலாலம்பூர், ஒக்.16

மலேசியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையரொருவரை நாடு கடத்த அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அல்கெய்தா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மொஹமட் ஹுசைன் என்ற நபரே இவ்வாறு நாடுகடத்தப்படவுள்ளார்.

தமிழ் நாட்டிலுள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேல் தூதரகங்கள் மீது மனித வெடி குண்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய அரசும் இவரை தன்னிடம் ஒப்படைக்குமாறு மலேசியாவிடம் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தது.

இருப்பினும், அந்தக் கோரிக்கையைப் புறக்கணித்த மலேசிய அரசு அந்த நபரை இலங்கைக்கு நாடுகடத்த தீர்மானித்துள்ளது. இலங்கைப் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்புடன் அழைத்துவரப்படும் இவரை விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் பொறுப்பேற்கவுள்ளனர். மொஹமட் ஹுசைனை மீட்பதற்கு மலேசிய மனித உரிமைகள் அமைப்பொன்று முன்னெடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச புலனாய்வுத் தகவல்களின்படி ஹுசைன் என்பவர் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (வ)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 16

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இந்துசமய பொது அறிவுப்போட்டியில் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் முதலிடம் பெற்றவர்களுக்கும் அறநெறிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குமான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் திணைக்களப் பணிப்பாளர் நா.சாந்தி தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக புத்தசாசன மற்றும் மத அலுவல்களுக்கான பிரதி அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தனவும், கௌரவ விருந்தினராக அமைச்சின் செயலாளர் எம்.கே.பி. திசாநாயக்கவும் கலந்து கொள் வார்கள். (வ)

# முதலீடு செய்வோருக்கு ஆஸியில் வதிவிட உரிமை

ஆஸ்திரேலியாவில் குறைந்தது 13 மில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீடு செய்யும் செல்வந்தர்களுக்கு ஓர் ஆண்டுக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவிட உரிமை தரும் வகையில் குடிவரவு குடியகல்வு விதிகளை புதிதாக அறிமுகப்படுத்த ஆஸ்திரேலியா திட்டமிடுகிறது.



ஏற்கனவே அந்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்கை நான்காண்டு காலத்தில் ஆஸ்திரேலியாவில் முதலீடு செய்பவர்களுக்கு நாட்டில் வசிக்க உரிமை தரும் ஒரு திட்டம் நடைமுறையில் இருக்கிறது. அந்தத் திட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட அந்தத் திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியாவில் வெற்றி கரமாகக் குடியேறியவர்களில் 90 சதவீதத்தினர் சீனாவில் இருந்து வந்தவர்கள். ஆஸ்திரேலியா சட்ட விரோத குடியேறிகள் நாட்டுக்குள் வருவதைத் தடுக்கும் விதிகளை கடுமையாக்கியிருக்கும் அதே நேரத்தில் இந்தப் புதிய விதிகள் அறிமுகப்படுத்தப் படவுள்ளன. (வ)

## ஜப்பான் கண்காட்சியில் இலங்கையின் காட்சிக்கூடம்

டோக்கியோ, ஒக்.16

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஆரம்பமான கடொக்ஸ் 2014 வீட்டுத் தோட்டக் கண்காட்சியில் இலங்கையின் காட்சிக்கூடம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து இலங்கை ஏற்றுமதிச்சபை இந்தக் காட்சிக் கூடத்தை அமைத்துள்ளது.

நேற்று ஆரம்பித்த கண்காட்சி நாளை வரை நடைபெற வுள்ளது. இதில் இலங்கையின் உற்பத்திப் பொருள்களான தேங்காய் இலை கிளைகளுடன் கூடிய தாவரங்கள்- மற்றும் அழகிய இலைகளுடன் கூடிய தாவரங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் தேங்காய்- தேங்காய் நார் உற்பத்திகள்- தேங்காய் சிரட்டை உற்பத்திகள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கொரியா- சீனா- போன்ற ஆசிய நாடுகளுக்கிடையில் மிகப் பிரபலமான இந்தக் கண்காட்சியில் இலங்கை உற்பத்திகள் தொடர்பிலான காட்சிக்கூடம் மூலம் இந்த நாட்டின் உற்பத்திப் பொருள்களை ஏனைய நாடுகளுக்கும் அறிமுகப்படுத்த வாய்ப்புக் கிட்டியுள்ளது. (வ)

# மனித இனத்துக்கு ரோபோவால் ஆபத்து

## மஸ்க் எச்சரிக்கை



ரோபோக்கள் மனித இனத்தையே அழித்துவிடக் கூடிய அளவுக்கு ஆற்றல் படைத்தவை என்று ரொக்கெட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய மின்னியல் சாதனங்களையும் தயாரிக்கும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்றுஅதிகாரிஎலான் மஸ்க் கூறியுள்ளார்.

ரோபோக்கள், இயந்திரங்களுக்கு செயற்கை நுண்ணறிவுத் திறனை அளிப்பது மிக வேகமாக அதிகரித்துவருவதாகவும்ரோபோ, டர்மினேட்டர் உள்ளிட்ட ஆங்கிலப் படங்களில் ரோபோக்கள் மேற்கொண்ட செயல்கள் உண்மையிலேயே நடைபெற வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரோபோக்களுக்கு செயற்கை நுண்ணறிவை அளிக்கும் செயலால் ஏற்படும் விளைவுகள், அணு ஆயுதத்தை விட அபாயகரமானதாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (வ)

# விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.16

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் விசேட தேவைகள்சார் பட்டமேற் கல்வி டிப்ளோமாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று 19.11.2013 இற்கு முன்னர் நியமனம் பெற்று ஆசிரியர்களாக, அதிபராக, ஆசிரிய ஆலோசகர்களாக ஆசிரிய கல்வியியலாளர்களாக சேவையாற்றுவோர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை அடுத்த மாதம் 20ஆம் திகதி வரை பிறவுண்வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ் பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (வ-ரி)

## குற்றங்களும் கைதுகளும்

கொழும்பு

### சட்டவிரோதமாக வைத்திருந்த முத்துக்களுடன் ஐவர் பொலிஸில்

நீர்கொழும்பு பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் முத்துக்களை வைத்திருந்த 5 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவலை அடுத்தே குறித்த சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களிடமிருந்து 37 கிராம் 99 மில்லிகிராம் நிறைகொண்ட முத்துக்களை பொலிஸார் மீட்டுள்ளனர். பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

கிளிநொச்சி

### 13 போத்தல் கோடாவுடன் வசமாகச் சிக்கினார் பெண்

13 போத்தல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களைத் தம்வசம் வைத்திருந்த பெண் ஒருவரை திருவையாறு பகுதியில் வைத்து கடந்த 10 ஆம் திகதி பொலிஸார் கைது செய்துள்ளனர். கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் குறித்த பெண்ணை கடந்த திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தியபோது தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அந்தப் பெண்ணுக்கு ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (வ-18-)

கிளிநொச்சி

### 3போத்தல் கசிப்புடன் பெண் கைது

வட்டக்கச்சிப் பகுதியில் மூன்று போத்தல் கசிப்புடன் பெண் ஒருவர் கடந்த 8 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குறித்த பெண்ணை கிளிநொச்சி நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தியபோது அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் நீதிவான். (வ-18)



## யாழ்ப்பாண வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு
## உங்கள் நகரில் கணக்கிட முடியாத இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

யாழ்ப்பாண யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் முலாம் பூசப்பட்ட, ஆஸ்திரேலிய வைர நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.

உரிய ஏற்றுமதி விலையான ரூ. 1500/= - 3000/= வரையிலான நகைகளுக்கு

## ரூபாய் 200/=, 400/= மட்டுமே

**நான்கு நாள்கள் மட்டுமே. 16, 17, 18, 19 ஒக்ரோபர் 2014**

**நேரம் : 10.00am - 08.00pm**

ரூ.200/= உம் ரூ. 400/= இக்கும் விற்பனை செய்யும் ரூ.3000/= ஏற்றுமதி பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்.

இந்த விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

★ மும்பாய் தங்க முலாமிடப்பட்ட வளையல்கள் - 200/= மட்டும்
★ ஹைட்ராபாய் முத்து வளையல் - 200/= மட்டும்
★ மேல்நாட்டு மாதிரியிலான தோடுகள் - 200/= மட்டும்
★ ஆஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் - 200/= மட்டும்
★ ஆஸ்திரேலிய டயமன்ட் டொப்ஸ் - 200/= மட்டும்
★ சுஹகன் தங்க முலாமிடப்பட்ட வளையல்கள் - 200/= மட்டும்
★ பஞ்சாப் பியூட்டி குயின் மாலை - 400/= மட்டும்
★ அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் - 400/= மட்டும்
★ கிரிஸ்டல் நெக்லஸ்செட் - 400/= மட்டும்
★ ஹைட்ராபாய் முத்து நெக்லஸ் செட் - 400/= மட்டும்
★ இத்தாலிய டயமன்ட் தோடுகள் - 400/= மட்டும்
★ ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் - 400/= மட்டும்
★ ஜய்பூரி குண்டன் நெக்லஸ் செட் - 400/= மட்டும்
★ ஆஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் - 400/= மட்டும்
★ சிபாரா தங்க முலாமிடப்பட்ட மாலை - 400/= மட்டும்

விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூ. 500/=, ரூ. 10,000/= வரை விசேட ஆபரணங்கள்.

**காட்சிப்படுத்தும் இடம் :**

## நல்லூர் மயிலூரான் அரங்கம் திருமண மண்டபம்

இல.590/5, பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தசுவாமி கோயில் தெற்கு வீதி,)
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 075 507 5675

அனுமதி இலவசம். வாகனத்தரிப்பிட வசதி உண்டு.

விற்பனைப் பெண் பிரதிநிதிகள் தேவை.

(53253)(5.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.